
கல்கி
KALKI
13-7-1958
30
நயா
பைசா

போர்ஹான்ஸ் டூத்பேஸ்டை பல் வைத்தியர்கள் ஏன் சிபார்சு செய்கிறார்கள் என்பதற்கான விஞ்ஞான முறை காரணங்கள்



போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட்

1. **போர்ஹான்ஸ் ஈறுகளை ஆரோக்கியத்துடன் வைக்கிறது:** உங்கள் ஈறுகள் அரிக்கப்பட்டு, ஆரோக்கியமில்லாமல் இருந்தால், உங்கள் பற்கள் விழுந்துவிடும் என்று பல் வைத்தியர்கள் சொல்லுவார்கள். ரத்தம் கசியும் ஈறுகள், வீங்கிய ஈறுகள், புண்ணுள்ளதும், கூசும் ஈறுகள் இவைகளுக்கு போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் கொண்டு இலேசாகத் தேய்க்கவேண்டும். அவைகள் உடனேயே கெட்டியான ஆரோக்கிய நிலைக்கு வந்துவிடும். போர்ஹான்ஸ் டூத்பேஸ்டில் மட்டுமே, டாக்டர் ஆர். ஜே. போர்ஹான்ஸ் பக்குவப்படுத்திய பல நோய்களிலிருந்து விசேஷ பாதுகாப்பு அளிக்கும் துவர்ப்பு பொருள்கள் சேர்ந்துள்ளன. இதனால்தான் போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட், ஈறுகள் சம்பந்தமான கொடிய நோய்களிலிருந்து சிறந்த பாதுகாப்பு அளிக்கும்.

2. **போர்ஹான்ஸ் பல் சொத்தையை அகற்றுகிறது.** விசேஷ துவர்ப்பு பொருள் கொண்ட போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் கொண்டு அன்றாடம் பல் விளக்கினால், சொத்தைக்குக் காரணமான கிருமிகள் முற்றிலும் அழிந்துவிடும். இந்தியாவில் சமீபத்தில் நடைபெற்ற போர்ஹான்ஸ் போட்டியில், முற்றிலும் திடமாயும் ஆரோக்கியமாயும் பற்களுள்ள 45-லிருந்து 93-வயதிற்குட்பட்டவர்களும்கூட கலந்து கொண்டனர். தங்களுடைய பற்களின் சிறப்பிற்கு, தாங்கள் அன்றாடம் தவறாமல் போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட உபயோகித்து வருவதே காரணமென, அவர்கள் யாவரும் கூறினர்.

3. **போர்ஹான்ஸ் எனாமல் சிதைவைத் தடுக்கிறது:** போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட், பற்களின் எனாமல் சிதையவிடாமல், பற்களை அவைகளின் இயற்கை நிலையில் வைப்பதுபோல், சுத்திகரிக்கும் குணம் வாய்ந்த வழுவழுப்பான டூத்பேஸ்டாகும். பற்களின் ஆரோக்கியத்தைத் தவறாமல் பேணிவருவதன் மூலம், உங்கள் புன்னகையை ஒளி வீசச் செய்யலாம். போர்ஹான்ஸ் டூத்பேஸ்டை அன்றாடம் தவறாமல் உபயோகியுங்கள்.

4. **போர்ஹான்ஸ் கிருமிகளை அழிக்கிறது:** போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட், வாய் நாற்றத்தை அகற்றி, உங்கள் வாயை முற்றிலும் சுத்தமாக வைக்கும். வாய்க்கு நறுமணமூட்ட, உங்கள் நாக்கும், மேல்வாயும்கூட சுத்தமாக இருக்கவேண்டுமென்பதை ஞாபகத்தில் வையுங்கள். உங்கள் நாக்கின் மீது சிறிது போர்ஹான்ஸ் டூத்பேஸ்டை வைத்து ஒரு டூத் பிரஷ் அல்லது விரலினால், மிருதுவாய் குழப்பவும் போர்ஹான்ஸ் டூதபேஸ்ட் உணவுத் துணுக்குகள் மற்றும் கிருமிகளை விரைவில் அகற்றும்.



ஒரு பல் வைத்தியரால் தயாரிக்கப்பட்டது

GEOFFREY MANNERS & CO.
PRIVATE LTD.

H. 115

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


10 Cigarettes 10
MADE IN INDIA
PLAYER'S
"MEDIUM" NAVY CUT
Player's Please
NAVY CUT MEDIUM
CIGARETTES
Rs. 3.80 nP. per tin of 50, 75 nP. per packet of 10
Issued by The Imperial Tobacco Company of India Limited



மலர் 17 இதழ் 50	தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.	விளம்பி௵ ஆனிமீ 29உ

'ஸ்டாக்ஹோம்' மகாநாடு!

ஐரோப்பாவில் ஸ்விடன் தேசத்து ராஜதானியில் மிக முக்கியமானதோர் உலக மகாநாடு நடைபெறப் போகிறது. அதற்குப் படித்தவர் படியாதவர், ஆண் பெண், பெரியவர்கள் சிறியவர்கள் ஆகிய அனைவரும் கவனம் செலுத்தி ஆதரவு அளித்து, உலகத்தை உய்யச் செய்ய வேண்டும்.

இதுவரையில் கற்பனையிலும் நினைத்தறியாத பேராபத்தில் இன்று உலகம் சிக்கிக் கொண்டிருக்கிறது.

புராதன காலங்களில் யுத்தம் என்றால் தர்மத்தின் அடிப்படையில் நடைபெற்று வந்தது. வில்லேந்தியவன் வில்லேந்தியவனோடும், கதை ஏந்தியவன் கதை ஏந்தியவனோடும், தேரில் ஏறியவன் தேரில் ஏறியவனோடும் சம பலமுள்ளவனா என்பதை அறிந்து சண்டை போட்டு வந்தார்கள். இப்படித்தான் மகாபாரத யுத்தம் நடைபெற்றது. அதிலும் அதர்ம யுத்தம் நடைபெறாமல் இல்லை. ஒரோர் சமயம்தான் அப்படி நடைபெற்றது.

அதற்குப்பின் வந்த அசோகன், சமுத்திரகுப்தன் முதலிய பேரரசர்கள் காலத்திலும் யுத்தம் என்றால் யுத்தகளத்தில்தான் நடைபெறும். வயலிலும் வரப்பிலும் வேலை செய்த மக்கள் நிம்மதியாக வேலை செய்வார்கள். மற்றத் துறைகளில் இருப்பவர்கள் அவரவர்கள் வேலையை நிம்மதியாகச் செய்வார்கள்.

இப்படியிருந்த காலம் போய், யுத்தம் என்றால் போர்வீரர்கள் மட்டுமின்றிச் சாதாரண மக்களையும் பாதிக்கும்-துன்புறுத்தும் முறைக்கு வந்துவிட்டது.

தற்கால யுத்த முறை என்றால் ஒரு தேசத்தினர், மற்றத் தேசத்தினர்மீது வானத்திலிருந்து கொண்டு குண்டுமாரி பொழிவது என்றாகிவிட்டது. இதன் பயனாக யுத்தம் என்றால், ஒரு பாவமும் அறியாத ஆண் பெண் குழந்தைகளையும் அவர்கள் வசிக்கும் கட்டடங்களையும், தொழில் செய்யும் ஆலைகளையும், கடைகளையும் கண்ணிகளையும் ஆடு மாடுகளையும் அழித்துவிடுவது என்ற முறையில் சண்டை செய்வதுதான் யுத்தம் என்றாகிவிட்டது. சென்ற மகாயுத்தம் அப்படித்தான் நடந்தது.

ஹிட்லர் அழித்த நகரங்களுக்குக் கணக்கில்லை; 'நேச தேசத்தினர்' அழித்த ஜெர்மானிய நகரங்களுக்கும் கணக்கில்லை!


இப்படிப் பயங்கரமான யுத்தம் நடத்தி வந்தபோது, "மீண்டும் சமாதானம் தோன்றாதா? இந்த யுத்தம் ஓயாதா!" என்று உலகம் ஏங்கியது. ஒருவாறு சண்டை ஓய்ந்து, சமாதானம் ஏற்பட்டது. சமாதானம் ஏற்பட்டுப் பன்னிரண்டு வருஷ காலமாகிவிட்டது! இந்தப் பன்னிரண்டு வருஷ சமாதான காலத்துக் கவலைகளை நினைக்கும் போது யுத்த காலமே தேவலை என்று உலக மக்கள் நினைக்கத் தொடங்கி விட்டனர்.

** ** ** **

சென்ற யுத்தம் முடியும் தறுவாயில் அமெரிக்கா ஜப்பான்மீது புதியதோர் குண்டைப் போட்டு வெடித்தது. அதிலிருந்து, அணுகுண்டின் நாசகரமான சக்தி எவ்வளவு என்று வெளியாகியது! அமெரிக்கா இந்த நாசகர குண்டுகளைச் செய்து கொண்டு போயிற்று. யுத்தம் நின்றாலும் அதை நிறுத்தவில்லை. ரகசியமாகச் செய்து வந்தது. ஆனால் ருஷ்யாவுக்கு ரகசியம் தெரிந்துவிட்டது. அவர்களும் செய்ய ஆரம்பித்தார்கள்.

அதன்பிறகு அணுகுண்டுகளைச் சிருஷ்டிக்கும் போட்டி அமெரிக்காவுக்கும் ருஷ்யாவுக்கும் தொடர்ந்து நடைபெற்று வந்தது!

சண்டிக் குதிரை!



''இது என்ன பரிதாபம்! உலக வல்லரசுகளின் மகா நாட்டுக்கு, அமெரிக்காவை சென்னை ஜட்கா வண்டியைப் போல் பலாத்காரமாக இழுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது!'' என்கிறார் ராஜாஜி.

''ருஷ்யாவின் கம்யூனிஸ ஆதிக்கம் உலகில் பரவாமல் தடுக்க இந்த அணுகுண்டுகளும் ஜலஜ குண்டுகளும் தேவையாக இருக்கின்றன. இந்த ஆபத்திலிருந்து உலகைக் காப்பாற்ற நாங்கள் ஜலஜ குண்டுகளைச் செய்து வருகிறோம்!'' என்று அமெரிக்கா சொல்லி வந்தது.

''அமெரிக்கா தனது படை பலத்தைப் பெருக்கிக் கொண்டே வந்தால், ஒரு நாள் அது எங்கள் மீது படையெடுக்காது என்பது என்ன நிச்சயம்? அதற்குச் சமமான பலம் அடைவதற்காகத்தான் நாங்கள் இந்த ஜலஜ குண்டுகளைச் செய்து வருகிறோம்!'' என்று ருஷ்யா கூறி வந்தது.

இப்படி இந்த இரு நாடுகளின் கொள்கைப் போட்டியின் காரணமாகவும், கம்யூனிஸத்தைக் கண்டு அமெரிக்காவின் பயத்தின் காரணமாகவும், அமெரிக்காவின் முதலாளித்துவ முறையைக் கண்டு ருஷ்யாவின் பயம் காரணமாகவும் அணுகுண்டு ஜலஜ குண்டுகள் உற்பத்தியும் சோதனைகளும் அதிகரித்து வந்திருக்கின்றன.

இதுவரையில் இந்த இருதேசங்களும் நடத்தியுள்ள அணு - ஜலஜ குண்டு சோதனைகள் காரணமாக உலகில் பெருமளவு காற்றும் நீரும் விஷ மயமாகி யிருக்கின்றன.

அதிலும் இந்த இரு தேசங்களும் நிகழ்த்தும் சோதனைகள் ஆசியாவைத்தான் அதிகமாகப் பாதித்திருக்கின்றன.

அமெரிக்காவும், பிரிட்டனும் பசிபிக் மகா சமுத்திரத்தில் நடத்தியுள்ள சோதனைகள் காரணமாக, ஜப்பானிய மக்கள் படும் கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. ஜப்பானியர் உண்ணும் மீன்களும், காய்கறிகளும் விஷ மயமாகிவிடுகின்றன. ஜப்பான் தேசத்து மக்கள் ''இந்தச் சோதனைகளை நிறுத்துங்கள், நிறுத்துங்கள். எங்கள் வாழ்வு வாழக் கூடியதாக இல்லை'' என்று அலறுகின்றனர்.

இந்தோனீசியத் தலைவர், ''உங்கள் விஷ குண்டு சோதனைகளால் பரவும் விஷம் எங்கள் வீட்டுக் கொல்லையில் மண்டிக் கிடக்கிறது!'' என்று எழுதியிருக்கிறார். இந்தோனீசியத் தலைவர் சுகர்ணேவின் கடும் எச்சரிக்கையைச் சென்ற வாரம் தலையங்கத்தில் நேயர்கள் பார்த்திருப்பார்கள்.

இதைத் தவிர உலகிலுள்ள பெரிய பெரிய விஞ்ஞானிகள், நோபல் பரிசு பெற்றவர்கள் எல்லாம் இந்தகுண்டுகள் பரப்பும் விஷத்தைப் பற்றியும், இவை மனித இனத்துக்கு இழைக்கும் பெரும் தீங்குகளைப் பற்றியும் பல தடவைகள் எடுத்துச் சொல்லி விட்டனர்.

உலகில் பேர்விஞ்ஞானிகள் என்று பாராட்டப்பட்ட 9625 விஞ்ஞானிகள் இந்தச் சோதனைகளால் ஏற்படக் கூடிய ஹானிகளை எடுத்துரைத்துச் சோதனைகளை நிறுத்தும்படி வேண்டிக்கொண்டனர். நிறுத்தப்படவில்லை.

அதற்குப் பதிலாகச் சமாதானம் சொல்லப் பார்க்கிறார்கள். இச்சோதனைகளால், பரவும் விஷம் மிக மிகக் கொஞ்சம் என்று வல்லரசுத் தலைவர்கள் சொல்லி மழுப்பப்பார்க்கிறார்கள். ஆனால் இன்றைய உலகம், இவர்கள் மழுப்பலுக்கு ஏமாந்துவிடத் தயாராக இல்லை. அரசியல் வாதிகள் சொல்வதைத் தள்ளி விட்டு விஞ்ஞானிகளின் எச்சரிக்கையைத்தான் உலகம் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இன்று பரவியுள்ள விஷம் இன்றைய மக்களைக்கூடப் பாதிக்கவில்லை. ஆனால் இன்றைய மக்களின் உடல்களில்புகுந்து,எலும்புகளிலும், ஜனனேந்திரியங்களிலும் தங்கி நாளை பிறக்கும் குழந்தைகளுக்கும், அந்தக் குழந்தைகள் பெரியவர்களாகிப் பெறும் குழந்தைகளுக்கும் நிரந்தர ஹானி விளைவிக்கும் என்றுவிஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்கிறார்கள். கூனாகவும், குருடாகவும், புத்தி சுவாதீனமற்றதாகவும் இப்படிப் பலப்பல விகாரமுற்ற குழந்தைகளைப் பெறச் செய்யும் கொடிய விஷம் இந்தச் சோதனைகளால் பரவுகிறது என்று ஓயாமல் பௌதிக சாஸ்திரத்திலும், பிராணி சாஸ்திரத்திலும் நிபுணத்துவம் அடைந்தவர்கள் எச்சரிக்கை செய்து வருகிறார்கள்!

கம்யூனிஸ ஆபத்தைக் கண்டு அமெரிக்கா பயப்படுவது உண்மை. ஆனால், வல்லரசுகள் பரப்பிவரும் அணுச்சேத விஷத்தினால் உண்டாகி யிருக்கும் ஆபத்தும், அதனால் உலகம் முழுதும் ஏற்பட்டிருக்கும் பயமும் அமெரிக்காவின் பயத்தைவிட மிகப் பெரிதாகும். அமெரிக்காவின் வியாதிக்குச் செய்துவரும் மருந்தானது உலகம் முழுதுக்கும் கொல்லும் வியாதியாகி வருவதைப் பற்றி ஸ்டாக்ஹோம் மகாநாட்டில் எடுத்துப் பேசுவார்கள்.

இதுவரையில் நடந்த சண்டைகளில் அங்கிருந்த மக்கள்தான் இறந்தார்கள். அல்லது தங்கள் கையும் காலும் இழந்தார்கள். ஆனால் சண்டையை விட இந்தச் சமாதான காலத்தில் வல்லரசுகள் செய்துவரும் காரியங்கள் மிகப் பயங்கரமாக இருக்கின்றன.

இவற்றையெல்லாம் உணர்ந்து நல்லவேளையாக ருஷ்யா, தனது சோதனைகளை நிறுத்தி விட்டது. பிறரைக் கேளாமலே ஒருதலையாக நிறுத்தியிருக்கிறது.

இனியும் அமெரிக்கா தனது சோதனைகளை நடத்தி வருகிறது. இது சிறிதும் நியாயமல்ல. பிரிட்டனும் தொடர்ந்து நடத்தி வருகிறது. பிரான்ஸ், ஜெர்மன் முதலிய தேசங்களிலும் அணு ஆயுதங்களை அமைக்கப் போவதாகப் பேசப் படுகிறது. இவையெல்லாம், நல்ல அறிகுறிகளாகத் தோன்றவில்லை. உலகில் பெருங் கவலையும் பீதியும் உண்டாகியிருக்கின்றன. இந்தக் கவலையின் காரணமாகத்தான் ஸ்டாக்ஹோமில் மகாநாடு கூடுகிறது.

உலகில் பல தேசங்களிலுள்ள புகழ்பெற்ற விஞ்ஞானிகள், அறிஞர்கள், தத்துவப் பேராசிரியர்கள், அரசியல் சிந்தனையாளர்கள் அனைவரும் வல்லரசுகளுக்கு "நிறுத்துங்கள்" என்று ஸ்டாக்ஹோம் மகாநாட்டில் குரல் கொடுக்கப் போகிறார்கள்! இதில் அணுகுண்டுகளைப் பெறாத நடுநிலைமை வகிக்கும் நாடுகள் எல்லாம், தங்கள் மக்களின் நலனில் அக்கறை கொண்டு தங்கள் அரசாங்கப் பிரதிநிதிகளை அனுப்பி இக்குரலுக்குப் பலமளிக்க வேண்டும். இது கட்சிப் பிரச்னையல்ல; கொள்கைப் பிரச்னையல்ல. இவ்வுலகில் மனித குலம் நல்லபடியாக வாழ வேண்டுமா? வேண்டாமா? என்பதே இன்று பிரச்னையாகி விட்டது. ஆகவே, நம்முடைய நாட்டில் மூலை முடுக்கிலுள்ள ஒவ்வொரு இந்தியப் பிரஜையும் இப் பிரச்னையில் விழிப்புடன் இருந்து வல்லரசுகளை உலக மக்களின் அபிப்பிராயத்துக்குப் பணியச் செய்ய வேண்டும்!

ஸ்டாக்ஹோமில் இந்த மகாநாடு நடைபெற்ற பிறகு அடுத்தாற்போல் ஜப்பானில் ஒரு உலக மகாநாடு நடைபெறப் போகிறது.

பாரத மக்கள் ஆங்காங்கே பெருங் கூட்டங்களாகக் கூடி, தீர்மானங்கள் நிறைவேற்றி இந்த இரண்டு உலக மகாநாடுகளுக்கெல்லாம் அனுப்ப வேண்டும். பாரதப் பிரதமர் நேருஜி இவ்விஷயத்தில் மிகத் தெளிவாகவும், உறுதியுடனும் இருக்கிறார். அவரது குரலைப் பலப்படுத்த வேண்டியது ஒவ்வொரு இந்தியருடைய கடமை!

ஆசியப் பொதுஜன அபிப்பிராயத்துக்கு அமெரிக்க சர்க்கார் நிச்சயம் மதிப்பு அளித்தே தீருவார்கள்.

உலகத்துக்கு மகத்தான சேவை புரியவேண்டிய காலம் நம் மக்களுக்கு வந்திருக்கிறது!

பாரதநாட்டின் இன்றையப் பொருள் நிலையும்

அதன் முக்கிய அம்சமாகிய

அந்நியக் கடனும் அவற்றின் விளைவும்

என்ற விஷயம் பற்றிய ஆராய்ச்சி அரங்கம் இந்த இதழ் ஒன்பதாம் பக்கத்தில் ஆரம்பமாகியிருக்கிறது. இந்த ஆராய்ச்சி அரங்கத்தில்

அடுத்த வாரம்

டாக்டர் பி. ஆர். ஷெனாய், திரு பி. வி. நாராயண ரெட்டி

திரு சித்ரா நாராயணசாமி

ஆகிய மூன்று அறிஞர்களும் கலந்து கொள்கிறார்கள்

காரிருளில் ஒரு மின்னல்

இலங்கை பார்லிமெண்ட் கூட்டத்தில் சிங்களவர்களிலும் சிலர் உண்மையை எடுத்து எச்சரிக்கை செய்பவர்கள் இருக்கிறார்கள் என்பதைச் சமீபத்தில் பார்த்து மகிழ்ந்தோம்.

பார்லிமெண்ட் அங்கத்தினர்களான ஸ்ரீ கொத்தலாவலாவும் ஸ்ரீ அனில் முனிசிம்மாவும் பேசியதின் சுருக்கம் தமிழ் நாட்டுத் தினப் பத்திரிகைகளில் பின்வருமாறு வெளியாகி யிருக்கிறது.

" ஸ்ரீ கொத்தலாவலாவும், ஸ்ரீ அனில் முனிசிம்மாவும் சமீபத்தில் நடைபெற்ற கலவரங்களுக்குச் சர்க்கார் கட்சிதான் பெருமளவுக்கு ஜவாப்தாரி என்றனர்.

" சர்க்கார் கட்சியை நோக்கி, ஸ்ரீ கொத்தலாவலா பேசுகையில், மனமாற்றம் ஏற்பட்டு, கொள்கையை மாற்றிக் கொள்ளா விட்டால் நாட்டில் ஒருநாளும் அமைதி ஏற்படாதென எச்சரித்தார்.

"பௌத்தர்கள் என்று சொல்லிக் கொள்பவரான சர்க்கார் ஆதரவாளர்கள் ஒருவரும் கலவரங்களின்போது நடந்த செயல்களைக் கண்டிக்கவில்லை. உண்மையில் இந்த ஆசாமிகள் ரேடியோ மூலம் கலகத்தைத் தூண்டி விட்டனர் என்று ஸ்ரீ கொத்தலாவலா குற்றம் சாட்டினார்.

" தம் பேச்சின் இறுதியில் சிங்களத்துடன் தமிழுக்குச் சம அந்தஸ்து வழங்குவதுதான் மொழிப் பிரச்னைக்குப் பரிகாரம் என்று வற்புறுத்தினார்."

இலங்கையில் தமிழர்களின் நியாயமான கோரிக்கையையும் நிலையையும் உணர்ந்து பேசிய இவர்களுக்கு நன்றியும் பாராட்டுதலும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கை சர்க்காரும் கல்கியும்

சென்ற ஜூன் மாதம் பதினைந்தாம் தேதி இதழின் கல்கி தலையங்கப் பகுதியைக் கிழித்து விட்டு விநியோகிக்கும்படி, நமது கொழும்பு ஏஜண்டுகளுக்கு இலங்கை சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருந்தார்கள்.

இலங்கை சர்க்காரின் இவ்வளவு விசேஷ கவனத்துக்குப் பாத்திரமான விஷயம் அதில் என்ன இருந்தது என்று அறிய நேயர்களுக்கு ஆவல் இருக்கலாம். அது ராஜாஜி இலங்கை மக்களுக்கு என்று அளித்த அறிக்கை.

சாந்தியும் சமாதானமும் நிலவவேண்டும் என்று தலைவரிடமிருந்து வெளியான அறிக்கையில் இலங்கை சர்க்கார் ஆட்சேபிக்கும்படியாக என்ன இருந்தது என்று தெரியவில்லை.

இலங்கை சர்க்கார் அப் பகுதியை எடுத்து விட்டு விற்கச் செய்தது மிகவும் பரிதாபப்பட வேண்டிய விஷயமாகும்.

என்ன காரணத்துக்காக ஜூன் 15ௗ 'கல்கி' தலையங்கப் பகுதியைக் கிழித்து விட்டுவிற்கும்படி உத்தரவுசெய்தார்களென்று இலங்கை சர்க்காரை கேட்டதற்கு அவர்கள் விடுத்திருக்கும் கடிதத்தின் சாரமாவது :

"இந்த நாட்டின் மக்களுடைய நன்மையைக் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டது. அது உங்கள் வாசகர்களின் பெருமதிப்பைப் பெற்றிருக்கும் உங்கள் பத்திரிகையின் அந்தஸ்தை எந்த விதத்திலும் குறைத்ததாக எண்ணலாகாது."

இவ்வளவு மரியாதையாக எழுதியதற்கு நன்றி செலுத்துகிறோம். ஆயினும் ஒற்றுமைக்கு உண்மையான வழியை ராஜாஜி எடுத்துக் காட்டியிருந்த தலையங்கத்தை இலங்கை சர்க்கார் தடுத்துவிட்டதைப் பற்றி வருந்தாமல் இருக்க முடியவில்லை.

அலையும் வலையும்

அலையின் மீது ஏறிச் செல்லுவோம்—கடலில்
வலையை வீசி மீனைப் பிடிப்போம்.
மீனைப் பிடித்து ஆடிவருகையில்—அவள்
மின்னலைப் போல் துவண்டு நிற்பாளாம்—இதழில்
புன்னகையும் தவழ நிற்பாளாம்.

அலைகடலில் ஏறிச் சென்று ஆழ்கடலில் வலையை வீசி மீன் பிடிக்கும் மக்களின் வாழ்க்கையில் பலப்பல இன்ப துன்பங்கள்.

இதோ ஒரு காதலன். அவன் மனத்தில், தன் காதலியைப் பற்றி என்னென்னவோ எண்ணிக் கொண்டு வருகிறான். புன்னகை மலரத் தன்னை அன்புடன் வரவேற்பாள் என்று எண்ணிக் கொண்டு வருகிறான்.

ஆனால் அவள் முகத்தில் புன்னகையைக் காணவில்லையே! ஒரு வேளை அவள் முகத்தில் பிரதிபலிப்பது கோபந்தானோ! அட, பாவமே! அவனுக்கு எவ்வளவு ஏமாற்றமாக இருக்கும்!

ஆனால் இந்தக் கோபம் புன்னகையாக மாறுவதற்கு எத்தனை நாழிகை வேண்டும்? காதல் உலகில் இதற்கெல்லாம் மணியும் நேரமும் பார்த்துச் சாத்தியமா? நிமிஷத்தில் கோபம் வரும். அடுத்த விநாடி அது மறைந்து புன்னகை தவழும்!

இத்தகைய காதல் நீடுழி வாழட்டும் என்றுதானே வாழ்த்தத் தோன்றுகிறது.

இந்த இனிய காட்சியை இவ்வார அட்டைச் சித்திரமாக வழங்குகிறார் ஓவியர் வினு!

அருள் வாக்கு

உலகத்திலே நாம் காணும் பொருள்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாக நமக்குத் தெரிகின்றன. சில ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகக் கூடத் தோன்றுகின்றன. ஆனால் யோகிகள் வேதம் சொல்வதுதான் உண்மை என்று உணர்ந்து, ''இவையெல்லாம் அந்த ஈசனுடைய தோற்றம்'' என்பார்கள்.

ஆனால் நமக்கோ எல்லாம் வெவ்வேறாகத்தான் தோன்றுகிறது. நாம் பார்ப்பது, கேட்பது எல்லாம் வெவ்வேறாயிற்றே: அப்படியிருக்க வேதம் சொல்வது நிஜமா? அல்லது நாம் காண்பதுதான் நிஜமா?

ஆசையும் சஞ்சலமும் அஞ்ஞானமும் இருக்கிறவர்களுக்கு இந்த உலகத்திலே இருக்கிறதெல்லாம் வெவ்வேறாகத் தோன்றும். ஆனால் ஞானிகள் இவை அனைத்தும் பரம்பொருளின் தோற்றம் என்பதை உணர்வார்கள்.

'புருஷம் மஹாந்தம்' என்பது புருஷ ஸூக்தம். ''மஹா விஷ்ணு: புவனானி விஷ்ணு:'' என்று எல்லாம் விஷ்ணு மயமாகச் சொல்லுகிறது விஷ்ணு புராணம்.

புத்த மதத்திலே தத்துவ விசாரணை பண்ணின ஞானிகளெல்லாம் கடைசியிலே ஒரு முடிவுக்கு வந்தார்கள். அவர்கள் கண்ட முடிவுக்குப் பெயர் 'சர்வ சூன்யம்.' அதாவது சர்வசூன்யம்தான் முடிவானது என்றார்கள். 'அந்த ஒன்றுமில்லாததுதான் தியானம் செய்யக் கூடியதுமாகும்' என்றும் சொன்னார்கள்.

ஆனால் கயிறு என்று ஒன்று இருந்தால்தானே பாம்பு என்பது தேகன்றுகிறது? அதனால் அப்படித் தோன்றுவதற்கு ஒன்று மூலமாக இருந்தால்தானே, அதன் அடிப்படையிலே பாம்பு என்ற தோற்றமும் உண்டாக முடியும்? ஆதி சங்கரர் இதை வைத்துக் கொண்டுதான் அநேக தத்துவ விஷயங்களை விளக்கியிருக்கிறார். அந்த முறையிலே பார்ப்போமேயானால், பௌத்தமதம் சொல்வது தவறு என்பது தெரிய வரும்.

மேலே சொன்ன அடிப்படையான தத்துவத்தை''த்தான் 'சத்தியம்' என்று நம்முடைய வேதம் சொல்லுகிறது. 'சத்தியம்' என்று ஒன்று இருந்தால்தான் 'அசத்யம்' என்பது தோன்றுகிறது என்று சொல்லியிருக்கிறார் ஆதிசங்கரர்.

ஆகையால், பரம்பொருள் என்று ஒன்று இருக்கிறபடியால்தான், அதன் தோற்றங்களை நாம் இந்த உலகில் பார்க்கிறோம். இவையெல்லாம் வெவ்வேறாக நமக்குத் தோன்றினாலும்கூட இவையெல்லாம் அந்த ஒரே ஈசனுடைய தோற்றம்தான்.

இதையேதான் தாயுமானவரும், ''அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்.......**அத்வைதமாய்**'' என்று பாடியிருக்கிறார்கள்.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்



விநியோகஸ்தர்கள்: ★ சென்னை நகரம், வட ஆற்காடு, தென் ஆற்காடு & செங்கற்பட்டு: பெல் பிக்சர்ஸ், சென்னை-2; ★ மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி: மதுரை பிலிம்ஸ் மதுரை; ★ திருச்சிராப்பள்ளி & தஞ்சாவூர்: ஜி. வி. எஸ். பிக்சர்ஸ், புதுக்கோட்டை கோயமுத்தூர் & நீலகிரி: சந்திரபிரபா பிக்சர்ஸ், கோயமுத்தூர்; ★ சேலம்: எம். ஏ. வி. பிக்சர்ஸ், சேலம்; ★ மைசூர்: மினர்வா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ், பெங்களூர்; ★ கேரளா கன்னியாகுமரி உள்பட: சீதா பிலிம்ஸ், கோட்டயம்; ★ சிலோன்: சிலோன் தியேட்டர்ஸ் லிமிடெட் கொழும்பு-2; ★ எப். எம். எஸ்.: எம். ஏ. பஸால் இலாஹி & கம்பெனி, சிங்கப்பூர்

பாரத நாட்டின் இன்றையப் பொருள்நிலை

நாம் சுதந்திரமடைந்தபின் சுகவாழ்வு வாழவும், நமது தேசிய வருமானம் பெருகவும், தொழில் வளர்ச்சி அபிவிருத்தி யடையவும், வாழ்க்கை நலன்கள் செழிக்கவும், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கூடுமானவரை நிறைவேற்றி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் வகுத்தோம். அதையும் நிறைவேற்றி வருகையில், நமது முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுவது போல் அன்னியச் செலாவணி நெருக்கடி 1957-ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து தோன்றியது.

சாதாரணப் பிரச்னையாக ஆரம்பித்து, முக்கியப் பிரச்னையாக மாறி, நெருக்கடி நிலைமையை அடைந்து நமக்குக் கவலை தரும் அளவுக்கு இது வளர்ந்து விட்டது. அத்துடன் நமது திட்டங்களின் அம்சங்களைக்கூட ஓரளவுக்குக் குறைத்துக்கொள்ள வேண்டிய நிலைமைக்கும் இது நம்மைக் கொண்டு வந்து விட்டது. குறைத்துக் கொண்டாலும் நெருக்கடி தீருவதாகத் தோன்றவில்லை. இப்போது மட்டும் அல்ல ; வருங்காலத்திலும் அடுத்த பத்து வருஷங்களுக்காவது இந்த அன்னியச் செலாவணிப் பிரச்னை நமக்குக் கவலை கொடுத்துக் கொண்டுதானிருக்கும் என்று விஷயமறிந்தவர்கள் எண்ணுகிறார்கள்.

இந்த நெருக்கடி எப்படி ஏற்பட்டது ? இரண்டாவது திட்டம வகுபபதில் போதிய தீர்க்கதரிசனம் இல்லையா ? அல்லது அதன் மதிப்புகள் எதிர்பார்க்கக்கூடாத வகையில் மாறிவிட்டனவா ? திட்டத்தில் காணாத புதிய செலவுகளால் இந்த நெருக்கடியான நிலைமை ஏற்பட்டதா ? அந்தச் செலவுகள் தவிர்க்க முடியாதனவா ?

இந்த நெருக்கடியைச் சமாளிக்கப பாரத சர்க்கார் கையாளும் முறைகள் என்ன ? அவை நெருக்கடியைக் குறைக்கத்தக்கனவா, அல்லது சிறிது காலம் வரை தள்ளிப் போடுவதற்கு மட்டும் உபயோகம் உள்ளனவா ? கொடுக்க வேண்டிய கடன்களை ஒத்திப் போடுவதாலும் புதிதாக வெளி நாடுகளில் கடன் வாங்குவதாலும் இந்த நெருக்கடியை இப்பொழுது சமாளித்தால், அவற்றின் வருங்கால விளைவுகள் என்ன ? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் சாத்தியப்படாமல் போய்விடுமா ?

இந்தப் பிரச்னைகளெல்லாம் நாட்டுக்கு மிகவும் முக்கியமானதால் அவைகளைப்பற்றித் தமது கருத்துக்களைக் கூறவேண்டுமென்று நாட்டின் பல பிரமுகர்களை வேண்டிக் கொண்டோம். அதற்கிணங்கி, டாக்டர் ஸி. பி. ராமசுவாமி அய்யர், டாக்டர் பி. எஸ். லோகநாதன், டாக்டர் பி. ஜே. தாமஸ், டாக்டர் பி. ஆர். ஷெனாய், தொழிலதிபர் ஸ்ரீ அனந்தராமகிருஷ்ணன், திரு வி. ஆர். மூர்த்தி, திரு சித்ரா நாராயணசாமி, திரு ஏ.டி. ஷராப், திரு எஸ். என். ஹாஜி, திரு பி.வி. நாராயண ரெட்டி, திரு மினு மஸானி, திரு மொரார்ஜி வைத்யா, திரு சி. எல். கோவாலா, திரு எம். ஆர். ஷராப், திரு வி. கே. ஆர். வி. ராவ், திரு க. சந்தானம் முதலியவர்கள் கட்டுரைகள் அனுப்பியுள்ளார்கள். இவர்களுடைய ஆராய்ச்சி அரங்கு அடுத்த பக்கத்தில் ஆரம்பமாகிறது. இவ்விவாத அரங்கு அடுத்த சில வாரங்கள் தொடர்ந்து நடைபெறும் இப் புதிய அம்சம் நேயர்களுக்கு நல்விருந்தாக இருக்கும் என்று நம்புகிறோம்.

நம் நாட்டில் பொருளாதாரத் துறையில் முன் வரிசையிலுள்ள பேரறிஞர்களில் டாக்டர் பி. எஸ். லோகநாதன் முக்கிய ஸ்தானம் வகிக்கிறார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராக மூன்றாண்டுகளில் பணியாற்றியவர். புது தில்லியிலிருந்து வெளிவரும் "ஈஸ்டர்ன் எகானமிஸ்ட்" என்னும் வாரப்பத்திரிகையை ஆரம்பித்துப் பல ஆண்டுகள் அதன் ஆசிரியராகச் சிறப்புடன் செயலாற்றியவர். பொருளாதார இயல் தத்துவங்களைப் பின்னணியாகக் கொண்டு நடைமுறை விவகாரங்களை ஆராய்ச்சி செய்வதில் தனித் திறமை படைத்தவர். "ஈகாபே" என்னும் ஐக்கிய நாட்டின் தூரக் கிழக்குப் பொருளாதார ஸ்தாபனத்தின் நிர்வாகத் தலைவராகப் பல ஆண்டுகள் பதவி வகித்தவர். தற்போது பொருளாதார ஆராய்ச்சிக் கௌன்ஸில் தலைவராகத் தில்லியிலிருந்து செயல் புரிகிறார். சமீபத்தில் சென்னையில் விற்பனைவரி விஷயங்களை விரிவாக ஆராய்ந்து மக்களின் பாராட்டைப் பெற்றவர். இந்தப் பிரச்னையை அவருக்கே உரித்தான சிறப்புடன் ஆராய்கிறார். —ஆசிரியர்

பாரதத்தின் அந்நியக் கடன்

டாக்டர் பி. எஸ். லோகநாதன்

நமது அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றக் கணிசமான அளவில் பல பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டியது அவசியமாகிறது. யந்திரங்கள், யந்திர சாதனங்கள், உருக்குச் சாமான்கள், ரயில்வே பெட்டிகள், ரயில் என்ஜின்கள் முதலிய பல்வேறு முதலீட்டுச் சாமான்களும், பஞ்சு, ரசாயனப் பொருள்கள், மோட்டார் கார்களுக்கான பகுதிகள், சைக்கிள் பாகங்கள், சாலைதளவாடங்கள் முதலிய ஆலைத்தொழில் சாமான்களும், சாதாரண உபயோகத்துக்கு வேண்டிய பல சாமான்களும் இறக்குமதி செய்வது அவசியமாக உள்ளது. முதன் முதலாக எடுத்த கணக்கீட்டுப்படி 1956-61 ஆகிய ஐந்தாண்டு காலத்தில் மொத்த இறக்குமதி 4340 கோடி ரூபாயாகவும், மொத்த ஏற்றுமதி 2965 கோடி ரூபாயாகவும் இருக்கலாம் என்று மதிப்பீடு செய்யப்பட்டது. அதாவது அன்னியச் செலாவணியில் உத்தேசமாக 1100 கோடி ரூபாய் அளவுக்குத் துண்டு விழலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

கடந்த இரண்டாண்டு அநுபவத்திலிருந்து ஏற்றுமதி சம்பந்தப்பட்ட வரையில் இந்த மதிப்பீடு ஏறக்குறைய சரியாகவே இருக்கிறது. ஆனால் இறக்குமதி மட்டும் 4340 கோடி என்று மதிப்பீடு செய்தது 5000 கோடி ஆக மாறலாம், அல்லது அதற்கு அதிகமாகவும் ஆகலாம் என்று எண்ண வேண்டியிருக்கிறது. எனவே, அன்னியச் செலாவணியில் துண்டு விழக்கூடிய தொகை 1800 கோடி என்று திருத்தி மதிப்பிட வேண்டியிருக்கிறது. இது வரையில் ஏற்பட்ட பற்றாக் குறையை ஈடு செய்வதற்காக நாம் சேமித்து வைத்திருந்த கையிருப்பிலிருந்து 400 கோடி வரையில் செலவழித்து விட்டோம். திட்டத்தின் உத்தேசப்படி 200 கோடி செலவு செய்ய வேண்டியிருக்கும் என்று மதிப்பிடப் பட்டிருந்தது. மேற்கொண்டு இந்த நிதியிலிருந்து செலாவணி வழங்க முடியாது. எனவே, நம்முடைய அன்னியச் செலாவணித் தேவைகளுக்கு அயல் நாடுகளின் உதவியைத்தான் நம்பி இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.


அயல்நாட்டு உதவிகள் நமக்குப் பல இடங்களிலிருந்து பலப்பல விதங்களில் கிடைத்திருக்கின்றன. நன்கொடையாகவே அளிக்கப்பட்டவை சில. அரசாங்கத்துக்கு அரசாங்கம் அளித்த கடன்கள் சில; அயல் நாட்டு முதலாளி ஸ்தாபனங்கள் நம் நாட்டில் முதலீடு செய்து தொழிற்சாலைகள் நிறுவிய வகையில் கிடைத்தவை சில; சர்வதேச நாணய நிதி (International Monetary Fund) யிலிருந்து கடனாகக் கிடைத்தவை சில; புனரமைப்புக்காகவும் அபிவிருத்திக்காகவும் சர்வதேச பாங்கிலிருந்து கிடைத்த கடன்கள் சில. சமீப காலத்தில் தவணைக் கடன்கள் மூலம் யந்திரச் சாதனங்களைத் தருவித்துக் கொள்ளவும் முற்பட்டிருக்கிறோம். இந்தக் கடன்களில் பெரும்பாலானவை அதற்குக் குறிப்பிட்ட கால வரம்புக்குள் திருப்பிக் கொடுக்க வேண்டியவை.

இந்தக் கட்டுரையின் இறுதியில் 1957 நவம்பர் மாதம் 30-ஆம் தேதி வரை பாரதத்தின் அயல்நாட்டுக் கடன்களின் விவரங்கள் வரிசைக்கிரமமாகக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்த ஜாபிதாவில் ஒவ்வொரு கடன் ஒப்பந்தத்தேதியும் அதனதன் கடன்தொகையும், வட்டி விகிதமும், கால வரம்பும், திருப்பிக் கொடுக்க வேண்டிய முறைகளும், திருப்பிக் கொடுக்க வேண்டிய தேதிகளும் கொடுக்கப் பட்டுள்ளன. அதிலிருந்து நம்முடைய கடன்களில் பெரும்பாலானவற்றுக்கு 1960ம் ஆண்டில் அதிகமான தொகை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பது தெளிவாக விளங்கும். சில கடன்கள் நீண்ட காலத்துக்குப் பரவலாக இருக்கின்றன. ஆனால் இதர கடன்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கால அளவு நான்கு அல்லது ஐந்து வருஷ குறுகிய தவணையாக இருக்கிறது. எனவே, மூன்றாவது திட்ட காலமாகிய 1961-1966 ஆண்டுகளில் இப்போது ஏற்றுக் கொண்ட கடன்களின் சுமை கடுமையாக இருக்கும்.

1957-ஆம் ஆண்டு நவம்பர் 30க்குப் பின்னால் இந்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்ட கடன் விவரங்கள் இந்த ஜாபிதாவில் சேர்க்கப்படவில்லை. ஆகையால் இதைப் பற்றி இங்கே சுருக்கமாகச் சொல்லுவது நல்லது. இவற்றில் அமெரிக்க நாட்டின் ஏற்றுமதி-இறக்குமதி பாங்கியிலிருந்தும் அபிவிருத்திக் கடன் நிதியிலிருந்தும் சுமார் 107 கோடி ரூபாய் கடன் கொடுக்க ஒப்புக்கொண்டது ஒன்று; ஜப்பானிய அரசாங்கத்துடன் சுமார் 24 கோடி ரூபாய்க்குச் சமமான "யென்" நாணயக் கடன் ஒப்பந்தம் மற்றொன்று: மேற்கு ஜெர்மனியுடன் சுமார் 69 கோடி ரூபாய்க்குக் கடன் ஒப்பந்தம் மூன்றாவது; பிரான்ஸ் நாட்டுடன் சுமார் 26 கோடி ரூபாய்க்குத் தவணைக்கடன் ஒப்பந்தம் நான்காவது; இவை அனைத்தும் சேர்ந்து சுமார் 230 கோடி ரூபாய் கடன் தொகை ஆகிறது. ஜாபிதாவில் கொடுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகையுடன் இதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இவற்றில் மிகவும் முக்கியமானது, அமெரிக்காவுடன் நாம் செய்து கொண்ட கடன் ஒப்பந்தம்தான். இந்த ஒப்பந்தத்தை இரண்டு பிரிவுகளாக வகுக்கலாம். முதலாவது ஏற்றுமதி - இறக்குமதி பாங்கியிலிருந்து கிடைக்கவிருக்கும் 15 கோடி டாலர் அல்லது 70 கோடி ரூபாய் கடன். வருஷத்துக்கு ஐந்தே கால் சதவிகிதம் வட்டி கொடுக்க வேண்டும். 15 வருஷ காலத்தில் அசலைத் திருப்பித் தர வேண்டும். ஆனால் முதல் வருஷத் தவணை 1964-ஆம் ஆண்டு ஜனவரி 15 தேதிக்கு முன் செலுத்த வேண்டியதில்லை. இரண்டாவது, அபிவிருத்திக் கடன் நிதியிலிருந்து கிடைக்கப் போகும் கடன். இது மொத்தம் ஏழரைக் கோடி டாலர் அல்லது 35 கோடி ரூபாய். இதில் 4 கோடி டாலர் அல்லது 19 கோடி ரூபாய் ரயில்வே தளவாடங்கள் வாங்குவதற்கு உபயோகிக்கப்படும். அதற்கு வட்டி வருஷத்துக்கு மூன்றரை சதவிகிதம். அசல் தொகை ஆறு மாதத்துக்கு ஒரு தவணையாக 40 தவணைகளில் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். முதல் தவணை 1959-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15-ஆம் தேதி ஆரம்பமாகிறது. மீதமுள்ள மூன்றரைக் கோடி டாலர் அல்லது சுமார் 17 கோடி ரூபாய் ஐந்தே கால் சதவிகிதம் வட்டியுடன் ஆறுமாதத்துக்கு ஒரு தவணையாக முப்பது தவணைகளில் கொடுக்கப்படவேண்டும். முதல் தவணை ஆரம்பம் முன்னதைப் போலவே 1959-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் கட்ட வேண்டும்.

ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய மூன்று நாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் இவ்வளவு சாதகமானவை அல்ல. இவற்றில் கடன் தொகைகளெல்லாம் அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் திருப்பிக் கொடுத்தாக வேண்டும். இதற்குச் சராசரி வட்டி 5 சதவிகிதம் ஆகிறது.



டாக்டர் பி. எஸ். லோகநாதன்.

சில நாட்களுக்கு முன் நிதி மந்திரி பார்லிமெண்ட் சபையில் சமர்ப்பித்த ஒரு அறிக்கையில் அன்னியக் கடன்கள் வரும் ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்க வேண்டிய அளவுகளைப் பற்றி விவரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அந்த விவரங்கள் பின்வருமாறு :—

வருஷம்	கொடுக்கவேண்டிய தொகை (கோடிக்கணக்கில்)
1958–59	23
1959–60	35
1960–61	92
1961–62	23
1962–63	107
1963–64	48
1964–65	35

இதிலிருந்து இரண்டாவது திட்ட காலத்தின் இறுதி ஆண்டில் இந்தக் கடன் சுமை இறுக்க ஆரம்பிக்கும் என்பதும், அந்த இறுக்கம் மேன்மேலும் கடுமையாகி மூன்றாவது திட்ட காலத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில் உச்ச நிலையை அடையும் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

இதைத் தவிர இரண்டாவது திட்டத்தில் மேற்கொண்டுள்ளபடி அரசாங்கத் தொகுதியில் ரூ. 4800 கோடியும், தனியார்த் தொகுதியில் அவர்கள் மேற்கொண்டுள்ள அபிவிருத்தி அம்சங்கள் எல்லாவற்றையும் நினைத்தபடியே நிறைவேற்றுவதென்று அரசாங்கம் உறுதியுடன் நடவடிக்கை எடுத்துக் கொண்டால், ஏற்கெனவே பேச்சு வார்த்தை நடத்தி, கடன் வசதி செய்து கொண்டதற்கு அதிகமாகச் சுமார் ரூ. 400 கோடியிலிருந்து ரூ. 500 கோடி வரையில் அன்னியச் செலாவணியில் துண்டு விழும் என்பதையும் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இதைச் சமாளிக்க அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் மேலும் பல கடன் வசதிகளுக்கு ஏற்பாடு செய்தாக வேண்டும். இதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு கவனித்தால் கடன்கள் திருப்பித்தர வேண்டிய காலத்தில் அவற்றின் சுமைமேற்சொன்ன அறிக்கையில் கண்டதைவிட அதிகமாகிக் கவலையளிக்கும்படிதான் இருக்கும். இவ்விஷயத்தில் சில வாரங்களுக்கு முன் மதிப்பிட்டு செய்த திட்டக்கமிஷன் எல்லாவற்றையும் கணக்கெடுத்து மூன்றாவது திட்ட காலத்தில் (1961-66)ல் அன்னியக் கடன்களின் அசலுக்காகவும் வட்டிக்காகவும் ரூபாய் 500 கோடி கொடுக்க

வேண்டியிருக்கும் என்று சொல்லியிருக்கிறது. அதாவது வருஷத்துக்குச் சராசரி ரூ. 100 கோடி வீதம் கொடுக்க வேண்டி வருகிறது.

இந்தச் சுமையுடன், மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் அதற்குத் தேவைப்படும் புதுக் கடன்கள் எழுப்ப வேண்டியிருக்கும் என்பதையும் ஞாபகப்படுத்திக் கொண்டு, அந்தத் தொகையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இது எவ்வளவு இருக்கும் என்பது வெவ்வேறான மூன்று அம்சங்களைப் பொருத்திருக்கிறது. முதலாவது, மூன்றாவது திட்டத்தின் மொத்த அளவு எவ்வளவு, அதில் அன்னியச் செலாவணிப் பகுதி எவ்வளவு என்பது: இரண்டாவது, அடுத்த ஐந்தாண்டுகளில் இந்தியாவின் ஏற்றுமதி வியாபாரம் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கும் என்பது; மூன்றாவது, இறக்குமதி வகைகளை எந்த அளவுக்குக் குறைத்துக் கொள்ளலாம் என்பது. இவற்றைச் சற்றுக் கவனிப்போம்.

மூன்றாவது திட்டத்தின் அளவு எப்படி இருக்கும் என்பதைப் பற்றி இப்போது திட்டமாகச் சொல்லுவது சாத்தியமில்லை. ஏனெனில், நடைமுறையில் இருக்கும் இரண்டாவது திட்டம் எஞ்சியுள்ள மூன்று ஆண்டு காலத்தில் எவ்வளவு தூரம் முன்னேறுகிறது என்பதையும், தற்போதையப் பொருளாதார நிலை எந்த அளவுக்கு விரிவடைந்து முன்னேறும் என்பதையும், இந்திய விவசாயமும், தொழிற்பண்ட உற்பத்திகளும் எந்த அளவுக்குப் பெருகும் என்பதையும் பொருத்தே இது இருக்கிறது. எனினும், பூர்வாங்கமாக ஆலோசனை செய்யலாம். இதுவரையில் ஏற்பட்ட அனுபவங்களை யொட்டி இரண்டாவது திட்ட இறுதியில் மொத்தம் செலவிட முடிந்த தொகையைக் காட்டிலும் மூன்றாவது திட்டத்தின் அளவு குறைந்த பக்ஷம் 25 லிருந்து 30 சதவிகிதமாவது அதிகமாகத்தான் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். இரண்டாவது திட்ட இறுதி முதலீடு ரூ.4200 கோடியாக ஆகிறது என்று வைத்துக்கொண்டால் (இது இப்போது ரூ. 4800 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.) மூன்றாவது திட்டத்தில் அரசாங்கத் தொகுதிக்கு மட்டும் சுமார் ரூ. 5500 கோடி முதலீடு செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கலாம். அதேபோல, தனியார்த் தொகுதிக்குச் சுமார் 3000 கோடியிலிருந்து 3500 கோடி வரையில் செலவு செய்யப்படலாம். இந்த மொத்தத் தொகையான ரூ. 9000 கோடியில் அன்னியச் செலாவணி அம்சம் எவ்வளவு இருக்கும் என்பது திட்டத்தின் பல்வேறு அம்சங்களுக்கு இந்தத் தொகை எவ்வாறு பாகுபாடு செய்யப்படுகிறது என்பதைப் பொருத்திருக்கும். இது எவ்வாறாக இருப்பினும் கனரகத் தொழிற்சாலை அபிவிருத்தி இதில் கணிசமான அளவுக்கு இடம் பெறும் என்றே எதிர்பார்க்கலாம். இது தவிர்க்க முடியாதென்றே தோன்றுகிறது. அதேமாதிரி மேலும் சில ரசாயன உரத்தொழிற்சாலைகள் நிறுவப்படலாம் என்பதாலும், விவசாய யந்திர சாமான்களை உள் நாட்டிலேயே தயாரிக்கப் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படலாம் என்பதாலும், ஏற்கெனவே மேற்கொண்டுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களில் சில பூர்த்தியாகாமல் அடுத்த திட்டகாலத்துக்கும் நீடிக்கலாம் என்பதாலும், விவசாய உற்பத்திக்கும் இரண்டாவது திட்டத்தில் மதிப்பீடு செய்த அளவுக்குக் குறையாமல் அன்னியச் செலாவணி மூன்றாவது திட்டத்திலும் தேவைப்படலாம் என்றே நினைக்க வேண்டும்.

எல்லாவற்றையும் சேர்த்து இறுதியாகப் பார்க்குமிடத்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த முதலீட்டில் அன்னியச் செலாவணி பாகம் ஏறக்குறைய 30 சத விகிதம் இருக்கும் என்று எண்ணலாம். மூன்றாவது திட்ட காலத்திலும் அன்னியச் செலாவணி இதே விகிதத்தில் இருக்கும் என்று அனுமானித்தால், குறைந்த பட்சம் ரூ. 2500 கோடி அளவுக்கு மூன்றாவது திட்ட அம்சங்களுக்கு இந்த வகையில் முதலீடு செய்யவேண்டிவரும்.

இரண்டாவது திட்டத்தில் முதன் முதலில் அன்னியச் செலாவணித் தேவை ரூ. 1100 கோடி அளவில்தான் இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது என்பதைக் கவனத்தில் வைத்துக் கொண்டால், இறக்குமதி—ஏற்றுமதி வித்தியாசம் காரணமாக அயல் நாட்டுச் செலாவணிக் கணக்கில் துண்டுவிழும் தொகையும் இதே அளவில்தான் இருந்தது என்பது தெளிவாகவே விளங்கும். ஆனால் சமீப காலத்தில் முதல் மதிப்பீடுகளைப் புனர் பரிசீலனை செய்த போது, இம்மாதிரி அன்னியச் செலாவணிக் கணக்கில் துண்டு விழும் தொகை ரூ. 1800 கோடியாக இருக்கிறது என்று திருத்திக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இதே விகிதத்தில் மூன்றாவது திட்டத்திலும் அயல் செலாவணிக் கணக்கின் போக்கு இருந்தால், தற்போதைய அளவைக் காட்டிலும் 25 சத விகிதம் கூடுதலாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இரண்டாவது திட்ட காலத்தில் மேற்கொண்ட கடன் பொறுப்புகளைத் தீர்க்கும் வகையில் திருப்பித் தரவேண்டிய சுமார் ரூ. 500 கோடியையும் மேலே குறிப்பிட்ட ரூ. 2500 கோடியுடன் சேர்த்துக் கொண்டால் மூன்றாவது திட்டகாலத்தில் நம்முடைய அன்னியச் செலாவணித் தேவை சுமார் ரூ. 3000 கோடி அளவில் இருக்கும் என்று ஸ்தூலமாகக் கணக்குச் சொல்லலாம். இந்தப் பெரும் தொகையைத் திரட்ட மூன்று வகையுள்ளன. இப்போதைய அளவுகளிலிருந்து நமது ஏற்றுமதியை உயர்த்திக் கொண்டே போகலாம்; அல்லது இறக்குமதி செய்வதை நிறுத்திக் கொண்டு நம் நாட்டுப் பொருள்களை அதிகமான அளவில் உபயோகப்படுத்தலாம்; அல்லது மேலும் அயல் நாட்டுக் கடன்கள் புதிதாக எழுப்பலாம். வெளிநாடுகளிலிருந்து நன்கொடையாக ஏதாவது கிடைக்கக்கூடும் என்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. எனவே மூன்றாவது திட்ட காலத்தில் நமது வெளிநாட்டு வியாபாரத் திட்டத்தை நிர்ணயிப்பவர்களின் சாதனை மிகவும் கடினமே. நம் நாட்டின் இறக்குமதி தற்சமயம் வருஷத்துக்கு ரூ. 1000 கோடி அளவில் நடைபெறுகிறது. இதில் சுமார் ரூ. 350 கோடி திட்டஅம்சங்களுக்காகவோ அல்லது திட்ட அம்சங்களின் விளைவாகவோ ஏற்பட்டுள்ளது. நம்முடைய

மாமூலான இறக்குமதிகள் எல்லாம் தற்போதைய அளவையே உச்ச வரம்பாகக் கொண்டு நிலைத்து விட்டாலும் கூட, மூன்றாவது திட்டத்தில் இந்த விகிதப்படி வருஷத்துக்குச் சுமார் 1250 கோடிக்குச் சராசரி இறக்குமதி செய்தே ஆக வேண்டுமென்ற நிலைமைதான் ஏற்படும்.

இறக்குமதிப் பண்டங்களுக்குப் பதிலாக உள் நாட்டு உற்பத்தியைக் கொண்டு சில இனங்களில் பூர்த்தி செய்து கொள்ளலாம் என்பது உண்மையே. உதாரணமாக, உணவுப் பொருள்கள், பல்வேறு சின்னஞ்சிறு சாமான்கள், ''யந்திர சாதனங்களை''க் கொண்டு உற்பத்தியாகும் பொருள்கள், இனசரி தேவைப் பொருள்கள், இப்படிப் பல இனங்களில் இறக்குமதியைக் குறைத்துக் கொள்ளலாம். ஆனால், இதற்கு ஒரு தடங்கல் உண்டு. நம் பாரத மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டே போவதால்-அதுதானே விரிவடையும் பொருளாதார அபிவிருத்தியின் நோக்கம்—அவர்களுடைய தேவைகளும் அதிகரித்துக்கொண்டேபோகும். அவ்வித அதிகப்படி தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும். ஆக, மூன்றாவது திட்டத்தின் அளவைகள் மேலே விவரித்துள்ளபடி இருந்தால், நமது இறக்குமதியின் அளவு வருஷத்துக்கு ரூ. 1250 கோடிக்குக் குறைவாக இருக்க முடியாது.

ஏற்றுமதி வியாபாரத்தில் ஓரளவுக்கு விஸ்தரிப்பு ஏற்படக் கூடும். இது இப்போது வருஷத்துக்கு ரூ. 600-650 கோடி அளவில் தேக்கமுற்று நிற்கிறது. இரும்பு, உருக்குச் சாமான்கள், சிலவகை ரஸாயனப் பொருள்கள், 'என்ஜினீயரிங்' சாமான்கள், சிலவகை கனிப்பொருள்கள், எண்ணெய் வகைகள்—இப்படிப்பட்ட இனங்களில் ஏற்றுமதி ஓரளவு விரிவடையக் கூடும். இதற்கு மாறாக, நமது சம்பிரதாயமான ஏற்றுமதி இனங்களாகிய ஆலை ஜவுளி, சணல், தேயிலை முதலியவற்றில் வியாபாரம் மந்தமாகிக் கொண்டே வருகிறது. உலக மார்க்கெட் நிலவரங்களைக் கவனித்தால் இந்த இனங்களில் அபிவிருத்தி ஏற்படலாம் என்று எண்ண எவ்வித அறிகுறிகளையும் காணவில்லை. இதர நாடுகளிலிருந்து அதிகமாகப் போட்டி ஏற்பட்டிருக்கிறது என்பதாலும், நமது பண்டங்களுக்குள்ள தேவையே விரிவடையும் தன்மையுடையதல்ல என்பதாலும், முன்னேற்றம் காண முடியாத வகையிலேயே ஏற்றுமதி இருக்கும்.

இவ்வித காரணங்களால், அடுத்த ஐந்தாண்டு காலத்தில் நம்முடைய ஏற்றுமதி வியாபாரம் இப்போதைய நிலையிலிருந்து 15 சத விகிதம் அதிகரித்தால் பெரிது. இதற்கு மேல் விரிவடையும் என்று தோன்றவில்லை. அதாவது வருஷத்துக்குச் சுமார் ரூ. 800 கோடி அளவை உயர் வரம்பாகவே நாம் கொள்ளலாம்.

எனவே ஏற்றுமதி-இறக்குமதி வித்தியாசத்தில் மட்டும் வருஷத்துக்கு ரூ. 400 கோடிக்கு மேல் துண்டுவிழப் போவது தெளிவு. இந்தக் குறையை எப்படிப் பூர்த்தி செய்வது? மேன்மேலும் அன்னியக் கடனையும் உதவியையும் கொண்டுதானே பூர்த்தி செய்ய வேண்டும்!

இந்த அளவுக்கு அன்னியக் கடன்களோ, நன்கொடையோ, மான்யங்களோ கிடைக்குமா? கிடைக்கும் என்று ஒருவன் பதிலளித்தால், அதிர்ஷ்டத்தில் அவனுக்குள்ள நம்பிக்கையைத் தான் குறிக்கும். நடைமுறையில் எதிர்பார்க்கக் கூடாதது. ஆகவே புத்திசாலித்தனமாக மூன்றாவது திட்டத்தை வகுக்கும் போதே, அதிக அளவில் இறக்குமதி தேவைப்படும் அம்சங்களைக் குறைத்து, எந்தெந்த இனங்கள் இறக்குமதியைக் குறைப்பதுடன் ஏற்றுமதியை அதிகப்படுத்துமோ அந்தத் திட்டங்களில் கவனம் செலுத்தி, அன்னியச் செலாவணி எந்த அளவுக்குக் கிடைக்குமோ அந்த அளவுக்குத் திட்டங்களை வரையறுத்துக் கொள்ளுவதுதான் நல்லது. அபிவிருத்தித் திட்டங்கள் நாட்டில் அபரிமிதமாக இருக்கும் மனித உழைப்பு என்னும் மூலதனத்தை விரிவடையச் செய்யும் வகையில் இருக்க வேண்டும். சமூக அபிவிருத்தி முன்னேற்றத்துக்கான திட்டங்களுக்கு அதிகமான அளவில் அன்னியச் செலாவணி தேவைப்படாது. எந்தெந்தத் திட்டங்கள் உடனடியாக உற்பத்தியை அதிகரித்து அன்னியச் செலாவணியையும் எதிர் பார்க்காதோ, அவற்றின் மீதே கவனம் செலுத்த வேண்டும். உண்மையைக் கூறப்போனால் நீண்ட கால நோக்கில் மனிதனுடைய சாமர்த்தியமும், உழைப்பின் திறனும், உற்பத்தி சக்தியுமே சமூகம் அடையும் அபிவிருத்தியை வரையறுக்கிறது.

மேலும், குறுகிய கால அன்னியக் கடன்களிலிருந்து நீண்டகால அன்னியக் கடன்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக் கொள்ளுவதை நாம் லட்சியமாகக் கொள்ள வேண்டும். சிறிய தொகைகளாகக் கிடைக்கக் கூடிய குறுகிய கால கடனைக் கொண்டு நாம் இனி சமாளிக்க முடியாது. நமது புதுக் கடன்கள் எல்லாம் நீண்டகாலக் கடன்களாகவே இருக்க வேண்டும். அதுதான் நல்லது. ஏற்கனவே மேற்கொண்டுள்ள குறுகிய காலக் கடன்களைக்கூட நீண்டகாலக் கடன்களாக மாற்றுவதற்கு ஒரு வழி தேடுவதும் நலம். அதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

சாதாரண வேகத்தில் நாம் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதானாலும்கூட அடுத்த 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு அன்னிய நாடுகளிலிருந்து கடன் வாங்குவது தவிர்க்க முடியாதது. அயல் நாடுகளில் கடன் வாங்குவது தவறு என்றோ, செய்யக்கூடாதது என்றோ நினைக்கலாகாது. மற்ற நாடுகள்கூடத் தமது முன்னேற்றத்துக்கு முயற்சிகள் மேற்கொண்ட போது ஆரம்பகாலத்தில் அயல் நாட்டுக் கடன் வாங்கித்தான் அபிவிருத்தியடைந்தன. நாமும் அப்படிச் செய்யலாம். நம்முடைய முன்னேற்றம் ஒவ்வொரு ஐந்தாண்டு காலத்திலும் படிப்படியாக உயர்ந்து கொண்டே போகுமாதலால் அன்னியக் கடனைச் சார்ந்திருப்பதும் சிறிது சிறிதாகக் குறைந்து வரும். நமது மொத்தக் கடனில் அதன் ஈவும் குறையும். எனினும் அன்னியச் செலாவணி சம்பந்தப்பட்டவரையில் அடுத்த பத்து ஆண்டுகள் இந்தியாவுக்கு நெருக்கடியான காலம் என்றே சொல்ல வேண்டும்.

இந்தியாவின் அன்னியக் கடன்கள் - ஒப்பந்தங்களும், தவணைகளும்

(30—11—1957 வரையில்) (கடன் தொகை கோடி ரூபாய் கணக்கில்)

கடன் அளிக்கப்பட்ட திட்டங்களின் விவரம்	ஒப்பந்தத் தேதி	கடன் தொகை	வட்டி சத விகிதம்	கடன்களின் கால வரம்பு	திருப்பிக் கொடுக்கும் ஏற்பாடுகள்	முதல் தவணை ஆரம்பம்	கடைசித் தவணை முடிவு
1. அன்னியச் செலாவணியிலே திருப்பித் தரவேண்டிய கடன்கள்							
(1) சர்வதேச பாங்கி அபிவிருத்திக் கடன்கள் :—							
(a) ரயில்வே I	18—8—49	15·61	4	15 வருஷம்	30 ஆறு மாதத் தவணைகளில்	15-2-1950	15-8-1964
ரயில்வே II	12—7—57	42·84	5⅝	15 ..	23	1-7-1961	1-7-1972
தாமோதர் பள்ளத்தாக்கு கார்ப்பொரேஷன் I	18—4—50	7·96	4	20 ..	31	15-4-1955	15-4-1970
தாமோதர் ... II	23—1—53	5·00	4 7/8	25 ..	43	15-7-1956	15-7-1977
ஏர்-இந்திய இன்டர் நேஷனல்	12—7—57	2·67	5½	9 ..	5	1-10-1964	1-10-1966
அரசாங்கத் தொகுதி மொத்தம் -		74·08					
(b) இந்தியன் எஃகு உருக்குச் சாலை I	18—12—52	14·29	4⅝	15 ..	18	15-4-1949	15-10-1967
.. II	19—12—56	9·52	5	11 ..	16	15-4-1960	15-10-1967
டாடா உருக்குச் சாலை I	26—6—56	35·70	4⅝	15 ..	24	1-12-1959	-1-6-1971
டிராம்பே நிலையம் I	19—11—54	7·71	4⅝	20 ..	33	15-10-1958	15-10-1974
.. II	29—5—52	4·66	5⅝	18 ..	31	15-4-1960	15-4-1975
இந்தியன் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் I	14—3—55	4·76	4⅝	15 ..	20	11-1-1960	1-7-1969
டாடா உருக்குச் சாலை II	20—11—57	15·47	6	13 ..	22	1-10-1960	1-4-1971
தனியார்த் தொகுதி மொத்தம்		92·11					
மொத்த அமெரிக்க அபிவிருத்தி பாங்கிக் கடன்கள்		166·19					
(2) அமெரிக்கக் கோதுமைக் கடன்	1951	90·31	2½	36 ..	60	30-6-1957	30-6-1988
(3) ருஷ்யக் கடன் பிலாய் உருக்குச் சாலைக்கு	2—4—56	63·07	2½	13 ..	12 வருஷத்தவணை	15-3-1957	15-3-1971
(4) துர்க்காப்பூர் உருக்குச் சாலைக் கடன் - ஆங்கில வர்த்தகச் சங்கமும் அரசாங்கமும் சேர்ந்து	28—3—56	35·33	பாங்கி விகிதத்துக்கு 1% அதிகமாக	—	10	1960-61	1969-70

(5) தொழிற்சாலைகளுக்கு ருஷ்யக் கடன்	—	59.50	2½	—	12 வருஷத் தவணைகள்	சாமான் கிடைத்த ஒரு வருஷத்துக்குப் பின்
(6) ருர்க்கேலா உருக்குச் சாலைக்கு ருஷ்யக் கடன்	—	13.60	6-7	—	சாமான் கிடைத்த மூன்று வருஷத்துக்குப் பின் 4 ஆறு மாதத் தவணைகள்	
(7) இந்திய விமானக் கார்ப்பரேஷனுக்கு அமெரிக்கக் கடன்	5—3—57	5.34	5½	9		—
(8) சர்வதேச நாணய நிதியிலிருந்து கடன் வாங்கியது	8—2—57 11—3—57	95.20	5	—	—	1960—61 1962—63
(9) ஸ்டர்லிங் கடன்						
(i) இங்கிலாந்தில் எழுப்பிய கடன்	—	0.59	—	—	—	—
(ii) ராஜ்ய சர்க்கார் முனிசிபாலிடி துறைமுகங்கள் முதலிய கடன் வகைகள்	—	0.63	—	—	—	—
9-வது இனத்தின் மொத்தம்	—	1.22	—	—	—	—
(10) நாமநிதித்துக் கொடுக்க வேண்டிய கடன்கள்	31-10-57	—	—	—	—	—
(i) சர்க்கார் தொகுதி	,,	10.60	—	—	—	—
(ii) தனியார்த் தொகுதி		36.82	—	—	—	—
மொத்தம்	,,	47.42	—	—	—	—
1-10 ஆக மொத்தம் அன்னியச் செலாவணியில் திருப்பித் தர வேண்டிய கடன்	—	577.18	—	—	—	—
(11) ரூபாயில் திருப்பித்தர வேண்டிய கடன்கள்	—	—	—	—	—	—
(i) அபிவிருத்திக்கு உதவி						
(a) கடன் - I	1954-55	21.43	4	—	—	—
(b) கடன் - II	1955-56	17.85	4	—	—	—
(c) கடன் - III	1956-57	22.62	4	—	—	—
(ii) P. L. 480 கோதுமைக் கடன்	29-8-56	111.43	—	—	—	—
ஆக 11-வது இனத்தின் மொத்தம்		173.33	—	—	—	—
ஆக மொத்தக் கடன்	—	750.51	—	—	—	—


ஆண்டுகள் பலவாகினும்
அழகு குன்றாத
ஆடைகளை அணியுங்கள்!
ஹருவா
லஸ்டலின்
நெ. ஏஸி. எஸ் 5208 ஏஸி 3000 - குறிப்பிட்டு கேளுங்கள்.
ட்ரில்
ப்ளெயின்' ரகம் எல் 4914 என்றும், 'செக்' ரகம் எல் 976 என்றும் கேளுங்கள். 'டாபி' ரகமும் கிடைக்கிறது.
இந்த நம்பர்களைச் சொல்லுங்கள்: பி 17 (ராணுவத்தினர் அணிவது இது) பி37, பி11, பி 94, பி39, பி 83.
எடுப்பான தோற்றம், உகப்பான உடைக்கு பின்னி துணியே ஏற்றது. இந்த பிரசித்த டிரேட் மார்க்குகள் உள்ள துணிகளையே வாங்குங்கள்.
பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட்
மானேஜிங் ஏஜெண்டுகள்,
பின்னி & கோ (மதராஸ்) லிமிடெட், சென்னை

BY 302a

நமது ஆராய்ச்சி அரங்கத்துக்குக் கட்டுரை எழுத ஆரம்பித்து, அதை ஒரு பாராட்டுச் செய்தியாகவே மாற்றிவிட்ட திரு ஏ. டி. ஷராப் அவர்கள் இந்தியாவின் தலைமை ஸ்தாபனமாகிய டாடா கம்பெனியின் நிர்வாகஸ்தருள் ஒருவர். கல்லூரி ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். கம்பெனிகளில் முதலீடு செய்வதைப் பற்றி ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கிறார். தொழில் நுட்பங்களும் செயல்முறைகளும் அவருக்குத் தண்ணீர் பட்டபாடு. பல கமிட்டிகளில் அங்கம் வகித்திருக்கிறார். பாங்கிகள் சம்பந்தமாகவும் கம்பெனி நிர்வாக சம்பந்தமாகவும் மிகுந்த அனுபவமுள்ளவர். தனியார் துறையில் தொழில்கள் முன்னேற்றமடைய வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர். அவர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியைக் கீழே கொடுத்திருக்கிறோம். — ஆசிரியர்

மூன்று வழிகள்

ஏ. டி. ஷராப்

இந்தியாவின் அன்னியச் செலாவணி நிலைமையைப் பற்றித் தொடர்ச்சியாகப் பல கட்டுரைகள் மூலம் வாசகர்களுக்கு அறிவூட்ட 'கல்கி' வாரப் பத்திரிகை மேற்கொண்டுள்ள முயற்சியைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். தற்போது இது மிகவும் ஜீவாதாரமான ஒரு பிரச்னையாகும். ஜனநாயக முறையில் செயல் புரியும் எந்தச் சமூகமும் பெருமளவில் நாட்டுப் பொருளாதாரத்தை விரிவடையச் செய்ய வேண்டுமானால் ஸ்திரமான அன்னியச் செலாவணி நிலைமை இருக்கவேண்டும். இதுவரையில் தனது அன்னியக் கடன் பொறுப்புக்களை இந்தியா தட்டில்லாமல் நிறைவேற்றித் தன் கௌரவத்தை நிலைக்கச் செய்து வந்திருக்கிறது. இதே போல் இனிமேலும் நிலைக்கச் செய்ய வேண்டும். இதனால் தான் பல மாதங்களாக இறக்குமதியைக் கடுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தி வந்திருக்கிறேன். எனினும் இதைவிடப் பலனளிக்கவல்ல இதர நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். என்னுடைய அபிப்பிராயத்தில் இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை முன்பின் யோசனையின்றிப் பேராசையுடன்வகுத்ததாலும், 1956—57-ம் ஆண்டில் தாராளமாக இறக்குமதி லைசென்சுகள் வழங்கப்பட்டதாலும்ஏற்பட்டது என்பதே. கௌரவத்துக்குக்குறைவு உண்டாகும் என்பதை நமது அரசாங்கம் கவனிக்காமல், உடனே நமது பொருள் வசதிகளுக்கும் உத்தேசமாகக் கிடைக்கக் கூடிய அயல் நாட்டு உதவிக்கும் ஏற்றவாறு திட்ட அம்சங்களைக் குறைக்க வேண்டும்.




திரு ஏ.டி. ஷராப்

ஏற்கெனவே ஏற்றுக் கொண்ட பொறுப்புகளை நிறைவேற்றி வைக்க நமது அயல்நாட்டு நண்பர்களும் நட்பு நாடுகளும் நமக்குக் கை கொடுத்து உதவுவார்களென்றே நம்புகிறேன். இது சம்பந்தமாக நாம் சரியான பாதையிலேயே முன்னேறிச் செல்ல வேண்டுமானால் மூன்று முக்கியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்பதை இங்கே சொல்ல வேண்டும்.

முதலாவதாக, பல்வேறு மந்திரி காரியாலயங்களுக்குள்ளே ஒத்துழைப்பும் முரண்பாடில்லாத நடவடிக்கைகளும் அவசியம். லாபகரமாக இல்லாத அல்லது அபிவிருத்திக்கு உதவாத செலவினங்களைக் கடுமையாகக் குறைக்க வேண்டும். இரண்டாவதாக, புத்தி சாமர்த்தியத்தால் சமைக்கப்பட்ட, ஆனால் விபரீத பலன்களை விளைவிக்கக்கூடிய வரி முறைகளை மாற்ற வேண்டும். இவ்வரிகள் மூலம் மூலதனம் பெருகுவதையும், தனிப்பட்டவர்களின் ஊக்கத்தையும் குறைக்கும் தடைகள் மிகவும் அதிகரித்து விட்டன. மூன்றாவதாக, நாட்டின் அபிவிருத்தியில் தனியார்த் தொகுதிக்குச் செயல் புரிய இடம் உண்டு என்பதை அரசாங்கம் உணர வேண்டும். நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்க இதுவரையில் அவர்கள் செய்திருக்கும் பணியை அங்கீகரித்து ஆதரிக்க வேண்டும்.

தனது வாசகர்களுக்கு நமது நாட்டுப் பொருளாதாரத்தைப் பற்றியும் முக்கியமாக அன்னியச் செலாவணி நிலைமையைப் பற்றியும் அறிவு புகட்ட முற்பட்டிருக்கும் கல்கி பத்திரிகையைப் பன்முறை பாராட்டுகிறேன். கல்கியின்முயற்சி வெற்றி பெறட்டும்.





மாயவரம் மகாநாடு

"ஆட்சி மொழியாக ஆங்கிலமே தொடர்ந்திருக்க வேண்டும்!" என்ற இயக்கம் நாட்டுப் பெரியோர்களால், இளைஞர்களின் நன்மையையும், எதிர்கால மக்களின் நல்வாழ்வையும் கருதித்தான் தொடங்கப்பட்டது. அதை நிரூபிப்பதுபோல் தஞ்சை, தென்னாற்காடு ஜில்லாக்களில் வக்கீல் தொழில் ஆரம்பித்திருக்கும் சில இளைஞர்கள் மாயவரத்தில் ஆட்சிமொழி மகாநாடு ஜூன் 22-ம் தேதி வெற்றிகரமாக நடத்தினார்கள்.

1. நண்பர் முருகையன் தீர்மானத்தைப் பிரேரேபிக்கிறார். 2. சித்ரா நாராயணசாமி ஹாஸ்யச் சுவையுடன் பேசுகிறார். 3. திரு சையிது பேசுகிறார். 4. மகாநாட்டுக்குத் தலைமை வகித்த திரு துரை இலக்குவன் மிக அழகிய தலைமையுரை நிகழ்த்துகிறார். 5. திரு ஆர். வி. கிருஷ்ணய்யர் தம் பிரசங்கத்தை வாசிக்கிறார். 6. கடவுள் வாழ்த்துடன் மகாநாடு ஆரம்பமாகிறது. 7. திரு அமிர்த கணேசன் பேசுகிறார். 8. திரு சங்கரன் நன்றியுரை கூறினார். 9. டாக்டர் ரத்தினசாமி துவக்கவுரை நிகழ்த்துகிறார். 10. வரவேற்புக் குழுத் தலைவர் திரு ரங்கராஜுலு ராஜாஜிக்கு மலர்மாலை அணிவித்து மகிழ்கிறார். 11. ராஜாஜி பேருரை வழங்குகிறார்.

போட்டோ: **என். ராமகிருஷ்ணா**




11
10
9
8
6
7


பை-கொலேட்ஸ்
கெடுக்க முடியாத புது சீலுடன்


ஜே. பி. மங்காராமின்
எனர்ஜி புட்
வீட்டிலும், வெளியிலும்
நீங்கள் ருசித்துச் சாப்பிடும்
பிஸ்கோத்துகள்.
ஜே. பி.
மங்காராம்
அண்டு கோ.
குவாலியர்


குழந்தைகளின் வயிற்றுவலியை துரிதமாக சமனம் செய்வது
க்ரைப்பானில்
(க்ரைப் மிக்ஸ்சர்)
TA

பாண்டிமாதேவி

கண்டோம். களிப்புற்றோம்!

எதிர்பார்த்த இதயங்கள் மகிழ்ந்தன. ஆம்! 'பாண்டிமாதேவி'யைப் படித்த எவர் உள்ளந்தான் மகிழ்ச்சியுறாது?

அந்தி மாலையின் அழகைக் கண்டோம். ஆயிரமாயிரம் அலைக் குரல்களால் நீலத்திரைக் கடல் ஓலமிட்டு நிற்க, சந்திரோதயத்தையும் சூரியாஸ்தமனத்தையும் ஒரே சமயத்தில் அதன் முழு அழகோடு காணும் பேறு பெற்றோம். அந்தப்புரத்தை விட்டு வெளியேறி யறியாத அபலைப் பெண்மணி வானவன்மா தேவியின் ஆதரவற்ற நிலையை உணர்ந்தோம். கத்தவீரன் வல்லாளதேவனின் ஒற்றறியும் திறனை வியந்தோம். பொங்கி வரும் பெரு நிலவன்ன அநங்க விலாசினியின் அழகைச் சுவைத்தோம். எழிலும் வீரமும் இணைந்து காணும் பகவதியின் சமயோசித அறிவைப் போற்றி அகம் குளிர்ந்தோம்.

சென்னை—5
4—7—58

மு. ஜனகா

அருமையான வர்ணனை

இன்று கல்கி வந்ததும் பாண்டிமா தேவியைத்தான் முதலில் பார்த்தேன். அதில் குமரிக் கடற்கரையில் நின்று பாண்டிமா தேவியும் மற்றவர்களும் சூரியாஸ்தமனத்தையும், சந்திர உதயத்தையும் கண்டு பிரமிப்பதாகக் கதாசிரியரின் வர்ணனை மிகவும் அழகாயிருக்கிறது. கதையின் ஆரம்பமே அதன் சிறந்த போக்கைக் காட்டுகிறது.

தேவகோட்டை
3—7—'58

ஆர். லக்ஷ்மி

எப்படி மறக்க முடியும்?

''கல்கி''யில் சரித்திரத் தொடர் எதுவுமில்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்த எங்களுக்குப் ''பாண்டிமாதேவி'' களிப்பைத் தந்தது. முதல் அத்தியாயத்திலேயே எங்கள் உள்ளத்தே இடம் பெற்றுவிட்ட பகவதியும், விலாசினியும், வல்லாள தேவனும், எங்களால் எப்படி இனி மறக்க முடியும்?

சென்னை
8—7—'58

பொ. மு. சாமி

அழகின் சிகரம்!

அழகின் சிகரமான அநங்க விலாசினியையும், எழிலும் வீரமும் ஒருங்கே அமைந்த பகவதியையும், அன்பே உருவான வானவன் மாதேவியையும் கண்டு களிப்புற்றோம்.

சொற்சுவையும், பொருட்சுவையும், வீரச் சுவையும் ஒருங்கே அமையப் பாண்டிமாதேவி யென்னும் இச்சரித்திரக் கதையை ஒவ்வொரு வாரமும் ஆவலுடன் எதிர்பார்ப்போம்.

சென்னை
4—7—58

மோஹனா

நின்று தவம் செய்யும் குமரி

முதல் இதழிலேயே ''பாண்டிமாதேவி'' பீடு நடை போடுகிறாள். பிரமிக்கத்தக்க முறையில் இருக்கிறது ஆரம்பம். நடையிலும், பழைய சரித்திரப் பெயர்களிலும் பேராசிரியர் ''கல்கி''யின் முத்திரை காணப்படுகிறது.

''நின்று தவம் செய்யும் குமரி'' எனும் உபதலையங்கத்தில், அழகையும் ஆண்டவனையும் ஒருங்கே கண்டனர் நம்முடைய முன்னோர்கள் என்பதை இலக்கிய நயத்துடன் தெளிவுற விளக்கியிருப்பது அழகாகவும் சிந்தனைக்கு வேலை கொடுப்பதாகவும் அமைந்துள்ளது.

காளஹஸ்தி
4—7—58

கே. சுந்தரராமன்

தேனமுது!

தமிழ்நாட்டு மன்னரில் தலைசிறந்த பாண்டியன் தேசத் தமிழைத் திருத்தமாய்த் தீட்டிய சொல் வன்மை மிக்க சிறந்த நாவல் பாண்டிமாதேவி. என்று வியாழன் வரும், என்று கல்கி வரும் என ஆவலுற்று அபலை முதல், அறிஞர், சிறுவர், சிறுமியர் வரை படித்துப் புளகாங்கிதம் அடையும்படி பாத்திரங்கள் அமைந்திருக்கின்றன. நாவலை எழுதிய எழுத்தாளருக்கு எனது ஆசிகள்.

சென்னை—5
4—7—58

சூடாமணி

தமிழ்ப்பண்பைக் கண்டோம்

பல நாட்கள் ஆவலுடன் எதிர்பார்த்தோம்; ''பாண்டிமாதேவி'' பவனி வந்தாள்.

அழகின் எல்லையை ஆரணங்கு அநங்க விலாசினியும், பகங்கொடியாள் பகவதியும் காட்டினார்கள்! ஆழ்ந்த அன்பு உள்ளத்தை வானவன்மாதேவியிடம் கண்டோம்! அதங்கோட்டாசிரியரின் ரசிக இதயத்தை உணர்ந்தோம்! வல்லாள தேவனின் கூரிய நோக்கு எங்களையும் ஊடுருவிப் பார்க்கிறது!

தமிழ்ப் பண்பையொட்டிச் சித்திரங்களாகத் தீட்டி இவர்களைக் கண்முன் நிறுத்திய 'வினு' அவர்களுக்கும் பாராட்டுக்கள்.

சென்னை
4-7-58

சௌமி

மனத்தைக் கவர்ந்த கதை

கன்னித் தெய்வமாம் குமரி அன்னையின் எழிலுருவத்தைத் தாங்கி வரும் இவ்வாரக் கல்கி இதழில் ஆரம்பமாகும் 'பாண்டிமா தேவி' தொடக்கத்திலேயே மனத்தைக்கவரும் வகையில் அமைந்து விட்டது. அடுத்து வரும் நிகழ்ச்சியை ஆவலுடன் எதிர்பார்க்கும் அளவுக்கு முதல் வாரமே அமைந்து விட்டது.

ஆத்தூர்
3-7-58

குமாரி ராஜி


அழகிய சாதனை

'பாண்டிமாதேவி' என்னும் சரித்திரக் கதையை மிகவும் ஆவலுடன் வாசித்தேன். திரு நா. பார்த்தசாரதி அவர்களின் இலக்கியப் படைப்புகளுக்குச் சிகரம் வைத்தாற் போன்ற சாதனையே அவர் இன்று கல்கியில் எழுதத் தொடங்கியுள்ள 'பாண்டிமாதேவி' என்னும் சரித்திரத் தொடர்கதை.

சென்னை-7
4—7—'58

க. ரா. கல்யாணராமன்





38

ஆசை பொல்லாதது. எவரையும் பிடித்துக் கொள்ளும். மகா மேதைகளையும் சகல நூல்களைப் படித்த நிபுணர்களையும் பிடித்துக் கொள்ளும்.

அஃகி அகன்ற
அறிவுஎன்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய
செயின்.

அஃகி—மிக நுண்ணிய மதியைக் குறிக்கிறது. அகன்ற—பல நூல்களில் சென்று பரந்த அறிவைக் குறிக்கிறது.

பல நூல்களைப் படித்து மிக நுட்பமான புத்தியைக் கொண்டு ஆராய்ந்து பண்டிதனையினும் பிறன் பொருளை ஆசைப்பட்டு அதற்காக விவேகமற்ற செயலில் புகுந்தால் அவனுடைய அறிவு என்னத்துக்கு உதவும்?

இப்படியும் நடக்கும் என்கிறார் முனிவர்: அஃகி அகன்ற படிப்பு இருந்தும் ஆசைக்கு இடம் தந்து மடச் செயல்களைச் செய்வார் உண்டு. அவர்களுடைய படிப்பு அவர்கள் அடையும் அவமானத்தை விலக்காது.

இது தக்க இடம், இது தகாத இடம், அவமானம் கொண்டு வரும் இடம், இது, சமாளித்துக் கொள்ளும் இடம் இது என்று வித்தியாசம் இல்லை. யார் மாட்டும் இக்கக் குற்றத்தைச் செய்தால் கெடுவாய், உன் மேதையும் படிப்பும் உன்னை மீட்காது என்கிறார். பிறனுடைய பொருளுக்கு ஆசைப் பட்டால் வெறியன செய்வாய், ஆசைப் படாதே என்கிறார்.

* * *

இல்லறம் நடத்துவதன் நோக்கம் என்ன? குடும்ப அன்புப் பயிற்சியினால் அருள் மனப்பான்மை அடைவதற்காக. எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துவது அருள். அன்பை அகலச் செய்து அருளை மனத்தில் பெறுவது இல்லறத்தின் நோக்கம். எல்லா உயிர்களிடத்தும் அன்பு பெறுவதற்காக அல்லவா இல்லற வாழ்க்கையை ஒரு பயிற்சிக் கூடமாகக் கொண்டு நடத்துகிறாய்? அப்படியிருக்க அந்த கிரகஸ்த ஆசிரமத்தில் பிறன் பொருளுக்கு ஆசைப்படுவதற்கு இடம் கொடுத்து விட்டாயானால் நோக்கம் எப்படி நிறைவேறும்? நிறைவேறாது. இல்லறம் வீணையாகும்.

அருள்வெஃகி ஆற்றின்கண்
நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக்
கெடும்.

வெஃக வேண்டியது அருள். அதற்காக ஆறு. அதாவது இல்லற தருமம்

நடத்துகிறாய். அந்த வாழ்க்கையில் உன் முடிவான நோக்கத்தை மறந்து விட்டுப் பொருள் வெஃகினையானால் தீய காரியங்களில் பிரவேசிப்பாய். அதற்கு வேண்டிய தீய சிந்தனைகள் செய்வாய். கெடுவாய்.

* * *

பிறன் பொருளுக்கு ஆசைப் படாதே. அதை அடைவதற்காக அதருமத்தில் இறங்கி ஆசைப்பட்ட பொருளை அடைந்த பிறகு நீ அதனால் ஒரு சுகமும் அடைய மாட்டாய். ஒரு பொருளுக்கு நாம் ஆசைப்படுவது என்னத்துக்காக? அந்தப் பொருளைப் பெற்று அதனால் மேன்மை அடைவோம் என்று கருதி அதை அடைய ஆசைப்படுகிறோம். பொருளில் ஒன்றுமில்லை. அதனால் அடையப் பார்க்கும் மேன்மைதான் நாம் ஆசைப் படுவது. அநீதி செய்து அடைந்த பொருளின் மூலம் இந்த மேன்மையை அடைய முடியாது. நாம் கருதிய சுகமோ, பெருமையோ நமக்குக் கிட்டாது. பிழைபட்ட முறை பொருளின் பயனை அழித்து விடுகிறது. ஒரு பொருளின் பயனை அடைய வேண்டுமானால் நல்ல முறையில் அதை அடைய வேண்டும். தவறான முறையில் இறங்கினால் நாம் ஆசைப்பட்ட சந்தோஷம் ஒன்றுமில்லாமல் போய் விடுகிறது.

வேண்டற்க வெஃகிஆம்
ஆக்கம்; விளைவயின்
மாண்டற்கு அரிதுஆம்
பயன்.

விளைவயின்—முடிவில், அதாவது ஆசைப் பட்ட பொருளை அடைந்த பின். முயற்சியின் விளைவாக நாம் அடையும் பயன்; மாண்டற்கு அரிது—ஒரு மேன்மையும் தராது.

* * *

பிறர் பொருளுக்கு ஆசைப்படுவது மடமை. அதனால் துன்பமே வரும். மரணத்துக்குச் சமானமான துன்பம் அடைவோம். உயிர் வைத்துக் கொண்டு பிழைப்பதின் பயனை முற்றிலும் இழப்போம்.

இதற்கு மாறாக, நம்மை நாம் அடக்கியாண்டு, பிறன் பாக்கியத்தைக் கண்டு ஆசைப்படாத மன நிலையை அடைந்தோமானால் அது மேன்மையைத் தரும். வெற்றியாகும். வீர மனப்பான்மை தரும். இதை யல்லவோ நாம் அடையப் பார்க்க வேண்டும்.

இறல்ஈனும் எண்ணாது
வெஃகின்; விறல்ஈனும்
வேண்டாமை என்னும்
செருக்கு.

இறல்—சாதல். விறல்—வெற்றி. எண்ணாது-அதன் தீய விளைவை ஆராயாமல். வேண்டாமை-பிறன் பொருளை ஆசைப்படாதிருத்தல்.

செல்வச் செருக்கு. பகைவனை வென்ற செருக்கு இவற்றைப் போல் ஒரு விதச் செருக்கு தரும், ஆசையற்ற மனம். இவ்வாறு உறுதி கூறுகிறார் முனிவர். ஆசைப்பட்டு நீ அடையப் போவது பழி. ஆசையை வென்று நீ அடையும் மேன்மை உண்மைச் செல்வம். ஆசையை வெல்வது ஒரு உண்மை வெற்றி. வெற்றி உணர்ச்சியும் செல்வத்தின் பயனாகிய மேன்மையையும் அடைவாய்.



பாண்டிமாதேவி

மூன்றாம் அத்தியாயம்

தளபதி கைப்பற்றிய ஓலை

‘இதோ இன்னும் ஒரிரு விநாடியில் இறப்பது உறுதி!’ என்று எண்ணி எல்லாம் ஓய்ந்து தளர்ந்து சாவுக்குத் தயாராகும்படியான சூழ்ச்சிகளெல்லாம் தளபதி வல்லாளதேவனின் வாழ்வில் கணக்கின்றி ஏற்பட்டிருக்கின்றன. தன் எதிரிகள், தன்னைக் கொல்வதற்காகத் துடித்துக் கொண்டிருப்பவர்கள், இவர்களுக் கிடையில் கூட வேடிக்கைக்காக வலுவில் போய் மாட்டிக் கொண்டு முடிவில் சிரித்தபடியே தப்பி வருவது அவன் வழக்கம். எதற்கும், எப்போதும் அஞ்சியறியாத நெஞ்சுரம் கொண்ட வல்லாளதேவன் அன்று அந்த நிலா இரவில் கடலோரத்துப் பாறைகளின் நடுவில் இரண்டு பக்கமிருந்தும் பாய்ந்து தன் தோள்பட்டையில் உரசும் வாள் நுனிகளைப் பார்த்ததும் ஒருகணம் அப்படியே திகைத்து நின்றுவிட்டான்.



அவன் பாதங்கள் முன்னும் நகரவில்லை; பின்னும் நகரவில்லை. உயிருள்ள ஆளாக இயங்கி நடந்து வந்தவன் திடீரென்று சிலையாக மாறி விட்டதுபோல் ஆடாதுஅசையாது நின்றான். கொஞ்சம் நகர்ந்தாலோ, அசைந்தாலோ வாள்கள் தோளில் அழுந்தி விடும். அவன் இடையிலும்தான் வாள் இருந்தது. இடுப்பில் உறைக்குள் தொங்கும் அந்த வாளை உருவி எடுக்கக்கூட அவன் கைகள் அசைய முடியாது. அப்படிப்பட்ட நிலை!

முகத்தைத் திருப்பாமல் நின்ற வண்ணமே விழிகளின் இரு பக்கத்துப் பார்வையையும் பக்கவாட்டில் சாய்த்து நிற்பவர்களைப் பார்க்க முயன்றான் தளபதி. அவன் விழிகள் இரண்டும் காதைத் தொட்டுவிடுவதுபோல் நீண்டன. பார்க்காதது போல் பார்த்த அப்பார்வையிலே ஒரு மிரட்சி இருந்தது.

“தென்பாண்டி நாட்டு வீரத் தளபதியாருக்கு வாள் முனையில் வணக்கம் செலுத்துகிறோம்.”

நா. பார்த்தசாரதி



அவர்கள் குரல்தான்.' ஏளனமும் மமதையும் தொனித்தன அதில். தளபதி பதில் சொல்லாமல் சிரித்தான். கடைக்கண் பார்வையாலேயே இருபுறமும் வாளை நீட்டிக்கொண்டு நின்றவர்களைப் பார்த்துக் கொண்டு விட்டான். முன்பு தெரிந்த சிவப்புத் தலைப்பாகைப் பேர்வழிகள்தான். சாமர்த்தியமும் சமயோசித சாதுரியமும் கொண்டு எத்தனையோ சூழ்ச்சிகளைக் கடந்திருக்கும் அவன் மனத்தில் சிந்தனையலைகள் ஒன்றோடு ஒன்றாக மோதிப் புரண்டன.

தளபதியின் முகத்தில் மின்னி மறையும் சிந்தனை ரேகைகளையும், சலனமற்று நிற்பதையும் 'பார்த்து, அவர்கள் மனத்துக்குள் என்ன நினைத்துக் கொண்டார்களோ? தெரிந்து கொள்ள முடியவில்லை.



“தளபதி அவர்களே! தங்கள் இடையிலிருக்கும் வாளை இப்படிக் கழற்றி வைத்து விட்டால் நன்றாயிருக்கும். வீணாக நாங்கள் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்காது” என்றனர்.

வல்லாளதேவன், “ஆகா! அதற்கென்ன? இதோ கழற்றிவைத்து விடுகிறேன்” என்று சொல்லிக் கொண்டே குபீரென இரண்டடி முன்னால் நகர்ந்து கொண்டு இடையிலிருந்த வாளை உருவினான். அவன் இப்படிச் செய்வானென்பதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. 'வாளை உருவிக் கீழே வைப்பதற்குத்தான் குனிகிறான்' என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கும்போதே தளபதி வாளை உருவிக் கொண்டு அவர்கள்மேல் பாய்ந்தான். இரண்டு பேருடைய வாள்களில் அவனது ஒரே வாள் மோதியது.

“தென்பாண்டி நாட்டுப் படைத் தலைவருக்கு இன்று நம்முடைய கையால் முடிவு காலம் போலிருக்கிறது!” என்றான் அந்த வீரர்களில் ஒருவன்.

“ஐயா, தளபதியாரே! இந்த ஏமாற்று வேலைகளெல்லாம் எங்களிடம் வேண்டாம்!” என்று மிகுந்த ஆத்திரத்தோடு சொல்லிக் கொண்டே வாளைச் சுழற்றி வீசினான் இன்னொருவன்.

“அது சரி! சாவு யாருக்கு என்பதை உங்கள் கைகளிலும், என் கையிலும் சுழலும் இந்த வாள்கள் அல்லவா தீர்மானிக்க வேண்டும்? பாண்டி நாட்டுத் தளபதிக்குச் சாவு நேர்ந்தாலும் அது இன்னொரு உண்மை வீரன் கையால்தான் நேரும். உங்களைப் போல யாரோ ஊர் பேர் தெரியாத ஒற்றர்களின் கைகளால் அல்ல! தெரிந்து கொள்ளுங்கள்!” என்று வீரமொழி கூறி அறை கூவியவாறே வாளை வேகமாகச் சுழற்றினான் வல்லாளதேவன்.

போர்ப் பழக்கம் மிகுந்த தளபதியின் வாள் வீச்சுக்கு முன்னால் அந்த இரண்டு ஒற்றர்களும் திணறிப் போய் விட்டனர். அவர்களில் ஒருவனைப் பாறை விளிம்புவரையில் துரத்திக் கொண்டு போய்க் கடலுக்குள் தள்ளிவிட்டான் தளபதி. கடலுக்குள் விழுந்தவன் பாறைகளில் மோதி அடிபட்டு மூர்ச்சையாகிக் கீழே இருந்த பாறைத் திடலின் மேல் கிடந்தான். மற்றொருவனை அவனு



டைய வாளைத் தண்ணீருக்குள் 'படீர்' என்று தட்டி விட்ட பின் கையோடு இறுக்கிப் பிடித்துக் கொண்டான்.

''அடே, பதரே! நீ எந்த நாட்டு ஒற்றன்? என்னிடம் உண்மையைச் சொல்ல வேண்டும். பாண்டி நாட்டு வீரர்கள் எப்போதும் உண்மையைத் தான் பேசுவார்கள். மற்றவர்களிடமிருந்தும் உண்மையைத் தான் கேட்பார்கள்.''

பிடிபட்டவன் பதில் சொல்லாமல் திருட்டு விழி விழித்தான். ''பதில் சொல்கிறாயா? உன்னைச் சொல்ல வைக்கட்டுமா?'' என்று கையை ஓங்கினான் தளபதி. பிடிபட்ட ஒற்றனின் உடல் 'கிடுகிடு' வென்று நடுங்கியது. கலக்கமும் சஞ்சலமும் அவன் முகத்தில் பதிந்தன. வாயைத் திறக்காமல் ஊமை நடிப்பு நடித்தான்.

வல்லாள தேவன் தன்னை அதட்டிக் கொண்டிருக்கும் போதே திடீரென்று தனது இடுப்புக் கச்சையிலிருந்து ஏதோ ஒரு பொருளை உருவி எடுத்துக் கடலுக்குள் எறிய முயன்றான் அந்த ஒற்றன். அவன் கை இடது பக்கத்து இடுப்பைத் தடவி எதையோ எடுக்க முயல்வதை அவனைப் பிடித்த கணத்திலிருந்தே கவனித்துக் கொண்டிருந்த தளபதி, விருட்டென்று எறிவதற்கு ஓங்கிய அவன் கையைப் பிடித்து அதிலிருந்த பொருளைப் பறித்துக் கொண்டான். அது ஒரு திருமுக ஓலை. ஒரு கையால் அவனைப் பிடித்துக்கொண்டு இன்னொரு கையால் அந்தத் திருமுக ஓலையைக் கண்களுக்கருகே கொண்டுபோய், நிலா ஒளியில் அதில் என்ன வரைந்திருக்கிறதென்று வாசிக்க முயன்றான்.

ஆனால் அதே சமயத்தில் கோவிலின் மேல்தளத்தில் வீரர்கள் ஏறி ஓடும் ஓசையும், ''விடாதே பிடி! மகாராணியின் மேல் வேலை எறிந்து விட்டு ஓடுகிறான்!'' என்ற கூக்குரல்களுமாகக் கேட்கவே அவர்கள் இருவருடைய கவனமும் ஒரே சமயத்தில் கோவிலின் பக்கம் திரும்பியது.



அவர்கள் திரும்பிப் பார்த்த சமயத்தில் கோவில் மதிலின் பின்புறமாக உள்ள ஆழமான கடற்பகுதியில் மேல் தளத்திலிருந்து ஒரு உருவம் குதிப்பது மட்டும் தெரிந்தது. மேல்தளத்தில் கேட்ட கூக்குரலும் நடந்த நிகழ்ச்சியும், தன்னிடத் தன் கையில் பிடிபட்டிருந்த ஒற்றனையே அதிகமாகக் கலவரத்துக்கும் நடுக்கிடுதலுக்கும் உள்ளாக்கியிருக்கின்றன என்பதை அவன் முகக் குறிப்புக்களால் ஒருவாறு தெரிந்து கொண்டான் வல்லாளதேவன்.

தளபதியின் மனம் நடுங்கியது. "ஐயோ! மகாராணியின் மேல் வேல் எறியப்பட்டு விட்டதா? தளபதி அருகிலிருந்தும் இப்படி நடந்து விட்டதென்று உலகம் பழிக்குமே! இது என்ன? போதாத காலமோ?" என்று பதறினான். 'மேல்தளத்திலிருந்து வேல் எறிந்து விட்டுக் கடலில் குதித்தவனுக்கும் இந்தச் சிவப்புத் தலைப்பாகை ஒற்றர்களுக்கும் ஏதாவது தொடர்பிருக்குமோ?' என்று சந்தேகம் உண்டாயிற்று. உடனே தன் கையில் கிடைத்த ஓலையோடும் ஒற்றனோடும் அங்கிருந்து இறங்கிக் கோவிலுக்கு விரைந்தான். "இந்த ஒற்றனைப் பாதுகாத்து வைத்திருங்கள். தப்பிவிடாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்!" என்று கூறிப் பரிவாரத்து வீரர்களிடம் தன் கையில் பிடிபட்ட ஒற்றனை ஒப்படைத்துவிட்டு, திருமுக ஓலையோடு மகாராணியைப் பார்க்க விரைந்து உள்ளே சென்றான்.

'மேலே இருந்து விதானத் துவாரத்தின் வழியே வீசி எறியப்பட்ட வேலினால் மகாராணியாருக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படவில்லை' என்று அறிந்து கொண்டபின்புதான் தளபதிக்கு நிம்மதியாக மூச்சு வந்தது. கோவிலின் கர்ப்பக்கிருகத்துக்கு முன்னால் இருந்த மணி மண்டபத்தில் மகாராணி வானமாதேவி, பவழக்கனிவாயர், அதங்கோட்டாசிரியர், தன்னுடைய தங்கை பகவதி, ஆசிரியர் மகள் விலாசினி ஆகியோர் வீற்றிருக்கும்போது தளபதி வல்லாள தேவன் அங்கே பிரவேசித்தான். "மகாராணி! நான் கேள்விப்பட்டது மெய்தானா? யாரோ வஞ்சகன் வேலை எறிந்து விட்டு ஓடினான் என்றார்களே? இதென்ன கொடுமை? ஆலயத்துக்குள் தெய்வ தரிசனத்துக்காக நுழையும் போது கூடவா அரசியல் சூழ்ச்சிகள்? இத்தகைய பயங்கர நிகழ்ச்சியின் போது மகாராணியாரின் அருகிலிருக்க இயலாமற் போனதற்கு அடியேனை மன்னிக்க வேண்டும். தீய சக்திகள் தென் பாண்டி நாட்டை வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. சற்று முன் அடியேன் கடற்கரைப் பாறையில் பின் தங்கி நின்றதன் காரணம் இங்கு ஒருவருக்கும் புரிந்திருக்காது. அதுவும் நம்மைச் சூழ்ந்து நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு பயங்கரச் சதியின் உண்மையைப் புரிந்து கொள்வதற்காகத்தான். இதோ இந்த ஓலையைப் பாருங்கள்" என்று ஒற்றனிடமிருந்து கைப்பற்றிய திருமுக ஓலையை எடுத்து மகாராணிக்கு முன்னால் வைத்தான் தளபதி.

"தளபதியாரே! இன்றைக்கு மகாராணியார் உயிர் பிழைத்தது யாரால் தெரியுமா? உங்கள் தங்கை பகவதியின் வீரச் செயல்தான் தேவியைக் காப்பாற்றியது. ஒரு மகாவீரனின் தங்கை என்பதை உங்கள் சகோதரி நிரூபித்து விட்டார். பாய்வதற்கு இருந்த வேலைப் பார்த்தவுடன் மகாராணியைப் பின்னுக்கு இழுத்துக் கீழே தள்ளியதால் ஆபத்தில்லாமல் போயிற்று" என்றார் கோவில் அர்ச்சகர்.

அதைக் கேட்டதும், "பகவதி! நீ எப்போது இங்கே வந்தாய்?" என்று தங்கையை விசாரித்தான் தளபதி.

"மகாராணியார் ஆலயத்துக்குள் நுழைவதற்கு முன்பே நானும் ஆசிரியர் மகள் விலாசினியும் இங்கே வந்து சேர்ந்து கொண்டோம், அண்ணா!" என்று பதில் கூறினாள் பகவதி.

தளபதி கொடுத்த ஓலையைக் கையில் எடுத்த மகாராணி அப்போதே அந்த இடத்தில் அதைப் படித்து அறிந்து கொள்ள விரும்பவில்லை. மண்டபத்தில் இருந்த எல்லோர் முகங்களிலும் ஒரு வகை கலவரத்தின் சாயை படிந்திருந்தது. தளபதி கொண்டு வந்த ஓலையில் அடங்கியிருக்கும் செய்தியை அறிந்து கொள்ளத் துடிக்கும் ஆவல் அவர்கள் எல்லோர் பார்வையிலும் இருந்தது. தளபதி கூறிய சில சொற்களிலிருந்து 'தென் பாண்டி நாட்டை ஏதோ ஒரு வகையில் பகைச் சக்திகள் எதிர்ப்பதற்கு ஒன்று கூடுகின்றன' என்று மற்றவர்கள் அனுமானிக்க முடிந்தது.

ஓலையைப் பார்த்து விட்டு மகாராணி வானவன்மாதேவி என்ன கூறப் போகிறாள் என்பதைக் கேட்கக் காத்திருந்தனர். ஆலயத்துக்குள் அசாதாரணமான அமைதி நிலவியது. வீரர்கள், பரிவாரங்கள், அர்ச்சகர்கள் எல்லோரும் அடங்கி ஒடுங்கி மகாராணியாரின் முகத்தையே இமையாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். மகாராணியாரோ ஓலையைப் படிக்கவுமில்லை. வாய் திறந்து பேசவுமில்லை. ஊசி விழுந்தாலும் அது

தெளிவாகக் கேட்கும்படியான அந்த அமைதி சில விநாடிகள் நீடித்தது. தளபதியின் பார்வையில் தூரேறரமாக வளைந்து நெளிந்து கிடந்த வேல் தென்பட்டது. அதுதான் மகாராணியின் மேல் எறியப்பட்ட வேலாக இருக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டான்.

"தளபதி! கோட்டையிலிருந்து புறப்பட்டபோது ஆலயத்துக்குப்போகிறோம் என்ற அமைதியில் மனக் குழப்பங்களை மறந்து நிம்மதியோடு புறப்பட்டேன். இப்போதோ இங்கு வந்தபின் நடந்த நிகழ்ச்சியால் மனம் குழம்பிப் போயிருக்கிறது. வார்த்தைகளால் விவரித்துச் சொல்ல முடியாத அதிர்ச்சியில் மூழ்கிக் கொண்டிருக்கிறேன். என்ன பேசுவது? எதைச் சிந்திப்பது? எதைச் செய்வது? ஒன்றுமே எனக்குப் புரியவில்லை. வரவர அரசாட்சியில் பற்றுக் குறைந்து கொண்டே வருகிறது. ஒன்று: இந்த அரசையும், ஆட்சியையும் கைப்பற்றுவதற்காகப் பொய்யும், சூழ்ச்சியும் செய்யும் எதிரிகளிடம் இதை உதறிவிட்டு எங்காவது போய்ப் புத்த மதத்தில் சேர்ந்து பிறவிப் பிணிக்கு மருந்து தேட வேண்டும்; அல்லது ஓடிப் போன இராசசிம்மனைத் தேடிப் பிடித்துக் கொண்டுவந்து முடிசூட்டி விட்டு நான் நிம்மதியாக இருக்க வேண்டும். இந்த இரண்டில் ஏதாவதொன்று நடந்தாலொழிய என்னால் இப்படியே மதில் மேல் பூனையாகக் காலங் கழிக்க முடியாது. என்னைப் போல் நாயகனை இழந்த ஒரு பெண்ணை இந்தத் தென்பாண்டி நாட்டுக்குப் பேரரசியாக உரிமை கொண்டாடி இன்பத்திலும் துன்பத்திலும் எவ்வளவோ ஒத்துழைக்கிறீர்கள். அதற்காக நான் பெருமைப்படத்தான் வேண்டும். ஆனால் இந்தப் பெருமையைத் தொடர்ந்து ஏற்றுக் கொள்ளும் நெஞ்சு உரம் எனக்கு இல்லை. என் அருமைக் குமாரனும் உங்கள் இளைய சக்கரவர்த்தியுமான இராசசிம்மன் சிங்களத் தீவில் போய்ச் சுற்றிக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். மகாமன்னரான பராந்தக பாண்டியரின் வழி முறையினர்தான் உங்களை ஆள வேண்டுமென்ற உறுதி உங்களுக்கு இருக்குமானால் சிங்களத்தீவுக்குப் போய் இளைய சக்கரவர்த்தியைத் தேடிக் கொண்டு வாருங்கள். தளபதி! இந்த ஓலையை இப்போது நான் படிக்க விரும்பவில்லை. இது உம்மிடமே இருக்கட்டும்."

உருக்கம் நிறைந்த நீண்ட பேச்சுக்குப் பின் திருமுக ஓலையை வல்லாளதேவனிடமே திருப்பிக் கொடுத்துவிட்டாள் மகாராணி. பேச்சு முடிந்த பின்பும் அங்கு நிலவிய அமைதி கலையவில்லை. அதங்கோட்டாசிரியரும், பவழக் கனிவாயரும், தளபதியும் ஒன்றும் பேசத் தோன்றாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஆலயத்தில் எரிந்து கொண்டிருந்த தீபச் சுடர்கள் கூட ஆடாமல் ஸ்தம்பித்துப் போனவை போல விளங்கின. திருமுக ஓலையைக் கையில் வாங்கிக் கொண்ட தளபதி மகாராணியார் மனம் வெதும்பி விரக்தியடைந்து போயிருக்கும் அந்த நிலையில் என்ன பேசுவதென்று தெரியாமல் மலைத்துப் போய் அப்படியே நின்றான்.

"தளபதி! நாளையே புறத்தாய நாட்டு மகாசபையைக் கூட்டுங்கள். இந்தப் பிரச்னைகளுக்கு ஒரு முடிவு கண்டாக வேண்டும். நாஞ்சில் நாட்டுக் கூற்றங்களின் பிரதம மந்திராலோசனைத் தலைவராகிய இடையாற்றுமங்கலத்து நம்பியை அழைத்து வாருங்கள். இந்த ஓலையையும், இது சம்பந்தமான எதிரிகளின் சூழ்ச்சிகளையும் கூட நாளை மகாசபைக் கூட்டத்தில் ஆலோசித்துக் கொள்ளலாம். இப்போது நாம் புறப்படலாம்" என்று மீண்டும் உறுதியான குரலில் கூறினாள் மகாராணி. அப்போது கோவில் வாயிலில் பரிவாரத்து வீரர்களில் முக்கியமான ஒருவன் தளபதியின் காதருகே வந்து, "பிரபு! நீங்கள் எங்களிடம் ஒப்படைத்திருந்த அந்த ஒற்றன் தப்பிவிட்டான்" என்று மெல்லிய குரலில் கூறினான். தளபதி வல்லாளதேவன் திடுக்கிட்டான்.

அத்தியாயம் 4

இடையாற்றுமங்கலம் நம்பி

இந்தக் கதையை மேலே தொடர்வதற்கு முன்னால் பன்னூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தென்பாண்டி நாடாகிய நாஞ்சில் நாட்டின் பல்வேறு உட்பிரிவுகளைப் பற்றி இங்கே ஒரு சில செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகிறது.

தோவாழைக் கூற்றம், மருங்கூர்க் கூற்றம், பொன்மனைக் கூற்றம், அருவிக்கரைக் கூற்றம், பாகோட்டுக் கூற்றம்,-

ஆகிய ஐந்து பெருங் கூற்றங்களாக நாஞ்சிற் புறத்தாய நாடு, பிரிக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு கூற்றத்துக்கும் பாண்டியர் ஆட்சியை மேற்பார்க்கும் இராஜப் பிரதிநிதியாக ஒரு தலைமகன் நியமிக்கப்பட்டிருந்தான். இந்தக் கூற்றத் தலைவர்களின் தொகுதிக்கு நாஞ்சில் நாட்டு மகாசபை என்று பெயர். இந்த மகாசபையின் மந்திராலோசனைத் தலைவராக அறிவினும், திருவினும், ஒழுக்கத்தினும், வயதினும், மூத்தசான்றோர் ஒருவரைப் பாண்டிய மன்னன் தானே தேர்ந்தெடுத்து நியமிப்பது வழக்கம். அவருக்குப் புறத்தாய நாட்டு மகாமண்டலேகவரர் என்று பெயர்.

திரிபுவனச் சக்கரவர்த்திகளாகிய பராந்தக பாண்டியதேவர் காலத்தில் பாண்டிய சாம்ராஜ்யம் வடக்கிலும், தெற்கிலும் பெரிதாகப் பரந்திருந்தாலும் மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்த அவரால் தென்கோடி மூலையிலுள்ள நாஞ்சில் நாட்டை நேரடியாகக் கவனித்து ஆள முடியாததாலும் இந்த ஏற்பாட்டைச் செய்தார். இந்த ஏற்பாட்டின்படி மருங்கூர்க் கூற்றத்து இடையாற்றுமங்கலம் நம்பி என்ற நாஞ்சில் நாட்டு மேதை உலக மண்டலேகவரராக நியமிக்கப்பட்டிருந்தார்.

பராந்தகச் சக்கரவர்த்திகள் ஆண்ட இருபதாண்டுக் காலமும் அதன் பின்பும் இடையாற்றுமங்கலம் நம்பியே தொடர்ந்து அம்மாபெரும் பொறுப்பை நிர்வகித்து வந்தார். சக்கரவர்த்திகள் தேகவியோக மடைந்து அமரரான பின்பு வடபாண்டி நாட்டைச் சோழனும், அவனோடு சேர்ந்தவர்களும் கைப்பற்றிக் கொண்டதும், குமார சக்கரவர்த்தி இராசசிம்மன் சிங்களத் தீவுக்கு ஓடியதும், நேயர்கள் ஏற்கெனவே அறிந்த செய்திகள். அந்தப் பயங்கரமான சூழ்நிலையின்போது மகாராணி வானவன்மாதேவியாரைத் தென் பாண்டி



நாட்டுக்கு அழைத்து வந்து புறத்தாய நாட்டுக் கோட்டையில் இருக்கச் செய்து மகாராணிக்கு அளிக்க வேண்டிய இராஜ கௌரவமும் மரியாதையும் அளித்திவர் மகா மண்டலேசுவரரான இடையாற்றுமங்கலம் நம்பி அவர்களே.

நாஞ்சில் நாட்டின் உயிர்நாடி போன்ற பகுதி மருங்கூர்க் கூற்றம். கன்னியா குமரி, சுசீந்திரம் தாணுமாலய விண்ணகரம், தென்திசைப் பெரும்படை தங்கி யிருக்கும் கோட்டாற்றுப் படைத்தளம், புறத்தாய நாட்டுக் கோட்டை, மகா மண்டலேசுவரரின் வாசஸ்தலமாகிய இடையாற்றுமங்கலம் ஆகிய எல்லா முக்கிய இடங்களும் மருங்கூர்க் கூற்றத்திலேயே அமைந்திருந்தன. பார்க்குமிடமெங்கும் பரந்து கிடக்கும் நெல் வயல் வெளிகளும், சாலைகளும், சோலைகளும், நிறைந்த மருங்கூர்க் கூற்றத்தின் பசுமை வெளியில்; இரட்டை வடமாகிய முத்துமாலையொன்றை நெளியவிட்டது போல் பஃறுளியாறு என முதற் சங்கக் காலத்து



அழைக்கப்பட்ட பறளியாறும், புத்தனாறும் பாய்ந்து ஓடுகின்றன.

பறளியாறும், புத்தனாறும், கடலோடு கலக்கும் சங்கம முகத்துவாரத்துக்கு முன்னால் தனித்தனியே விலகிப் பிரிந்து ஒரு சிறிய அழகான தீவை உண்டாக்கியிருக்கின்றன. அதுவே இடையாற்று மங்கலம். தென்பாண்டி நாட்டு மகா மண்டலேசுவரரும், முதுபெரும் பேரறிஞருமாகிய இடையாற்றுமங்கலம் நம்பியின் மாளிகை இந்தத் தீவில்தான் அமைந்திருந்தது. இந்தத் தீவின் பெரும் பாகத்தை நிரப்பிக் கொண்டு நின்றது, மகா மண்டலேசுவரரின் கம்பீரமான மாளிகைதான் என்றால் அது எவ்வளவு பெரிதாக இருக்குமென்பதை நேரில் பார்க்காமலே கற்பனை செய்துகொள்ள முடியும். மலைத் தொடர்போல் அந்த மாளிகையைச் சுற்றி வளைந்து செல்லும் பிரும்மாண்டமான கோட்டை மதிற் சுவர்களுக்கு இப்பால் வெட்டப்படாத இயற்கை அகழிகளைப் போல் புத்தனாறும், பறளியாறும் நீர் இரு கரையும் நிரம்பி ஓடிக் கொண்டிருந்தன.

பகல் நேரத்தில் கதிரவன் ஒளியில் இந்த மாளிகையைப் பார்ப்பதற்குப் பதிலாக நடு இரவில் உலகமே ஆழ்ந்த அமைதியின் மாபெரும் ஒடுக்கத்தினுள் உறங்கிக் கிடக்கும்போது பார்க்கும் படியான அவசர வாய்ப்பை இந்தக் கதை ஏற்படுத்தி விடுகிறது. நடு இரவானால் என்ன? மடல் விரித்த கமுகம் பாளையைப் போலப் பௌர்ணமி நிலா ஒளிக் கதிர்களை உமிழ்ந்து கொண்டிருக்கிறதே! குளிர்ந்த கடற் காற்றின் சுகத்தை அனுபவித்துக் கொண்டே வளம் நிறைந்த நாஞ்சில் நாட்டு இராஜ பாட்டையில் நடந்து செல்வதற்கு யாராவது சோம்பல் அடைவார்களா?

இடையாற்றுமங்கலத்துக்குச் செல்லும் கீழ்த் திசைச் சாலையில் ஆளரவமற்ற அந்த நடுயாமத்தில் ஒரு வெண்ணிறப் புரவி கன வேகமாகப் பாய்ந்து சென்றது. அதன்மேல் தளபதி வல்லாள தேவன் வீற்றிருப்பதை நிலா ஒளியில் நன்றாக அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. அவன் முகத்தில் அவசர காரியத்தை எதிர்நோக்கிப் பிரயாணம் செய்யும் பரபரப்பைக் காண முடிந்தது.

வானமும், பூமியும், திசைகளும், திசைக் கோணங்களும் அமைதியில் கட்டுண்டு கிடந்த அந்த யாமப்பொழுதில் யாரோ மத்தளத்தின் புறமுதுகில் 'தட தட' வென்று தட்டுவது போல் குதிரையின் குளம்போசை எதிரொலித்தது. வாயு வேகம், மனோவேகம் என்பார்களே: அவையெல்லாம் பிச்சை வாங்க வேண்டும். தென் திசைத் தளபதி வல்லாளதேவனின் குதிரை நாலுகால் பாய்ச்சலில் பறந்து கொண்டிருந்தது.

சாதாரணமாகக் கன்னியாகுமரியிலிருந்து இடையாற்றுமங்கலத்துக்கு ஒன்றரை நாழிகை நேரம் குதிரைப் பயணத்துக்கு ஆகும். காரியத்தின் அவசரத்தை முன்னிட்டுக் குதிரையை விரட்டிக் கொண்டு வந்திருந்த வல்லாள தேவன் ஒரு நாழிகை நேரத்துக்கு முன்னதாகவே இடையாற்று மங்கலத்தை நெருங்கி விட்டான்.

மண்டலேசுவரரின் மாளிகைக்குத் தென்புறம் கண்ணுக்கெட்டிய வரை நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் ஒரே தண்ணீர்ப் பிரவாகமாகத் தெரிந்த பறளியாற்றின் இக்கரையில் வந்து தளபதியின் குதிரை நின்றது. பூமிக்குக் குடை பிடித்ததுபோல் பரந்து வளர்ந்திருந்த ஓர் பெரிய ஆலமரத்தின் கீழ் அவனும் அவன் ஏறிக் கொண்டு வந்த குதிரையும் நின்றபோது நிலாமேகத்தில் மறைந்து மெல்லிய இருள் பரவியது. கரையோரத்து ஆலமரத்தின் அடர்த்தியால் முன்பே ஒளி மங்கியிருந்த அந்த இடம் இன்னும் அதிகமாக இருண்டது.

ஆற்றில் தண்ணீர் குறைவாக ஓடினால் நனைந்தாலும் பரவாயில்லையென்று குதிரையையும் பிடித்துக் கொண்டு இறங்கி நடந்து அக்கரையிலுள்ள மாளிகைக்குச் சென்றுவிட முடியும். குதிரையை மரத்தடியிலேயே நிறுத்தி விட்டுக் கரையின் விளிம்பருகே சென்று ஆற்றின் நிலையை நிதானிக்க முயன்றான். இரு தினங்களாக நாஞ்சில் நாட்டு மலைத் தொடர்களில் நல்ல மழை பெய்திருந்ததனால் பறளியாற்றில் நீர் இரு கரையும் நிமிர ஓடிக் கொண்டிருந்தது. இறங்கிப் போவதென்பது சாத்தியமில்லை என்று தெரிந்தது வல்லாள தேவனுக்கு. திரும்பி வந்தான். குதிரையை ஆலமரத்தின் வேரில் கட்டி விட்டு நின்றான்.

இதற்கு முன்பு இத்தகைய திகைப்புக்குரிய அனுபவம் நாஞ்சில் நாட்டுப் படைத் தலைவனுக்கு ஏற்பட்டதில்லை என்றுதான் சொல்ல வேண்டும். மேற்கே சிறிது தூரம் கரையோரமாகவே நடந்தால் இடையாற்றுமங்கலம் மண்டலேசுவரர் மாளிகைக்குத் தோணிவிடும் துறை இருந்தது. தோணித் துறையில் தொண்டாற்றும் அம்பலவன் வேளான் துறையில் இருக்கிறானோ; இல்லையோ? பெரும்பாலும் இரவு ஏழெட்டு நாழிகைக்குள் தோணிப் போக்குவரவு முடிந்து விடும். அதன்பின் படகுடன்

அக்கரையிலேயே தங்கி விடுவது வேளானின் வழக்கம். பகலில் வந்திருந்தால் இடையாற்று மங்கலம் போவதற்கு இவ்வளவு அவதிப்பட வேண்டியதில்லை. மாளிகைத் தோணியும், அதைச் செலுத்தும் வேளானும் காத்திருப்பார்கள். இரவில் அகால வேளையில் வர நேர்ந்ததால்தான் இவ்வளவு துன்பமும்.

"சரி! எதற்கும் தோணித்துறை வரையில் போய்ப் பார்க்கலாம். நம்முடைய நல்வினைப் பயனாக அம்பலவன் வேளானும் அவன் தோணியும் இக்கரையில் இருந்தால் நல்லதாகப் போயிற்று" என்று நினைத்துக் கொண்டே கரையோரத்துப் புதர் மண்டிய பாதையில் மேற்கே தோணித் துறையை நோக்கி நடந்தான் தளபதி. ஒற்றையடிப்பாதையின் இருபுறமும் அடர்த்தியான தாழம் புதர். இருக்குமிடம் தெரியாமல் மலர்ந்திருந்த தாழம் பூக்களின் மணமும், நதிக்கரைக் குளிர்ச்சியும், நிலாவின் இன்பமும்,—தளபதியின் மனத்துக்கோ, உடலுக்கோ சுகத்தை அளிக்கவில்லை. கவலை நிறைந்த சூழ்நிலையில் கடமையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தான் அவன்.

கன்னியாகுமரிக் கோவிலிலிருந்து மகாராணியார், அதங்கோட்டாசிரியர், பவழக் கனிவாயர், பகவதி, விலாசினி எல்லோரையும் பரிவாரங்களோடு அரண்மனைக்கு அனுப்பி விட்டுத் தப்பிச் சென்ற ஒற்றனைத் தேடிப் பிடிப்பதற்காகத் தளபதியும் வேறு சில வீரர்களும் அங்கேயே தங்கி விட்டனர். மகாராணி மனக்குழப்பமடைந்திருக்கும் நிலையைப் புரிந்து கொண்டதால் கடற்கரைப் பாறைகளிடையே, தான் கண்ட ஒற்றர்களைப்பற்றியோ, அவர்களில் ஒருவனைப் பிடித்துக்கொண்டு வந்ததைப்பற்றியோ அவன் கூறவில்லை. ஓலையை மட்டும் கொடுத்தான். அதையும் அவள் படிக்காமலே திருப்பிக் கொடுத்து விட்டாள். மகாராணி முதலியோர் கோட்டைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது தன் காதருகே பரிவாரத்து வீரன் ஒற்றன் தப்பியதாகக் கூறிய செய்தியையும் அவன் யாருக்கும் அறிவிக்கவில்லை.

"மகாராணி! நீங்கள் எல்லோரும் கோட்டைக்குப் போய் இருங்கள். எனக்கும் இந்த வீரர்களுக்கும் இங்கே கொஞ்சம் வேலை இருக்கிறது. உங்கள் உத்தரவுப்படியே நாளை மகாசபை கூட்டத்துக்கு ஏற்பாடு செய்து விடுகிறேன். இன்றிரவே இடையாற்றுமங்கலத்தில் நம்பியைச் சந்தித்து விவரம் கூறி விடுகிறேன். மற்றக் கூற்றத் தலைவர்களுக்கும் இரவோடிரவாக ஆள் அனுப்பி விடுகிறேன்" என்று கூறினான் தளபதி.

"அப்படியானால் இன்றிரவு நீ கோட்டைக்கு வருவது சந்தேகந்தான். இவ்வளவு வேலைகளையும் செய்ய இரவு முழுவதும் சரியாயிருக்குமே!" என்றார் அதங்கோட்டாசிரியர்.

"எங்கே வர முடியப் போகிறது? நீங்கள் போய் வாருங்கள். ஒரு வேளை இடையாற்றுமங்கலத்திலிருந்து சுருக்கத் திரும்பினால் உடனே கோட்டைக்கு வந்து விடுகிறேன்" என்று சொல்லி அவர்களை அனுப்பி விட்டான். அவர்கள் சென்றதும் பிடிபட்ட ஒற்றனை அஜாக்கிரதையால் தப்ப விட்டு விட்ட வீரர்களைத் திட்டினான். கோபத்தோடு கடிந்து கொண்டான். மறுபடியும் அவர்களை அழைத்துக் கொண்டு பாறை இடுக்குகளிலும், கடலோரத்து இடங்களிலும், கோவிலைச்சுற்றியும் தேடினான்.




ஏற்கெனவே தளபதியால் அடிபட்டு மயங்கி விழுந்திருந்தவனையும் இப்போது அந்தப் பாறைமேல் காணவில்லை. 'மூன்று பேர்கள் வந்திருக்கிறார்கள். வேலை எறிவதற்காக ஒருவன் கோவில் மேல்தளத்தில் ஏறிக் காத்திருந்திருக்கிறான். மற்ற இருவரும் பாறை இடுக்கில் இருந்திருக்கிறார்கள்.'—நடந்ததை ஒருவாறு உணர முடிந்தது அவனால்.

"எப்படியானால் என்ன? மூன்று பேர்களுமே தப்பி விட்டார்கள். நமக்குக் கிடைத்தது இந்த ஓலை ஒன்றுதான்" என்று மேலும் தேடும் முயற்சியைக் கைவிட்டு விட்டு இடையாற்றுமங்கலம் புறப்பட்டான் வல்லாளதேவன். தன்னோடு இருந்தவர்களில் ஆறு பேர்களை மகாசபையின் ஆறு கூற்றத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தனித்தனியே மறுநாள் கூடும் சபையைப் பற்றிய செய்தியைத்

தெரிவிக்குமாறு இரவோடிரவாக அங்கிருந்தே குதிரைகளில் அனுப்பினான்.

இவ்வளவையும் செய்து முடித்துவிட்டு அவன் கன்னியாகுமரியிலிருந்து இடையாற்றுமங்கலம் புறப்படும்போது இரவு பதினொரு நாழிகைக்கு மேலாகிவிட்டது. அப்படிப் புறப்படுவதற்கு முன் கோவில் தீபத்தின் ஒளியில் தனியாக மீண்டும் ஒரு முறை ஒற்றனிடமிருந்து கிடைத்த அந்த ஓலையைப் படித்தபோது தான் தளபதியின் இதயத்தில் அதன் விளைவான பயங்கரமும், கொடிய சூழ்நிலையும் நன்கு உறைத்தன. மகாராணி அந்தத் திருமுகத்தைப் படிக்காமல் கொடுத்ததும் ஒருவகைக்கு நல்லது தான். கூடுமானால் மகா மண்டலேசுவரரிடம்கூட இந்த ஓலையைப் பற்றிக் குறிப்பிடாமல் இருப்பது நல்லது!' — என்ற முடிவான தீர்மானத்தோடுதான் மகா மண்டலேசுவரரைச் சந்திப்பதற்குக் கிளம்பியிருந்தான் அவன்.



* * *

பறளியாற்றங்கரை ஆலமரத்தடியில் குதிரையைக் கட்டி விட்டுத் தோணித் துறையை நோக்கித் தாழை மரக் கூட்டத்தின் இடையே வளைந்து வளைந்து செல்லும் குறுகிய பாதையில் நடந்து கொண்டே அன்று மாலையில் நிகழ்ந்தவற்றையெல்லாம் மீண்டும் மேற்கண்டவாறு நினைத்துப் பார்த்துக் கொண்டான் தளபதி வல்லாளதேவன்.

தோணித் துறையை நெருங்கியபோது அங்கே தீப்பந்தங்களின் வெளிச்சமும், பேச்சுக் குரல்களும் இருப்பதைக் கண்டு அவன் முகம் மலர்ந்தது. தன் நம்பிக்கை வீண் போகாமல் காப்பாற்றியதற்காகத் தெய்வத்துக்கு நன்றி செலுத்திக் கொண்டே துறையில் இறங்கினான். தோணி அக்கரைக்குப் புறப்படுவதற்குத் தயாராக இருந்தது.

அதில் உட்கார்ந்திருந்தவர்களைப் பார்த்தபோதுதான் தளபதியால் தன் கண்களையே நம்ப முடியவில்லை! 'தோணியே இருக்காது இந்த நள்ளிரவில்' என்று அவநம்பிக்கையோடு வந்த அவன், தோணியையும் அதைச் செலுத்தும் படகோட்டி அம்பலவன் வேளானையும் மட்டும் பார்த்திருந்தால்கூட அவ்வாறு ஆச்சரியப்பட்டிருக்க மாட்டான்.

ஆனால் தோணியில் வீற்றிருந்தவர்கள் யார்? யாரைக் கண்டு தளபதி இவ்வளவு வியப்படைகிறான்?

யாரைத் தேடி வந்தானோ, அந்த இடையாற்றுமங்கலம் நம்பியே படகில் உட்கார்ந்திருந்தார். அவரோடு அவருடைய திருக்குமாரியாகிய குழல்வாய்மொழி நாச்சியாரும் தளபதி இதற்கு முன் பார்த்திராத ஓர் வாலிபத் துறவியும் படகில் அமர்ந்திருந்தனர். தாடி மீசையோடு காட்சியளித்த அந்தத் துறவியின் கலை சொட்டும் முகம் பார்ப்பதற்கு அழகாக இருந்தது. தளபதியின் உருவத்தைத் துறையின் அருகில் கரையின் மேல் கண்டதும் தோணி நின்றது. "யாரது? கரையில் வந்து நிற்பது? இந்நேரத்துக்கு வேற்று ஆட்களைத் தோணியில் ஏற்றும் வழக்கம் இல்லை" என்று கூச்சலிட்டான் அம்பலவன் வேளான்.

அதைக் கேட்டு மெல்லத் தனக்குள் சிரித்துக் கொண்டே, "மகாமண்டலேசுவரருக்குத் தளபதி வல்லாள தேவனின் வணக்கங்கள் உரியனவாகுக!" என்று கூறியவாறு தீப்பந்த வெளிச்சம் தன் முகத்தில் படும்படி படகு அருகே நின்று கொண்டான் தளபதி.

கம்பீரமான தோற்றமும் அறிவொளி வீசும் முகத்தில் கூர்ந்து நோக்கும் கண்களும் கொண்ட இடையாற்றுமங்கலம் நம்பி, "யார் வல்லாளதேவனா? ஏது இந்த அர்த்த இராத்திரியில் இப்படி இங்கே திடீர் விஜயம்?" என்றார். அப்பப்பா! என்ன மிடுக்கான குரல்?

"மகாராணியார் ஒரு அவசர காரியமாக அனுப்பி வைத்தார்கள்."

"சரியான சமயத்துக்குத்தான் வந்தாய்! இன்னும் கால் நாழிகை கழித்து வந்திருந்தால் எங்கள் தோணி அக்கரை சென்று அடைந்திருக்கும். வா! நீயும் படகில் ஏறிக் கொள். மாளிகையில் போய்ப் பேசிக் கொள்ளலாம்."

"தளபதியாரே! வாருங்கள்" என்று சிரித்துக் கொண்டே அவனுக்கு இடம் கொடுத்தாள் மண்டலேசுவரரின் புதல்வி. படகிலிருந்த மூன்றாவது ஆளாகிய வாலிபத் துறவி 'உம்'மென்றிருந்தார். அவர் பேசவேயில்லை. படகு மறு கரையை அடைகிறவரையில் அவர் பேசவேயில்லை.

(தொடரும்)



நாள் முழுவதும்
கவர்ச்சிகரமாக
தோற்றமளிக்க

ஸாண்டல்வுட் டாய்லட் பவுடர்

சுத்தமான தனி சந்தனத்தை மென்மையாக்கப்பட்டது...

ஸாண்டால்

சந்தனத்துடன் கூடிய டால்கம் பவுடர்....

டி. எஸ். ஆர் & கோ

கும்பகோணம்

A. K. GOPAL & CO.

விநியோகஸ்தர்கள்: மெஸர்ஸ் நாமகிரி டிரேடிங் கார்ப்பொரேஷன், 1, டாக்கர் சத்திரம் லேன், மேற்கு புலிவார் ரோடு, திருச்சி * மெஸர்ஸ் கோகுல் ஸ்டோர்ஸ், 179/1, சரத்போஸ் ரோடு, கல்கத்தா-26


கோத்ரெஜ் "டம்ளர்" பாட்லாக்

நங்கூரம் ⚓ மார்க்

ஆணியால் இறுக்கப் படாத தயாரிப்பு. கலவை உலோகங்களால் தயாரிக் கப்பட்டது. அதன் எஃகி னாலான பூட்டு வளையத்திற்கு துருவை எதிர்ப்பதற்காக "காட் மியம்-பிளேடிங் கொடுக்கப்பட்டி ருக்கிறது.

அதன் தரத்திலும் விலையிலும் சிறந்த மதிப்புடையது. உறுதியும் பாதுகாப்பும் மிதமானது.





ரூ. 3.25 மாத்திரம் (வரி தனி)
சிறிய சைஸ்: ரூ. 2.75 (வரி தனி)

சிறந்த பாதுகாப்புக்கு ஞாபகமாக உபயோகியுங்கள்

Godrej கோத்ரெஜ்

பித்தளை லிவர் பாட்லாக்கை

கோத்ரெஜ் அண்டு பாய்ஸ் மானுபாக்சரிங் கம். ப்ரைவேட் லிமிடெட்

ஸ்தாபிதம்: 1897

பாதுகாப்பு சாதனங்கள்—வீடு, ஆபீஸ் ஆஸ்பத்திரி, காண்டீன், வாகசாலைக்கான...எஃகு பர்னிச்சர் — டைப்ரைட்டர் — எஃகு ஜன்னல்கள்...

ஆஸ்த்மா சளி

முதல் நாளே கரைகிறது

ஆஸ்த்மா, பிராங்கைட்டிஸ், ஜலதோஷத்தால் மூச்சுத்திணறல், இருமல், தும்மல், மூச்சடைப்பு உபாதைகளால் அவதிப் படும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இப்போது மெண்டாகோ (Mendaco) அருந்தி அற்புத நிவாரணம் அடைகிறார்கள். இந்த நவீன, விஞ்ஞான, அமெரிக்க மருந்து இரத்தத்தின் வழியே சுவாசப் பைகள், சுவாசக் குழாய்கள், மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்ந்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் தும்மலின்றிச் சுகமாகச் சுவாசித்துக் குழந்தைபோல் தூங்கலாம். கெமிஸ்டிடம் மெண்டாகோ (Mendaco) வாங்குக. திருப்தி இன்றேல் பணம் வாபஸ்.

கால் அரிப்பு

3 நாளில் குணமாக்கப்பட்டது

உங்கள் கால்களில் அரிப்பு, புண் முதலியன ஏற்பட்டு உங்களை உபத்திரவப் படுத்துகின்றதா? இவைகளுக்கெல்லாம் காரணம் ஓர் கிருமி. இது உலகம் முழுவதும் பரவி, சிங்கப்பூர் சொறி, வண்ணாரப்படை என்ற பல பெயர்களில் வழங்கப்படுகிறது. நீங்கள் கிருமிகளின் காரணத்தை ஒழிக்கும் வரை இவ்வுபாதைகளை அகற்ற முடியாது. இப்புதிதாகக் கண்டு பிடித்த நிக்ஸோடர்ம் (Nixoderm) 7 நிமிஷத்தில் அரிப்பை நிறுத்தி, 24 மணி நேரத்தில் கிருமிகளைக் கொன்று, 3 நாளில் சருமத்திற்கு இதமளித்து மிருதுவாக்கி சுத்தப்படுத்தி விடுகிறது. நிக்ஸோடர்ம் (Nixoderm) குணமளிப்பது நிச்சயம். முகம் அல்லது தேகத்திலுள்ள கரப்பான், முகப்பரு, கட்டி, படை போன்ற அநேக தீராத உபாதைகளையும் நிவர்த்திக்க உத்தரவாதம். அன்றேல் வெற்றுப் பெட்டியை அனுப்பினால் பணம் வாபஸ். இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடர்ம் (Nixoderm) கேளுங்கள். உத்தரவாதம் உங்களுக்கு பாதுகாப்பளிக்கிறது

Nixoderm
நிக்ஸோடர்ம்
சரும உபாதைகளுக்கு



65. நீர்க்கடுப்பு

"அப்பா! எனக்குச் சகிக்க முடியல்லே! இப்படி ஒரு குழந்தை பிள்ளைப் பூச்சியாய்ப் படுமோ!" என்கிறாள் பெற்ற தாய்.

"அவன் ரொம்பச் சன்னை பிடித்த மனிதன், ஸார். மனிதர்களைக் கரையானாக அரித்து விடுவான். அவனோடு பட முடியாது ஸார்!" என்கிறார் ஒருவர் தமது நண்பரைப் பற்றி.

"ஐயைய! அதன் நச்சரிப்பும் தொண தொணப்பும் அப்பப்ப சகிக்க முடியாது. பெரிய நீர்க் கடுப்புக்காரப் பேர்வழி!" என்கிறார் வேறொருவர் தமது நண்பரைப் பற்றி. மனிதனை அஃறிணையில் சொல்லுமளவுக்கு விஷயம் முற்றிப் போய் விட்டது.

வண்டு போல் துளைத்து விடுவான் என்றும், தேள் மாதிரி நிமிஷத்துக்கு நூறுதரம் கொட்டிக் கொண்டே இருப்பான் என்றும், குளவியாகக் கொட்டுவான் என்றும்-பிறரைப் பற்றிய விமர்சனத்தைப் பலரும் சொல்லப் பல தரம் கேட்டிருக்கிறோம்.

அவன் ஒரு நீர்ச்சுருக்குப் பேர்வழி. ஸ்ரீமான் மூத்ரகிருச்ரம் என்று பலவிதத்தில் வர்ணனைகள். "மூனு கினு" என்று பெயர் வைத்துச் சங்கேதமாகப் பேசத் தொடங்குவதும் உண்டு.

இந்த நாமாவளிக்கெல்லாம் என்ன பொருள்? சகிக்க முடியாத வேதனை, வேதனையைத் தருபவர் என்றுதான் அர்த்தம்.

வண்டு துளைப்பதும், குளவி கொட்டுவதும் கரையான் அரிப்பதும் எப்படியானாலும் சரி. இந்த நீர்ச் சுருக்கு, அல்லது மூத்ரகிருச்ரம் என்னும் நீர்க்கடுப்பு உண்டே! அது சகிக்கவே முடியாத நரக வேதனையைத் தருவது.


அடிக்கடி மூத்திரம் போகும். சுழியும் சிறு நீரோ மிகமிகச் சொற்பமாகத்தான் இருக்கும். சிலசமயம் சில சொட்டுகள் தான் போகும். போகும்போது ஏற்படும் கடுப்பும் வலியும் சொல்லி முடியாது. சிலசமயம் எரிச்சல், போகும் மார்க்கத்தில் ஆவியோ புகையோ போவது போன்ற நரக அனுபவம். சில சமயம் ஒரு சில துளி ரத்தமும் அல்லது ரத்தம் கலந்த சிறு நீராகவும் போவதுண்டு.

ஆகார விஹாரங்களில் உஷ்ணம் அதிகரிக்கும் சந்தர்ப்பம் ஏற்படுமானால், திடீரென்று இவ்வித உபத்திரவம் உண்டாகும். நாலு நாட்கள் தொடர்ந்து ரயில் பிரயாணம், அல்லது வெய்யிலில் சுற்றி அலைதல்; அல்லது இரவில் கண் விழித்தல்; அல்லது எண்ணெய்க் குளி முறைப்படி ஏற்காமை; அல்லது உஷ்ணகாலத்தில்பழக்கமான ஆகாரங்களைச் சாப்பிடத் தவறுதல், அல்லது மாம்பழம், பப்பாளிப் பழம், 'அமிதமான [மிளகாய்] காரம், அமிதமான புளி இவை கூடிய ஆகாரங்களைப் புசித்தல்;—இத்தகைய காரணங்களால் இவ்வகை உபத்திரவம் ஏற்படுவதுண்டு.

இது ஒரு வகை. இதுதான் அடிக்கடி காண நேரிடுவது. இதற்கு எளிதில் நாமே செய்து கொள்ளக்கூடிய 'சிட்கா' சிகிச்சைகளைத் தெரிந்து கொள்வது நலம். அவசியமும்கூட.

சிலக்கேட்டினால் ஒருவகை நீர்க்கடுப்பு ஏற்படுவதுண்டு. இதிலும் மேலே விளக்கிய உபாதைகள் இருக்கும். ஆனால் இந்நோயில் நீர்க்கடுப்போடு நிற்காமல், சிறு நீர் கழியும் மார்க்கத்திலிருந்து தவித்தும், சிறுநீருடனும் சீழ் ஒழுகும் நிலை ஏற்படும். மேலும் இதன் விளைவாக லஸிகா கிரந்திகள், [Lymphatic Glands] அழற்சியுற்று வீங்குவது உண்டு. அதன் காரணமாக ஜுரம் முதலியவைகூட உண்டாகக் கூடும். அழற்சிக்கு உட்பட்ட கிரந்திகள் கட்டிகளைப் போல் பருத்துப் பழுத்து உடைவதும் உண்டு. இப்படிப் பலவித இன்னல்கள் ஏற்படலாம். இதைப் பூயமேசம் என்பர். தமிழ் நூல்களில் சீழ் மேகம் என்டர். இதில் விஷக் கிருமிகளின் விஷமத்தனமும் இருக்கும். சரிவரத் தக்க சமயத்தில் இதைச் சிகிச்சை செய்யா விட்டால் இந்த வியாதிக்குக் காரணமான விஷக்கிருமிகள் தாதுக்களில் பதுங்கி இருந்து பிற்காலத்தில் ஆமவாதம் போன்ற வியாதிகளை உண்டாக்கக்கூடும். மக்கட்பேறு உண்டாவது அரிதாகும். மக்கட் பேறு ஏற்படினும் அக்குழந்தைகள் மிகவும் நோஞ்சலாகவும் எண்ணற்ற பிணிகளுக்கு இருப்பிடமாகவும் நடைப்பிணங்களாய்த் தாமும் அவஸ்தைப்பட்டுப் பெற்றோரையும் அளவுகடந்த அல்லலுக்கு உள்ளாக்கும்.

சுழியும் சிறுநீர் முழு வேகத்துடனில்லாது ஒழுகிப் போவதாயிருக்கும்



அல்லது தடைபட்டுத் தடைபட்டு ஒழுகுவதா யிருக்கும். சிறுநீர் போகும் முன்போ அல்லது முழுவதும் போன பிறகோ சிறிது ரத்தம்—அல்லது சில துளிகள் ரத்தம் போகும். மற்றும் சிறு நீரைக் கழிப்பதில் உள்ள கஷ்டங்கள் மேற்சொன்ன வகையில் சிறிதும் குறை யாததா யிருக்கும். மூத்திராசயத்தில் "அச்மரி" எனினும் கற்கள் இருப்பது தான் இதற்குக் காரணம்.

பொதுவாக, இவை யாவற்றுக்கும் சிகிச்சையின் அடிப்படைத் தத்துவம் ஒரேவிதந்தான்.

நோய், நோயின் காரணங்கள், நோயில் உண்டாகும் குறிகள் ஆகிய வற்றின் விவரங்களை இம்மட்டோடு நிறுத்திக் கொண்டு சிகிச்சை விஷயத் தைக் கவனிப்போம்.

இவற்றுள் முதலாவதாகச் சொன்ன நீர்க்கடுப்பில் சில சமயம் மலச்சிக்க லும் இருக்கும். இதற்கு, திராக்ஷாதி இதமானது. இதனால் மலபந்தம் நிவர்த்தியாவதோடு கடுப்பு நீங்கிச் சிறு நீரும் தாராளமாகப் போகும்.

இந்த நீர்க் கடுப்பு ஓரளவு ஜீரணக் கோளாறுடு சம்பந்தப்பட்டும் உண் டாகலாம். அவ்விடங்களில் திரண பஞ்சமூல கஷாயமும் சிறு பஞ்ச மூலத்தின் கஷாய மும் கொடுக்கத் தக்கவை.

துத்தி விதையின் சூர் ணத்தை ஸப்ஜா (இஸ்கோல்-இஸ்பகோல்) விதையின் ஊறல் நீருடன் குடிப்பதும் நல்லது.

இனி, இந் நோயில் சித்தர் விளக்கிய தமிழ் நூல்களி லிருந்து சில மருந்துகளைத் தெரிந்து கொள்ளுவோம்.

1. அதிமதுர லேஹியம்:— அதிமதிரம் வராகன் எடை 18 ஐ 4 ஆழாக்கு பசுவின் பாலில் கலக்கி—பசுவின் நெய் 4 ஆழாக்கும்—பழுப்புச் சர்க் கரை (பூரா எனப்படுவது) 4 ஆழாக்குமாகக் கூட்டிக் காய்ச் சிக் கிண்டி லேகிய பாகத்தில் முடித்து வைத்துக் கொள்ள வும். இதில் வேளைக்குக் கொட் டைப்பாக்கு அளவாக, தினம் இரண்டு வேளை சாப்பிட்டு வர நெடுநாட்களாக நிலை பெற்றுள்ள, அல்லது அடிக்கடி ஏற்படும் 'சிறுநீர் எரிச்சல்' குணமாகும்.

2. செவ்வல்லியின் பூவினால் செய்த மணப்பாகு சிறு நீரின் எரிச்சல் நீர்க்கடுப்புகளைப் போக் குவதில் மிகச் சிறந்தது.

செவ்வல்லிப் பூவின் தளங்களைக் கஷாயஞ் செய்து, சீனி கற்கண்டு கூட் டிக் காய்ச்சிய பானகம் அல்லது ஸிரப் அல்லது ஷர்பத்தை மணப்பாகு என்று அழைப்பர். இதில் 1 டீஸ்பூன் அளவை ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலக்கித் தினம் 2 வேளை கொடுத்து வரலாம். அல்லது மேலே துத்தி விதைக்கு அனுபானமாகச் சொன்ன ஸப்ஜா விதையின் ஊறல் நீரில் கலக்கியும் கொடுக்கலாம்.

3. செவ்வல்லியின் கிழங்கைக் காய வைத்து இடித்துச் சலித்து எடுத்த நுண்ணிய தூளில் வேளைக்கு 2 சிட் டிகையளவு முதல் அரை டீஸ்பூன் அளவு வரையில் மேலேசொன்ன அனு பானத் திரவங்களுடன் தினம் இரண்டு வேளை கொடுக்கலாம்.

4. இலவின் இலையை அரைத்து, நெல்லிக் கனியளவு ஒரு வேளைக்கு, பசுவின் பாலில் கலக்கிக் குடிக்கச் சிறுநீர் எரிச்சல் உடனே சமனமாகும்.

5. இலவின் பூவின் கஷாயத்தைக் கொடுப்பதும் நல்லது.

6. இலவின் உலர்ந்த பூவுடன் கசகசா சேர்த்து அரைத்து, வெள்ளாட்டுப் பாலில் கலக்கிச் சர்க்கரையும் சேர்த்துக் காய்ச்சியதில், வேளைக்குக் கால் பலம் விதம் தினம் 2-3 வேளை கொடுக்கலாம்.

7. இலவின் வித்து [மேலோடு நீக்கப்பட்டது] ஒரு பங்கு, சீரகம் அரைப் பங்கு, வால் மிளகு கால் பங்கு எனக் கூட்டிய சூர்ணத்தில் ஒன்று முதல் இரண்டு இரண்டரை வராகன் எடையாகத் தினம் இரண்டு வேளை கொடுத்து வரச் சிறுநீரில் உள்ள எரிச்சல் — நீர்ச் சுருக்குஆகியவைகளைச் சமனப்படுத்தும்.

8. உளுந்தைத் தண்ணீரில் ஒரு நாள் ஊற வைத்திருந்து மறுநாள் இறுத்து எடுத்து அதன் தெளிவை அதிகாலையில் அருந்த மூத்திராசய சம்பந்தமான அழற்சி முதலியவை தீரும்.

9. கட்டுக் கொடி என்று ஒரு கொடி. இதில் இரண்டு வகை உண்டு. சிறு கட்டுக் கொடி, பெருங் கட்டுக் கொடி என்று இவற்றுக்குப் பெயர். இரண்டுக்கும் ஒரு பொது குணம் உண்டு. இதன் இலையைக் கசக்கிப் பிழிந்த சாற்றைத் தண்ணீரில் விட்டால், நீர் வெண்ணெய் போலக் கெட்டியாகிவிடும்.

இதன் இலைச் சாற்றோடு சிறிது சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்க, பிரமேஹம் (Diabetes) நீர் எரிச்சல், நீர்க் குத்தல் ஆகியவை குணமாகும்.

மதுமேஹத்தில் இதன் பலனை நான் இட்டமாக அறிய வாய்ப்பு கிடைக்க வில்லை. மற்றுள்ளவற்றில் உடனே பலன் தருகிறதென்று தெளிந்துள்ளேன். ஆராய்ச்சி, ஆராய்ச்சி என்று சொல்லிக் கொண்டிருப்பவர் இதன் இலை எவ்வளவு தூரம் மதுமேஹத்தில் குணம் தருகிறதென்று பரீட்சித்து அறிந்துதெரிவிப்பாராஞல் நல்லது. இதைக் கட்டுக்கொடி என்று தமிழிலும், தூஸரிதீக என்று தெலுங்கிலும், தகட, கட்டேதிகே என்று கன்னடத்திலும், கட்டுக்கொடி என்று மலையாளத்திலும், ஜலஜாம்ரிவனஜவல்லீ என்று ஸம்ஸ்கிருதத்திலும் காக்குலஸ் வில்லோஸஸ் என்று லத்தீன் பாஷையிலும் சொல்வார்கள்.

10. கரும்பின் வேரை நசுக்கிக் கஷாயம் காய்ச்சிக் குடித்தாலும் சிறுநீரிலுள்ள எரிச்சல், நிற பேதம் ஆகியவை நீங்கும்.

11. கல்யாணப் பூசனிக்காயின் உள் செம்பருத்திப் பூவைப் போட்டு ஊற வைத்து ரசமெடுத்து, அதனுடன் சர்க்கரை சேர்த்துக் கொடுத்தால், நீர் எரிச்சல் சமனமாகும்.

12. சோற்றுக் கற்றாழையின் ரஸத்துடன் வெண்ணெய் கற்கண்டு வால் மிளகுத்தூள் இவை சேர்த்து உண்ண நீர்ச்சுருக்கு நீங்கும்.

13. முள்ளுக்கீரை எங்கும் முளைக்கும் ஒரு பூண்டு. இதன் வேரை எடுத்து நசுக்கிக் கஷாயம் வைத்து, வேளைக்கு இரண்டு முதல் நாலு அவுன்ஸ் வரையில் தினம் இரண்டு வேளை கொடுக்க நீர்க்கடுப்பு குறையும்.

14. சரக் கொன்னையின் பூவை அரைத்து நெல்லிக்காய் அளவு எடுத்துப் பாலுடன் கலக்கிக் குடிக்க நீர்க்கடுப்பு நீங்கும்.

15. சீந்திற் சர்க்கரை [இதை குடூசி ஸத்வம் என்று சொல்வர்]யில் வேளைக்கு இரண்டு சிட்டிகை விதம் தினம் இரண்டு வேளை வெண்ணெயில் குழைத்துக்கொடுத்தாலும் நீர்க்கடுப்பு நீங்கும்.

16. சிறு பீளை என்றும், கல்லூர் வஞ்சி என்றும் பாஷாண பேதி என்றும் சொல்லப்படும் ஒரு பூண்டு. இதன் வேரைக் கஷாயம் செய்து அத்துடன் சிறிது சீனி கற்கண்டும் சேர்த்துக் குடித்தால், சிறுநீரின் எரிச்சல் நீங்கிவிடும்.

17. தண்ணீர்விட்டான் கிழங்கின் இடித்துப்பிழிந்த ரசத்தைக் குடிப்பதும்,

18. நெருஞ்சில் முள் கஷாயத்தையோ, அதன் சூர்ணத்தையோ சாப்பிடுவதும்,

19. தனித்த இளநீரைக் குடிப்பதும், சிறுநீர் எரிச்சலைப் போக்கவல்லவை.

20. கற்சுண்ணாம்பைக் கால் கட்டை விரல்களின்மேல் பூசி, ஒரு கட்டி வரட்டிச் சாம்பலைத் தண்ணீர் நனைத்துத் தொப்புளின்மேல் சற்று நேரம் வைத்திருந்தால் சிறு நீர் எரிச்சல் மூத்திர மார்க்கத்திலுள்ள புகைச்சல் ஆகியவை உடனே சமனமாகும்.

21. படிக்காரம், சீனிகற்கண்டு, நெல்லி முள்ளியின் சூரணம் இவற்றைச் சமன் எடையில் கலந்து வைத்துக் கொண்டு, வேளைக்கு இரண்டு கழஞ்சி விதம் [ஆறு கழஞ்சி ஒரு தோலா] தினம் இரண்டு வேளை தண்ணீருடன் கொடுக்க நீர்ச் சுருக்கு, நீர்க்கடுப்பு நின்றுவிடும்.

22. புளியங் கொட்டையின் மேற்றோலை இளநீர் விட்டு அரைத்து ஓர் இரவு பனியில் வைத்திருந்து சுண்டையளவாகத் தினம் இரண்டு வேளை உண்ண, நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு இவை ஒன்றிரண்டு வேளைகளில் தீரும்.

23. வெறும் புளியங் கொட்டைத் தோலை மென்று தவடையில் அடக்கிக் கொண்டு ஊறும் உமிழ் நீரைச் சிறுகச் சிறுக விழுங்கிக் கொண்டே இருந்தாலும் நீர்க்கடுப்பு,நீர்த்தாரையில் புகைச்சல் போன்ற அழற்சியின் குறிகள் யாவும் குணமாகும். **(தொடரும்)**

கோபம் ஏனோ!

சி. பி. சுப்பிரமணியம்



"ஏண்டா மணி-இப்படியா மூக்குக் கண்ணாடியை உடையும்படி வைப்பது? சே...சே! எப்படி நீ வாழப் போகிறாயோ?" என்று சொல்லி விட்டு மூக்குக் கண்ணாடி அணிந்து கொண்டு புறப்பட்டார், என் சித்தப்பா.

என் சித்தப்பாவின் பெயரை நினைத்தால் எனக்கு வேடிக்கையாகவே யிருக்கிறது. மகா கோபக்காரரான என் சித்தப்பாவின் பெயர் சாந்தலிங்கம் என்றால் கேட்பவர்கள் நம்ப மாட்டார்கள். ஒரு சமயம் என் பாட்டி உயிருடன் இருந்த காலத்தில் சொன்ன சொற்கள் இன்னும் காதில் ஒலிக்கின்றன.

"மணி! உங்க சித்தப்பா மற்றவங்க போல் பிறந்த உடனே அழவில்லை. ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. அதனால்தான் உங்க தாத்தா இவன் சாந்த சொரூபமாக இருப்பான் என்று நினைத்துச் சாந்தலிங்கம் என்ற பெயரை இவனுக்கு வைத்தார்!"

பாட்டி இந்த வார்த்தைகளை மீறிக் காரியங்கள் நடக்கப் போகின்றன என்பதைக் கண்டாளா, என்ன? என் சித்தப்பா நாளொரு விதமாக முகத்தைச் சுளித்துக் கொண்டும், பொழுதொரு விதமாகக் கோபக் குறியுடனும் தம் காலத்தை நடத்திக் கொண்டு வருவது தெருவோருக்கு மனக்கலக்கத்தை அதிகம் ஏற்படுத்தியது.

கிடையராகி வந்த சம்பந்தமூர்த்தி கண்டிப்பானவர். அதுவும் பிச்சைக்காரர்களிடம் தர்மம் செய்தபோது எண்ணி நயாபைசா போட்டதைக் கண்ணால் கண்ட பிறகு அவர் கண்டிப்பை மறுக்க முடியுமா? சம்பந்தமூர்த்தியின் கண்டிப்பு அவர் வளர்க்கும் நாய்க்குத் தெரிந்திருக்க நியாயம் உண்டா? ஒருநாள் என் சித்தப்பா சாந்தலிங்கம் தெரு வழியாகப் போனபோது சம்பந்தமூர்த்தியின் நாய் குரைத்துத் தொலைத்தது.

என் சித்தப்பாவுக்கு நாய்மீது மகா கோபம். உடனே வார்த்தைகளை வீச ஆரம்பித்தார்.

'சொறி நாய்கள் தொந்தரவு பெரிய தொல்லையாகப் போச்சு. சே...சே...வளர்ப்பவர்கள் இந்த மாதிரியா வளர்ப்பார்கள்?'

சித்தப்பாவின் பேச்சு சம்பந்தமூர்த்தியை உடனே தாக்கியது.

'முஷ்டியை உயர்த்திக் கொண்டு அவர் சண்டைக்கு வந்து விட்டார். அவர் வாய் படபடவெனப் பேச ஆரம்பித்தது. கண்கள் சிவந்தன. உடம்பு ஆடியது. பெரிய சரீரம். நடக்க முடியாமல் நடந்து கேட்டின் பிடியைப் பிடித்துக்கொண்டு பேச ஆரம்பித்தார்:

"ஓய்? நீர் என்னை யாரென நினைத்தீர்? சொறி நாயா நாங்கள் வளர்க்கிறோம்? என்னை வேண்டுமானால் பேசுங்கள். ஆனால் என் நாயை எப்படிக் குறைவாக நீர் பேசலாம்?"

என் சித்தப்பாவின் உடம்பு ஆடியது. மலை போல வந்த சம்பந்தமூர்த்தியைக் கண்டு பயத்தால் ஆடியதா, அல்லது தன்னைத் தாக்க வரும் மனிதருக்காக நரம்புகளின் துடிப்பின் எதிரொலியா என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும்போது நாய் மீண்டும் பலமாகக் குரைத்தது.

"வாருங்கள், சித்தப்பா! போகலாம்" என்று கையைப் பிடித்து இழுக்காவிட்டால் யுத்தமுஸ்தீப்பில் அவர் இறங்கிவிட்டிருப்பார்.

நல்ல வேளை. சம்பந்தமூர்த்தியை உள்ளேயிருந்து 'அப்பா' என்று கூப்பிட்டார்கள். சம்பந்தமூர்த்தி உள்ளே போனார். என் சித்தப்பா நகராமல் அங்கேயே நின்றுகொண்டிருப்பதைக் கண்டு உலுக்கினேன். "இன்னுமா கோபம்? வாருங்கள்" என்று சொன்ன பிறகு நடக்க ஆரம்பித்தார்.

ஒரே சிந்தனை. அதுவும் சம்பந்தமூர்த்தியின் நாயைப் பற்றிய சிந்தனை!

என் சித்தப்பாவை வென்றுவிடவென்றோ, அல்லது பழி வாங்க வேண்டுமென்றோ போகும் போதும் வரும்போதும் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தது அந்த நாய். என் மனம் கூடச் சில சமயம் வெறுத்துப் போகுமளவுக்கு இந்த நாய் குரைத்துக் கொண்டிருந்த தென்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

என் தம்பி வேணு ஒரு நாள் ஓடி வந்து என் சித்தப்பாவிடம் ஏதோ சொன்னான்.

"அடாடா. நானே அதைக் கொன்றுவிட நினைத்தேன். உம்...செத்தா போய்விட்டது!" என்று நொந்து கொண்டார். நானும் 'அப்பாடா! பிரச்னை தீர்ந்தது!' என்று வாய் விட்டுச் சொல்லி விட்டேன்.

இதற்கு மறுநாள் சித்தப்பா சம்பந்தமூர்த்தியின் வீட்டு வழியாகப் போனபோது தம்மீது தூசுகள் விழுவதை உணர்ந்தார்! உடனே விசுவாமித்ர முனிவராக மாறிவிட்டார்!

"கண்ட குப்பைகளைத் தெருவிலே நடக்கும் மனிதன் மீதா கொட்டச் சொல்வது? ஏனய்யா உமக்கு என்மீது இப்படிப்பட்ட கோபம்?" என்று கேட்டுக் கொண்டே கேட்டைத் தாண்டி உள்ளே நுழைந்தார் சித்தப்பா. சம்பந்தமூர்த்தி வீட்டில் இல்லை. அவருடைய மகள்தான் வெளியே வந்தாள்: நான் 'இனி என்ன நடக்குமோ?' என நினைத்துத் திகைத்தேன் வெளியே நின்றபடி.

"நீங்கள்......?"

அவள் வார்த்தைகள் தடுமாறின.

"குப்பைகளை வழியில் போவோர்மீதுதான் கொட்டுவது வழக்கமோ?"

"குப்பையா?"

"இல்லை......பன்னீர் தெளித்தீர்கள்!"

அவள் பேசாமல் தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

யாராவது கோபமாகப் பேசினால் உடனே பதிலுக்குப் பேசினால் கோபம் அதிகமாகிறது. பேசாமல் மௌன விரதம் பூண்டால், கோபித்தவரே சாந்தமடைவதுதானே வழி?

"இனிமேலாவது குப்பைகளை இப்படிக் கொட்டாதீர்கள்" என்று சொல்லி விட்டு என் சித்தப்பா வெளியே வந்தார்.

என் அப்பா மீண்டும் கல்யாண விஷயத்தை ஆரம்பித்தார். சித்தப்பாவுக்கு இப்போது இந்த பிரச்னையில் நாட்டம் ஏற்பட்டிருக்கிறது என்று யாருக்குத் தெரியும்?

"அண்ணா! கல்யாணம் செய்து கொள்வது என் இஷ்டம். எனக்குப் பிடித்தவளாக நானே தேடி கொண்டு வருகிறேன்" என்றார் சித்தப்பா ஒருநாள்.

"நீ பேசிப் பெண்ணைக் கூப்பிட்டுக்கொண்டு வருவதற்குள் நான் கிடையராகி விடுவேன்" என்று அப்பா சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டார்.

தெருவில் உள்ளவர்கள்-அதாவது என் சித்தப்பா வயதுடையவர்கள் - எல்லோரும் ஒரு குழந்தையைத் தூக்கிக்கொஞ்சிக்கொண்டு இருக்கும்போது, என் சித்தப்பா இந்த விஷயத்தில் பொறுமையுடன் இருப்பது வேடிக்கைதானே. ஆண்டவன் என் சித்தப்பாவுக்கென்று ஒரு புண்ணியவதியை இனிதான் பிறப்பிக்க வேண்டுமா? பல் போன கிழவர் ஒருவருக்கு மகா அமர்க்களமாகக் கல்யாணம் நடந்தபோது நல்ல இளங்காளையான சித்தப்பாவுக்கு ஏன் கல்யாணம் நடக்கவில்லை என நானே கேள்வியைப் பலமுறைகள் எனக்குள் கேட்டுக் கொண்டேன்.



விளக்கடியில் உட்கார்ந்து கொண்டு 'ஹார்டியின்' நாவலைப் படித்துக் கொண்டிருந்த போது என் சித்தப்பா வந்தார்.

"ஏண்டா மணி-கதை படிக்கிறாயா?"

"ஆமாம்."

"காதல் கதையோ? யார் எழுதியது?"

"ஆங்கில நாவலாசிரியன்ஹார்டிஎழுதியது. ஆமாம்.....ஏன் சித்தப்பா உங்களுக்கு எப்போது கல்யாணம்?"

"எனக்கா கல்யாணம்?"

என் சித்தப்பாவுடன் எல்லா விஷயங்களிலும் சரிநிகர் சமமாகப் பழகும் எனக்கு என்ன பதில் சொல்கிறாரோ என்று அவரையே மேலும் கீழும் பார்த்தேன். வானத்தை ஜன்னல் மூலமாகப் பார்த்து விட்டு அவர் என் பக்கம் திரும்பினார்.

"நான் அழகுதானே?"

சித்தப்பா இவ்வாறு கேட்டபோது எனக்குத் தூக்கிவாரிப் போட்டது!

"ஆமாம்" என்றேன்.

"இளம் வயதுதானே எனக்கு?"

"ஆமாம்!"

"சம்பாதிக்கச் சக்தி உடையவன்தானே?"

"மறுக்க முடியுமா?"

"இவ்வளவிருந்தும் என்னை மோசமாக எங்கெல்லாம் பேசுகிறார்கள். தெரியுமா, மணி? உம். நான் தனிப் பிறவியாம்."

சோகம் ததும்பியது வார்த்தைகளில். நல்ல மனிதரைக் கண்டபடி ஏனோ சித்திரவதை செய்கிறார்கள் என்று எண்ணியவனாக மீண்டும் நாவலில் மூழ்கினேன்.

கோபம் என்ற கொடிய வியாதி என் சித்தப்பாவைப் பற்றாமலிருந்தால் எவ்வளவு பெண்கள் 'நான்' 'நீ' என்று போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள்? நாவலில் வரும் கதாநாயகனை என் சித்தப்பா காட்சியளித்தபோது-கதாநாயகியாரைத் தேடுவது என்ற பிரச்னையில் ஈடுபட்டேன்.

ஒருநாள் கண்ணாடியின் எதிரே என் சித்தப்பா நீண்டநேரம் நின்றபோது எனக்குச் சந்தேகம் தோன்ற ஆரம்பித்தது. என்றைக்கும் கண்ணாடி எதிரில் அவர் இவ்வளவு நேரம் நின்றதில்லையே!

"சித்தப்பா!" என்றேன் நான்.

"உம்!" என்றார் தலையை வாரியபடி.

"எந்தச் சுயம்வர மண்டபத்துக்குப் போக இந்தக் கோலம்?"

"சுயவரம் மண்டபத்துக்குப் போவதற்கு முன்னால்தான் தலையை வாரிக்கொள்ள வேண்டுமா, என்ன?"

"அதில்லை சித்தப்பா-அலங்காரம் பிரமாதமாயிருக்கிறதே!"

சித்தப்பா சாந்தலிங்கம் பதில் சொல்லாமல் மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு

வெளியே நடந்தார். என் மனத்தில் கேள்விக் குறி எழுந்தது. 'யாருக்காக இந்த அலங்காரம்?'

கோயிலுக்குப் போய் வந்த அம்மா, அப்பாவிடம் சொல்லிக் கொண்டிருந்த செய்திகளை என் காதுகள் தீட்டிக் கொண்டு கேட்டன

'உங்க தம்பி குணம் மாறுகிறதோ?'

'ஏன் அப்படிக் கேட்கிறாய்?'

'இன்று கோயிலில் குங்குமம், புஷ்பம், எல்லாவற்றையும் கூட்டத்தில் உங்க தம்பி மேல் கொட்டி விட்டான் ஒருவன்...'

'என் தம்பியை ஆண்டவனாக நினைத்து விட்டானா? அப்புறம் என்ன நடந்தது?'

'சாதாரண விஷயத்துக்குத் தொண்டை கிழியக் கத்தும் அவர் பசுபோல் மௌனமாகக் கொட்டியவன் பொருள்களை எடுத்து அவனிடமே கொடுத்தார். தெருப் பெண்கள் இதையே பெரிதாகப் பேசிக்கொண்டார்கள்.'

அம்மா சொல்லிக் கொண்டு போனபோது என் மனம் 'அப்படியும் இருக்க முடியுமா?' என்று கேட்டுக் கொண்டது. என் சித்தப்பா சாந்தலிங்கம் இயேசுவாய், புத்தராய், காந்தியாய் மாறிக் காரியங்கள் செய்ய ஆரம்பித்து விட்டாரா? இந்த மாற்றம் எதனால்?

சித்தப்பாவைக் கேட்டுப் பதில் தெரிந்து கொள்ளத் துடித்தேன். ஆனால் சரியானபடி தனியாகச் சித்தப்பா அகப்படுவதில்லை. அவர் அறைக்குச் சென்று பார்த்தேன். முன்போல் அறை காட்சியளிக்கவில்லை. கந்தர்வ லோகம் போல் அறையை மாற்றி விட்டிருந்தார். தூய்மையாக இருந்தது ஒவ்வொரு மூலையும். இது எதனால்?

அவர் புத்தகப் பட்டியலைப் 'பார்த்துக் கொண்டு வந்தவன் அழகான குண்டு குண்டான எழுத்துக்களைக் கண்டு திடுக்கிட்டேன். பிரித்துப் படிக்க ஆரம்பித்தேன். இடையிலே உள்ள வரிகள்......

......'அப்பாவுக்கு உங்கள்மீது கோபம் சொல்லி முடியாது. நாய் இறந்தது கூட உங்கள் கெட்ட எண்ணத்தினால்தான் என்று சொல்லிக் கொண்டு வருகிறார்! நாம் இப்படிக் கண்டும் காணாமலும் பேசி வருவது தெரிந்தால்......

என் தம்பி உங்கள்மீது கோயிலில் அபிஷேகம் செய்தபோது தாங்கள் எப்படிப் பொறுத்துக் கொண்டு இருந்தீர்களோ? வேறு யாராவது இருந்தால் குடலைப் பிடுங்கி மாலையாகப்போட்டிருப்பார்கள். உங்கள் பொறுமை என்னை, ஏன், தெருப் பெண்களையே மெய் மறக்கச் செய்துவிட்டது.

ஆண்டவனை நினைத்து உருகும் பக்தனைப் போன்று என் மனம் உங்களை நினைத்து ஏனோ உருகுகிறது. மனத்து எண்ணங்கள் பூக்களாக மாறிப் போய் உங்கள்மீது வர்ஷித்துக் கொண்டிருக்கின்றன.

...... எப்படியாவது அப்பாவின் கோபத்தைப்போக்க நான் முயற்சி செய்கிறேன். நம் கல்யாண "நாளைச் சீக்கிரம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

உங்கள்
தங்கம்

அழகான காதல் கடிதம் என்று சொல்லிக் கொண்டே பூனைபோல் வெளியே வந்தேன்.



அப்பா சம்பந்தமூர்த்தியுடன் உட்கார்ந்து பேசுவது தெரிந்தது!

'உங்கள் தம்பியைக் கேட்டு விட்டுப் பிறகு சொல்லுங்கள்!'

'அவன் குணம் உங்களுக்குத் தெரியாதே!' என்றார் என் தந்தை.

'எல்லாம் தெரியும்! என்னைப்போல அவரும்! என் பெண் சாப்பிடாமல் சத்யாக்கிரஹம் செய்வது எனக்குப் பிடிக்கவில்லை. வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன். அவளுக்கு உங்கள் தம்பியைப் பிடித்துவிட்டது' என்றார் சம்பந்தமூர்த்தி.

'ஓஹோ!'

சம்பந்தமூர்த்தி செய்தியைச் சொல்லி விட்டுப் போன பிறகுதான் என் மனம் சித்தப்பாவின் அலங்காரத்துக்கும், பொறுமைக்கும் காரணம் கண்டது. வாழ்விலே பெண்களுக்கு உள்ள இப்படிப்பட்ட சக்தியைக் கண்டுதானோ காவியங்களிலே புகழ்கிறார்கள் கவிகள்.

சித்தப்பாமௌனமாகவந்தார் அறைக்குள்.

"ஏண்டா சாந்தலிங்கம்! உனக்கு ஒரு பெண் கிடைத்து விட்டாளே! சம்பந்தமூர்த்தியே வந்து கேட்டு விட்டு போனார்!" என்றார் அப்பா.

"சம்பந்த மூர்த்தியா?" கண்கள் என் சித்தப்பாவுக்கு அகல விரிந்தன.

"ஏன் சித்தப்பா-பக்திக்குத் தகுந்த பலனை அடைவது சகஜம்தானே? எண்ணங்களைப் பூக்களாக மாற்றி அர்ச்சித்தால் நடக்காத காரியம் உண்டா?" என்று கேட்டுச்சிரித்தேன்.

'கடிதத்தைப் பார்த்து விட்டாயா?' என்று கண்களால் கேட்டார். 'ஆமாம்' என்று கண்ணால் பேசிவிட்டு மாடிப் படியேறினேன்.

ஒரு ஜோடிக் கண்கள் திருமணத்துக்கு நடக்கும் பிரமாதமான ஏற்பாடுகளைக் கண்டால் எவ்வளவு சந்தோஷப்படும்?

தமிழ் கூறும் நல்லுலகம்

பம்பாய் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் ஜூன் மாதம் நடந்த கூட்டங்கள் இரண்டும் மிகச் சிறப்பாக அமைந்தன. 1-6-58ல் நடந்த கூட்டத்தில் அநேக ஆண்டுகளாகப் பம்பாயில் அமெச்சூர் நாடகங்களை எழுதியும், திறம்பட நடத்தியும் புகழ் பெற்ற திரு எஸ். ஆர். சாரங்கன் அவர்கள் 'மேடைக் கேற்ற நாடகங்கள்' என்னும் தலைப்பிலே கருத்துச் செறிவு மிக்க சொற்பொழிவாற்றினார். அவரது அநுபவங்களும், நாடகங்கள் பற்றிய ஆழ்ந்த ஆராய்ச்சியும் அழகு கூட்டிய அப்பிரசங்கம் குழுமி யிருந்தவர்களுக்கு ஒரு பெரும் இலக்கிய விருந்தாக அமைந்தது.

ஜூன் 15உ அன்று நடைபெற்ற கூட்டத்தில் எழுத்தாளர் திரு ஜெகசிற்பியன் அவர்களுக்குச் சங்கத் தலைவர் திரு எம். ஆர். ஜம்புநாதன் அவர்கள் தலைமையில் சங்கத்தின் சார்பிலே ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. அதுபோது எழுத்தாளர்கள் மாயாவி, எஸ். விஜயராகவன், வேணு, பி. வி. பாரதீயன் முதலியோர் அவரைப் பாராட்டிப் பேசினர்.

★

பினாங்கு இந்து சபா சார்பில் வான்மறை கண்ட வள்ளுவர் விழா ஜூன் 15ந்தேதி திரு டி. பி. எஸ். கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இராமகிருஷ்ணதமிழ்ப் பள்ளி மாணவிகள் இறை வணக்கத்துடன் ஆரம்பமான விழாவில் திருவாளர்கள் கா. கு. மாணிக்க முதலியார், ஆ. அ. ப. இராமதாஸ், சித இராமசாமி, செல்வி ப. பவளக்கொடி முதலானோர் சொற்பொழிவாற்றினார்கள். செல்விகள் இந்திராணி மணியம், கமலாமணிதேவி வீரசிங்கம், கௌரி வேணுகோபால் நடனவிருந்தும் நடைபெற்றது. தமிழ்மொழி வாழ்த்துடன் விழா இனிது முடிவுற்றது.

★

கல்கத்தா தமிழ் மாணவர் மன்றத்தின் ஐந்தாவது ஆண்டு விழா ஜூன் 6ந் தேதி முதல் 12ந் தேதி வரை வெகு சிறப்பாக நடைபெற்றது. கோவை பி. எஸ். ஜி. கலைக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு ம.ரா.போ. குருசாமி அவர்கள் விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கு கொண்டு பல அரிய சொற்பெருக்காற்றினார்கள்.

விழாவின யொட்டி டாக்டர் மு. வரதராசனார், டாக்டர் பம்மல் சம்பந்தனார் ஆகியோர் திருவுருவப் படங்களைத் திரு குருசாமி திறந்து வைத்தார்.



குமாரி பானுவின் பரத நாட்டியம் சபாவின் சபீபத்தில் வெகு விமரிசையாக நடந்தேறியது. 'பாரத தேசம்' என்னும் அபிநயத் தோற்றத்தில் குமாரி பானு காட்சியளிக்கிறாள்.

'தமிழிசைச்செல்வர்' திரு என். எஸ். வைத்தியநாதன் அவர்களின் தமிழிசை, விழாவின் சிறப்பான பகுதிகளில் ஒன்று. வங்க இசையும் விழாவில் இடம் பெற்றது. வங்க மேதை திரு என். கே. கோஷ் அவர்கள் விழாவினைத் துவக்கி வைக்க, வங்கப் பேராசிரியரும், மேல் சபை உறுப்பினருமான திரு என். சி. பட்டாசார்யா அவர்கள் போற்றியுரை வழங்கி விழாவைச் சிறப்புறச் செய்தார்கள். திரு குருசாமி அவர்களுக்கு விழா இறுதி நாளன்று மன்றத் தலைவர் திரு கா. சே. கோவிந்தராசனார் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

★

யாழ்ப்பாணத்திலேயுள்ள தமிழ் எழுத்தாளர்கள் எல்லோரும் சேர்ந்து, ''யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கம்'' என்ற பெயரில் ஒரு சங்கத்தை அமைத்திருக்கிறார்கள். திரு க. தி. சம்பந்தன் அவர்கள் எழுத்தாளர் சஙகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். எழுத்தாளர் சங்கச் செயலாளராகத் திரு த. திருநாவுக்கரசனும், பொருளாளராக அம்பிகைபாகனும் பணியாற்ற முன்வந்திருக்கிறார்கள். எழுத்தாளர் சங்க நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் விமர்சனப் பத்திரிகை ஒன்று நடத்துவதென்றும், ஒவ்வொரு ஆண்டிலும் வெளியாகும் சிறந்த கதை, கட்டுரை, கவிதை ஆகியவற்றுக்குப் பரிசுகள் வழங்குவதென்றும், பிற நாட்டு எழுத்தாளர்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

★

துங்கபத்திரா அணைக்கட்டில் பணி புரிபவர்கள் பாரதி நிலையம் என்னும் சங்கம் நிறுவி அதை நன்கு நடத்தி வருகிறார்கள். ஜூன் மாதம் 7ந் தேதி நிர்வாக இன்ஜினியர் திரு ஸ்ரீ. ஸ்ரீரங்காச்சாரி தமது பதவியிலிருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு, அவருக்குப் பிரிவுபசார விழா அச் சங்கத்தினர் விமரிசையாக நடத்தினார்கள். வந்திருந்தோர் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. ஓய்வு பெறும் இன்ஜினியர் திரு ஸ்ரீ. ஸ்ரீரங்காச்சாரி அவர்களின் திறமையைப் பலர் பாராட்டிப் பேசினார்கள்.

பாராட்டுரை வழங்கிய நண்பர்களுக்கும், அதிகாரிகளுக்கும் திரு ஸ்ரீரங்காச்சாரி தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

சகோதரியின் செல்வம்



''ரகு! சுவாமியை நமஸ்காரம் செய்தாயா? ஏதோ அவனை நம்பு. நியாயம் அவன்தான் தரவேண்டும். என்ன, ரங்கா! நீதான் தைரியம் சொல்ல வேண்டும், உன் சிநேகிதனுக்கு.''—காமாக்ஷி அம்மாள் மகனை வழியனுப்ப விரைந்தாள்.

''நியாயமா! நாம் இப்பொழுது செய்கிற காரியம் எந்த நியாயத்தில் சேர்ந்ததோ!''—ரகுநாதய்யர் தமக்குள் முணுமுணுத்தாலும் அவர் தாயாரின் செவிகளுக்கு அவ்வார்த்தைகள் தப்பவில்லை. அவள் கண்கள் ரங்கனை நோக்கின. அதன் குறிப்பை ரங்கய்யர் புரிந்து கொண்டு விட்டார்.


''என்ன, ரகு! நீயே இப்படிச் சொல்லிக் கொண்டால்...? உன் தம்பி மனைவி செய்வது மட்டும் நியாயமா? அப்படிப்பட்டவளுக்கு வழி இதுதான்!''

''சரி, சரி! இன்னும் கொஞ்ச நேரத்தில் சட்டபூர்வமாக எது நியாயம் என்று தெரிந்து விடுகிறது! ரகுநாதய்யர் நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டே வண்டியில் ஏறிக் கொண்டார்.

ஒரு பெண்ணுடன்—சொந்தத் தம்பி மனைவியுடன்—அதுவும் அவன் காலமான பிறகு—அந்தச் சொத்துக்குத் தான் வழக்குக்கு நிற்பது ரகுநாதய்யருக்கு வெட்கமாகத்தான் இருந்தது. ஆனால், சீதா!

அவளது வாடிய முகமும் ஏங்கும் இளமையும் அவர் நெஞ்சில் உறுத்தியதும் தம் செயலுக்குத் தாமே சமாதானம் செய்துகொண்டார். ஜானகிதான் ஆகட்டும்,—அவளுக்கு என்ன பிள்ளையா குட்டியா? ரகு—அவள் மைத்துனர்—தான் ஓட்டாண்டி. அவர் பெண் கலியாணத்துக்குக் கொடுத்து உதவினால் என்ன? சித்தப்பாவின் சொத்தில் பெண்ணுக்கு உரிமை இல்லையா? ஏன், அவர் தம்பி ராஜு படித்துச் சம்பாதித்தது எப்படி? எப்படியோ இன்று நண்பர்கள் பலரும், உறவினர்கள் சிலருமாகக் கூடிக் கூடிப் பேசிக் கொண்டு ரகுநாதய்யர் மனத்தில் ஜானகியை எதிர்த்து வழக்காடும் துணிவை ஊட்டி விட்டனர்.

வண்டிச் சக்கரங்கள் நாலு மைல்களுக்கு அப்பாலிருந்த நீதி மன்றத்தை நோக்கி உருண்டன. ரகுநாதய்யரின்



மனம் தம்பியின் நினைவில் லயித்து, சட்ட ஏடுகள் பேசுவதற்கு முன் தம் செயலைத் தாமே எடை போட்டுக் குழம்பிக் கொண்டிருந்த சமயம் ரங்கய்யர் அமைதியைக் கலைத்தார்.

"ரகு! நீயே இப்படி நம்பிக்கையில்லாமல் பேசினால் அவனுக்கு அல்லவோ இன்னும் தெம்பு அதிகமாகிப் போகும்!"

"ஏன், அப்பா! ஏதோ எல்லோருமாக என்னை நீதி மன்றத்துக்குள் பிடித்துத் தள்ளி விட்டீர்கள். ஆனால் உண்மையாகச் சொல்லுங்கள், இது நியாயமா? சுயமாகச் சம்பாதித்தது அந்தச் சொத்து. அவனுடைய மனைவிதான் அதை அடைய வேண்டும். அதில் நமக்கு என்ன பங்கு? நாம் கஷ்டப்படுகிறோம் என்றால் அதற்கு அவளா பிணைப்பட்டாள்?"

"அழகுதான், போ! ரகு! அன்று நீ 'மெட்ரிக்' பரீட்சையில் தேர்வதற்குள் உங்கள் அப்பா இறந்து போனதற்கும் கலங்காமல், எட்டு வயதுத் தம்பியை முன்னுக்குக் கொண்டு வருவது உன் பொறுப்பு என்று உணர்ந்து கொண்டாய். உடனே வேலையில் சேர்ந்து அவன் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டுமென்று உன் அம்மா ஆசைப்பட்டாள் என்பதற்காக அவள் மனசும் கோணாமல் உன் கலியாணத்துக்கு வாங்கிய வரதட்சிணையை அப்படியே அவன் கையில் கொடுத்துப் பட்டணத்துக்கு அனுப்பி வைத்து, அப்புறமும் இருந்த நிலத்தை விற்று, வீட்டை விற்று அவனை டாக்டராக்கினாய். போதாக்குறைக்கு லக்ஷ்மி வேறு தன்னிடம் இருந்த நகைகளையும் விற்றுக் கொடுத்தாள். கடைசியில் அவன் இஷ்டப்படியே ஒரு பெண்ணையும் கட்டி, சம்பந்திகளுக்கு அவனைத் தானம் பண்ணிவிட்டாய்! அவனும் அங்கேயே இருந்து விட்டான். அப்புறம் அவன் மாமனார் இறந்துவிட்ட பிறகு நாத்தனார்—மதனிக்கு ஒத்துக்கொள்ளாமல் அவள் தனியாகப் போனாள். அவள் கணவன் பிறக்கும்போதே டாக்டரா? இல்லையே! இப்பொழுது அவன் சொத்தில் பெற்ற தாய்க்கும் கஷ்டப்பட்டுப் படிக்க வைத்த உடன்பிறப்புக்கும் உரிமை இல்லை என்றால், அது என்ன நியாயம்? நீயும் என்ன, அன்றாடம் கஞ்சிக்கு அவளிடம் போயா நிற்கிறாய்? ஏதோ பெண்ணுக்குக் கல்யாணமென்று உதவிக்குக் கடன் கேட்கத்தானே போனாய்! பாவம், அந்தத் தாயில்லாப் பெண்ணின் குணத்துக்கே நல்ல இடமாக அமைய வேண்டும். அதற்கு இவள் இரங்கவில்லையென்றால், அவள் என்ன, பெண் ஜென்மமா? அதனால்தான் பகவான் அவள் வயிற்றில் ஒரு 'பூச்சி'கூட வைக்கவில்லை! அந்தத் தாயில்லாப் பெண்ணின் தாயார் லக்ஷ்மியை மறந்து விட்டாளா? செய் நன்றி அதற்குள் மறந்து விட்டதா?"

"'உஸ்'"—ரகு விரக்திப் பெருமூச்சு ஒன்று விட்டார்.

"ரங்கா! நான் கேட்டால் அவள் உடனே தூக்கித் தந்துவிட வேண்டுமா? எதை நம்பி அவள் எனக்குப் பத்தாயிரம் ரூபாய் தருவாள்? அவன் இருந்தால் நாம் கேட்பது நியாயம்! செத்தவனுக்கு நாம் செய்திருந்தால் இவளா அதற்குப் பாத்தியதை? நம் போதாத காலம்தான், அவன் ஊரோடு வந்து வீடு வாங்கிக்கொண்டு தங்கவேண்டும் என்று நினைத்ததும், 'பொக்'கென்று ஒரு நாள் அவன் பிராணனையே விட்டு விட்டான். என்னமோ, நடந்தது நடந்து விட்டது. பேசாமல் எங்கேயாவது கடன் வாங்கி நம் கைக்கு ஏற்ற இடமாகப் பார்க்காமல், நம் பெண்ணுக்குப் பெரிய இடம் தேடுவது பேராசைதானே! லக்ஷ்மி இருந்திருந்தால் இப்படி அவளிடம் பணம் கேட்கவே சம்மதிக்க மாட்டாள். மானி அவள்!"

"என்னடா, ரகு! அந்த லக்ஷ்மி இன்றைக்கு இல்லாமற் போனது எப்படியடா! இந்தப் பாவியைக் காப்பாற்றுவதற்குப் போய்த்தானே அந்த மகாலக்ஷ்மி...."

ரங்கன் வார்த்தையை முடிக்கவில்லை. நீதி மன்றத்தின் வாசலில் வண்டி வந்து நின்று விட்டது. போவோரும் வருவோரும், மலர்ந்த முகமும் வாடிய வதனமும் உயர் நீதி மன்றத்தில் ஒரு கை பார்த்துக் கொள்ளலாம் என்று கறுவுபவர்களும், அவர்களை உற்சாகமூட்டி உள்ளதைப் பிடுங்குபவர்களும், வக்கீல்களுமாக அந்த இடம் ஒரே கலகலப்பாக இருந்தது.

ரகுநாதய்யர் கண்களில் இவை ஒன்றும் படவில்லை. அவர் நினைவு முழுவ

தும் ரங்கய்யரின் கடைசி வார்த்தையில் புதைந்து கிடந்தது. 'இந்தப் பாவியைக் காப்பாற்றப் போய்த்தானே லக்ஷ்மி...'—அவர் உள்ளத்தில் ஓர்வித உணர்ச்சி! அதில் தம் செயலுக்கு ஒரு நியாயம் கண்டது அவர் மனம்.

இந்த ஜானகி அன்று பிழைக்காவிட்டால், லக்ஷ்மி இறந்திருக்க மாட்டாள். லக்ஷ்மி இருந்திருந்தால் இன்று இந்தக் குடும்பம் இப்படித் திண்டாடாது. அதனால்...அதனால்...இந்த ஜானகியின் சொத்தில் அவர்—லக்ஷ்மியின் ஒரே வாரிசான சீதாவுக்காக—பங்கு கேட்பது நியாயம். இன்று ஜானகி அனுபவிக்கும் பணம் மட்டுமா அவரது முயற்சியின் விளைவு? இல்லை, அவள் விடும் ஒவ்வொரு மூச்சும் அந்தக் குடும்பத்தின் தியாகச் சின்னம்! அன்பின் விளைவு!......

'வாங்க, வாங்க!'—வக்கீல் குருசாமி யாரையோ வரவேற்பதைக் கேட்டுத் திரும்பினார் ரகுநாதய்யர். வில் வண்டியிலிருந்து இறங்கினாள் ஜானகி. அவள் சகோதரன் சுப்புவும் கூட இறங்கினான். அடேயப்பா! இந்த ஒரு வருஷத்தில் அவன் எப்படிப் பருத்து விட்டான்! அத்தனையும் அக்காள் வீட்டுச் சோற்றில் ஊறிய இரத்தம்! அவனுக்கு இருக்கும் உரிமை, ரத்தத்தைச் சிந்தித் தம் தம்பியை வளர்த்த தமக்கு இல்லையா? ரகுநாதய்யர் மனம் பொருமியது.

* * *

"ஆஹா! மனுஷன் என்ன நினைத்தான்! ஒரு பெண்பிள்ளையை மிரட்டி உருட்டிப் பணம் பிடுங்கலாம் என்று எண்ணினான்! இந்த மாதிரி பேர்வழிகளுக்குப் புத்தி சொல்லத்தானே நீதி மன்றம் இருக்கிறது! அவள் புருஷன் போய்விட்டால் நாங்களெல்லாம் அவளுக்கு உதவி பண்ணாமல் விடுவோமா?"—சுப்பு அட்டகாசமாகச் சிரித்தபடி வெளியே வந்தான். "இவன் பெண்ணுக்குக் கலியாணம் பண்ண ஜானகி பணம் தர வேண்டுமா? நம்ப வக்கீல் ஐயா அபாரமாகப் பேசித் தள்ளி விட்டார்! ரூபாய் ஐயாயிரம் அல்லவா!"

"அட, பாவி!" புளிய மரத்தடியில் வாடிய முகத்துடன் உட்கார்ந்திருந்த ரகுநாதய்யர் வயிற்றை அமுக்கிப் பிடித்துக் கொண்டார். 'வக்கீலுக்குத் தந்த ஐயாயிரம் ரூபாயை எனக்குத் தந்திருக்கக்கூடாதா? ம்... இன்றைக்கு இந்தச் சுப்புப் பயல் என்னை இப்படிப் பேச நேர்ந்து விட்டதே! எதிர்பார்த்த முடிவு தானே? ஏட்டில் உள்ளதை ஒப்பித்தார் நீதிபதி. ஆனால், மனித இதயப் பண்பும், நன்றிக் கடனும் ஏட்டில் அடங்கக் கூடியதா?'

ஆம், சட்டம் பேசிவிட்டது. 'கணவனின் சுயார்ஜிதச் சொத்து மனைவிக்குத்தான். அதில் பெற்றவளுக்குக் கூடப் பங்கில்லை. ஏனெனில் அவளுக்கு வேறொரு மகன் இருக்கிறான். கையாலாகாதவன் ஆனாலும் அவனே அவளைக் காப்பாற்றக் கடமைப்பட்டவன்.'

"அம்மா, அக்கரைக்குப் போய் அத்தானிடம் ரூபாய் இரண்டாயிரம் வாங்கிவருகிறேன். அந்தத்திருச்சிப்பையனுக்கே சீதாவை முடிக்கலாம். அவர் வட்டி அதிகம் கேட்பார். என்ன பண்ணுவது?" ரகுநாதய்யர் செருப்பை மாட்டிக் கொண்டு புறப்பட்டார்.

"அந்த மளிகைக் கடையில் இருக்கிற பையனுக்கா? ம்...நமக்கு பிராப்தம் அது தான். சரி, சரி, அக்கரைக்குப் போனால் சுருக்க வந்து விடு." அந்தக் கிழவியின் குரல் நடுங்கியது. "ஆற்றிலே தண்ணீர் இருந்தால் பஸ்ஸிலே போடாப்பா."

வானிலே அஷ்டமிச் சந்திரன் ஒளி வீசிக் கொண்டிருந்தான். காவிரி ஆறு அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது. அதிக ஆழம் இல்லாததாலோ என்னவோ அதில் ஒரு சுழி வேகம் கூட இருக்கவில்லை.

ரகுநாதய்யர் வேட்டியை முட்டுக்கு மேல் மடித்துக் கட்டிக்கொண்டு ஆற்றில் இறங்கினார். கணுக்காலைக் கழுவிச் சென்ற நீர் கொஞ்சம் கொஞ்சமாக ஏறி முழங்காலை முட்டியது.

ரகுநாதய்யர் கண்கள் ஏதோ ஒரு இடத்தைக் குறிப்பாக வெறிக்கக் கால்கள் முன்னேறின. 'அதோ, அந்த இடம் தான். அவர் வேட்டியை நனைத்த தண்ணீர் இடுப்பை அணைத்தது. சற்று நேரம் அப்படியே நின்று விட்டார். அந்த இடத்து நீரைக் கைகளால் அளைந்தார் அவர். அவர் கால்கள் அத்துடன் நின்றன. ஆனால் அடுத்த அடி வைத்தால் என்னாகும் என்பது அவருக்குத் தெரியும். 'குபுக்'கென்று நீர் கழுத்துக்கு மேல் வந்து விடும். பின்? பின்?? அப்படியே லக்ஷ்மியுடன் ஐக்கியமாகிவிட வேண்டியதுதான். ஆனால் சீதா? அந்தத் தாய்க் கிழவி? அவர்கள் கதி என்ன?

புறப்பட்டபோது தாய் விடுத்த எச்சரிக்கையை அவர் மறக்கவில்லை. பாவம், பெற்றவள்! உபயோகமற்றவனானாலும் தன் மகன் உயிரோடு வாழ்வதில்தான் அன்னைக்கு எத்தனை அக்கறை?

ரகுநாதய்யரின் கால்கள் நகரவில்லையே தவிர இதயம் நெகிழ்ந்தது. ஒரு வாரமாகத் தீர்ப்பு வந்தது முதல் அவர் மனம் பட்ட பாட்டைச் சொல்லிவிட முடியாது. அந்த இடத்திலேயே தம்மையும் ஐக்கியமாக்கிக் கொண்டு விடத்

பைலட் பேனாவின் அற்புத மதிப்பிற்கு இதோ ஒரு அத்தாட்சி

"என்னுடைய பி.ஏ. பரீட்சை வெற்றிக்கு பைலட் தான் காரணம்" என்கிறார் விஸ்வரஞ்சன் சக்கரவர்த்தி

"நான் எடுத்துச் சென்ற விலை உயர்ந்த பேனா எனக்குக் கொடுக்கப்பட்ட மட்ட ரகமான காகிதத்தில் எழுத மறுத்து விட்டது. ஆனால் அதிர்ஷ்டவசமாக கூடவே பைலட் பேனா ஒன்றையும் எடுத்துச் சென்றிருந்தேன். ஒருதரம் கூட மீண்டும் மை போடாமல், பக்கத்திற்கு மேல் பக்கமாய் எவ்வளவு சுலபமாகவும் சுகமாகவும் எழுத முடிந்தது தெரியுமா! நான் இப்பொழுது உபயோகிப்பதெல்லாம் பைலட் பேனாவேதான்"





அநேகமாக மட்ட ரக காகிதத்தை உபயோகித்தே எழுத்து வேலை நடக்கிறது. குறைந்த விலையானாலும் பைலட் பேனா எந்தவிதமான காகிதம் மீதும்-உப்புத்தாள் உள்பட-எழுத வல்லது. அதன் உறுதியான நிப்பு, இறகு பேனா போல் மிருதுவாக எழுதுகிறது.

பைலட்

ஆயுட்காலம் முழுவதற்கும் தொந்தரவற்ற உழைப்பிற்கு பைலட் வாங்குங்கள்.

நிர்வாக ஆபீஸ்:
பைலட் பென் கம்பெனி (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்
கத்தோலிக் சென்டர்
அரமனைக்காரன் தெரு, மதராஸ்-1.

தொழிற்சாலை மற்றும் ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
கதிர்வேடு கிராமம், போலாக், புழலேரி, செங்கற்பட்டு ஜில்லா.

PP 237 ...

விற்பனை மற்றும் ஸர்வீஸ் செய்பவர்கள்:
ஜெம் அண்டு கம்பெனி, 325|326, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, மதராஸ்-1

தீர்மானித்தார். ஆனால் தம் கண்ணெதிரே அவளை அங்குதானே உயிருடன் அவர் பலியிட்டார்! இன்று அவரது சோகக் கதையைக் கேட்டு இரக்கம் காட்டுவாளா லக்ஷ்மி?

தூரத்தே 'ஜல்ஜல்' என்று ஏதோ வண்டியோசை கேட்டது. 'யார் வண்டி ஆற்றைக் கடக்கிறதோ? வண்டி பத்திரமாகக் கரை சேர வேண்டுமே?' என்று அவர் நினைத்த கணத்தில் தம் வாழ்வைக் கவிழ்த்த சம்பவம் அவர் நெஞ்சில் குறுகுறுத்தது. லக்ஷ்மி! ஆம். அவளை இழந்த அந்தச் சம்பவத்தை மறக்க இயலுமா?

* * *

அபூர்வமாக அவ்வருஷம் ராஜு தன் மனைவி ஜானகியுடன் ஒருவார ஓய்வுக்காகக் கிராமத்துக்கு வந்திருந்தான். காமாட்சி அம்மாளும், லக்ஷ்மியும் பெரிய இடத்து மருமகளைச் சக்திக்கேற்றபடி திருப்தி செய்வதில் மகிழ்வெய்தினர். அன்று வீட்டிலும் இன்று போல் வறட்சி இல்லையே! அந்தச் சமயம்! அக்கரையில் இருந்த அத்தான் பெண்ணுக்குக் கல்யாணம். குடும்பம் முழுதும் அழைப்பு வந்தது. அதில் ராஜுவுக்குப் பிரத்தியேக இடம் இருந்தது என்பதைச் சொல்ல வேண்டாம். ஆனால் ராஜுவுக்கு வர ஏனோ விருப்பமில்லை. தான் அந்த வைபவத்தில் கலந்து கொள்ளாததுடன், ஜானகியும் அந்தப் பட்டிக்காட்டுக்கு விஜயம் செய்வதை ஏனோ



அவன் வெறுத்தான். அந்த மனிதர்களுக்குத் தக்கபடி அவளுக்கு நடந்து கொள்ளத் தெரியாது என்று அஞ்சினான் அவன். ஆனால் காமாக்ஷி அம்மாளோ தன் இருமருமக்களையும் ஜோடியாக அழைத்துச் செல்ல விரும்பி அதில் வெற்றியும் கண்டாள். நாகரிகத்தின் பூச்சுக்குள், கிராமியப் பாணியைப் புகுத்திப் பொய்ப் பணிவுடன் ஜானகியும், 'இயற்கையான அடக்கம்-அதற்கேற்ற அலங்காரமுமாக லக்ஷ்மியும் புறப்பட்ட போது அதுவே ஒரு கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

எப்படியோ பட்டணத்துப் பெண்ணானாலும் பாங்குடையவள் என்ற பெயரை ஜானகி கல்யாண வீட்டில் சம்பாதித்துவிட்டபோது தன் மருமகளின் சாமர்த்தியத்தில் பூரித்துப் போனாள் காமாக்ஷி. 'காமாக்ஷிக்கென்ன ஏவின பணியை 'இதோ' என்று முடிக்க ஒருவன், சம்பாதித்துக் கொட்ட ஒருவனுமாக இரண்டு பிள்ளைகள். கண்கள் மாதிரி இரண்டு மருமக்கள்' என்று பேசாத வாய் இல்லை! எந்தக் கொள்ளிக் கண் பட்டதோ!

திருமண அமர்க்களம் முடிந்து அன்று இரவே ஊர் திரும்பத் துடித்தாள் ஜானகி. ராஜுவின் கட்டளை அது. அகாலத்தில் ஆற்றைக் கடந்து செல்வதோ, இல்லை சுற்று வழியாக நாலு மைல் அதிகம் பிரயாணம் செய்வதோ சரியல்ல என்று காமாக்ஷி அம்மாளுக்கும், ரகுநாதய்யருக்கும்

தோன்றினாலும் ராஜுவின் சினத்துக்கு அஞ்சி அரை மனதாகப் புறப்பட்டனர்.

சில்லென்ற காற்றும், வெண்ணிலவும் இன்பமாக இருந்தாலும், வடதிசையில் சூழ்ந்து வந்த கார்மேகங்களும் வெட்டிய மின்னலும் சீக்கிரமே மழை வரப் போவதை அறிவித்தன. அவசரத்தை உணர்ந்த வண்டிக்காரப் பொன்னனும் மாடுகளை விரட்டினான்.

நீரிலே காலை வைத்த மாடுகள் உடலைச் சிலிர்த்தன. "அட, டிர்...ர்...என்ன இன்னைக்குத்தான் தண்ணீரைக் கண்டாப்பலே மிரளறயே......" பொன்னன் அவைகளைக் குத்தினான்.

திடீரென ஒரு குலுக்கல்! 'ஐயோ! குடிமுழுகிப் போச்சே!'—தொடர்ந்து பொன்னனின் அலறல்! என்ன ஆயிற்று என்று உணரும் முன் எல்லோர் கண்ணிலும், வாயிலும் வாரி அடித்தது நீர். வண்டி கவிழ்ந்துவிட்டது! ரகுநாதய்யர் ஒருகணம் திகைத்தார். குழந்தை சீதா பொன்னனால் மீட்கப்பட்டு விட்டாள் என்பதை அவன் தலைமீது பளபளத்த பட்டுப் பாவாடை தெரிவித்தது. இப்போது அவர் பொறுப்பில் மூன்று உயிர்கள் பெற்ற தாய், கட்டிய மனைவி, ஊரான் சொத்தான ஜானகி — ஊசலாடிக் கொண்டிருந்தன. திடீரென அவருக்கு ஒரு பயம் பிடித்தது. 'நீரோட்டத்துடன் இன்னும் பத்தடி போனால் பலி வாங்கும் மடு! அதனருகே சென்று விட்டால் ஒரே முடிவுதான்...அதற்குள் எப்படி அனைவரையும் மீட்பது?'

ரகுநாதய்யர் கைகளை நீரில் துழாவினார். 'லக்ஷ்மிக்கு மடு இருப்பதும், காவிரிக் கரையிலேயே பிறந்து வளர்ந்து விட்ட பழக்கத்தினால் கொஞ்சம் நீச்சலும் தெரியும். ஆனால் ஜானகி? பட்டணத்துப் பெண்ணான அவளுக்குக் காவிரியில் குளிக்கக்கூடத் தெரியாதே! ராஜுவிடம் அவளைப் பத்திரமாகச் சேர்க்க வேண்டுமே? தாயோ கிழவி. ரகுநாதய்யர் கையில் ஒரு பின்னல் சிக்கியது. அதை அடுத்துப் பச்சைப் பட்டுப் புடவை! அப்பா, ஜானகிதான். ரகுநாதய்யருக்கு ஒரு கவலை விட்டது.

"ரகுநாதா!"—தீனக்குரல் அவரைக் கலக்கியது. மறுகணம் அவரது இடது கரத்துள் அடைக்கலம் புகுந்தாள் காமாக்ஷி அம்மாள். இரு பெண்களின் பாரத்தைக் கட்டிக் கொண்டு நீரோட்டத்தை எதிர்த்து முன்னேறுவது சுலபமா? அதிலும் ஜானகி பயத்திலேயே மூர்ச்சித்தும் விட்டாள்! பொன்னன் மீண்டும் நீரில் பாய்ந்தான். ரகுநாதய்யரின் பாரம் குறைந்தது.

ஜானகி மெல்லக் கண் விழித்தாள். "மன்னி!"-அப்போதுதான் திடீரென்று ஐயருக்கு லக்ஷ்மியின் நினைவு வந்தது. அவள் ஏன் இன்னும் கரை சேரவில்லை?

நீர்ப்பரப்பை நோக்கியபொழுது சிவப்புப் புடவையின் சரிகைத் தலைப்பு நெருப்பென ஒரு கணம் மின்னிச் சுழலின் அடியில் செருகிக் கொண்டது.

"மன்னி! மடுப் பக்கம் அடித்துச் சென்ற என்னைக் காப்பாற்ற வந்து நீங்களே போய் விட்டீர்களே......" என்று ஜானகி அலறியபோதுதான் லக்ஷ்மி ஏமாந்த விவரம் மற்றவர்களுக்குப் புரிந்தது. என்ன, தெய்வ சோதனை? சேர்ந்து தத்தளித்துக் கொண்டிருந்த இரு பெண்களில் ஜானகியின் உடல் அல்லவா முதலில் அவர் கையில் சிக்கியது?

* * *

'லக்ஷ்மி!....லக்ஷ்மி! என்னை இப்படித் திண்டாடி அவமானப்படச் செய்யவா அன்று ஜானகியை என் கையில் தள்ளினாய் லக்ஷ்மி! இன்று அந்தப் பாவி— உன்னால் உயிர் பெற்றவள் — உன் பெண்ணுக்கு வாழ்வில்லை என்று கூறி விட்டாளே....' ரகுநாதய்யர் உணர்ச்சி வசப்பட்டுத் தள்ளாடினார். அவர் கால்கள் நடுங்கின.

"ஐயா!...ஐயா! யாரு அங்கே?"—பாய்ந்து வந்த இரு வலுவான புஜங்கள் அவரைப் பின்னுக்கு இழுத்தன. 'என்ன வேலை ஐயா இது?' ரகுநாதய்யரின் கவனத்தைக் கவர்ந்து, அவரது நெஞ்சைக் கிளறிய வண்டி இப்போது அவர் அருகில் நின்றது. அதன் வண்டிக்காரன்தான், கால்கள் தள்ளாடி மடுவில் விழப்போனவரைத் தாங்கிக் காப்பாற்றியது.

"ரகுநாதா!...என் வயத்திலே பாலை வார்த்தியே!"—மெல்லக் கண்விழித்த அவர் திருஷ்டியில் முதலில் பட்டது கவலை கப்பிய முகத்தில் மகிழ்ச்சி உதிக்க நின்ற காமாக்ஷி அம்மாள்தான். அவருக்

பின்சீட்டில் உட்கார்ந்திருப்பவர்: பஸ் ஸ்டாண்டில் நின்ற என்னை ஏற்றிக்கொண்டு போவதற்குடங்கள் இருதயத்தைப் பாராட்டுகிறேன். கார் உங்களுடையதா?



கார் ஓட்டுபவர்: இல்லை. இருதயம் என்னுடையது!

"அவருடைய குடை காற்றில் பறந்து போனதை நீங்கள் ஓடிப் போய் எடுத்து வந்தீரே, என்ன கருணை ஐயா உமக்கு?"



"கருணையா? குடை என்னுடையது ஐயா! அவர் இரவல் வாங்கி இருந்தார்!"

குக் கொஞ்சம் கொஞ்சமாக நினைவுக்கு வந்தன முதல்நாள் சம்பவங்கள்.

"வண்டிக்காரன் ஏதோ சொன்னானே அப்பா. அது நிஜமா? நீயும் என்னை விட்டுட்டுப் போகவா பார்த்தே?" தாயின் குரல் கரைந்தது.

"அம்மா...அம்மா...இல்லே அம்மா" ரகுநாதய்யர் விம்மினார்...அவரது குரலின் எதிரொலி போல் வேறொரு அழைப்பு வாசலில் கேட்டது. "அம்மா, அம்மா, சீதா..."

ஜானகி!

"யாரது ஜானகியா? நீ எங்கேயம்மா இங்கே? நான் ஆற்றில் விழுந்து விட்டதாக யாராவது சொன்னார்களா? இல்லை, என் குழந்தைக்குத் தந்தையாக நான் பிழைத்து விட்டேனே!" — ரகுநாதய்யரின் உடல் பதறியது.

"ஐயோ, எனக்கு இது விஷயமே தெரியாதே! அதென்னம்மா? அம்மா, என்னை மன்னித்து விடுங்கள்........." ஜானகி காமாக்ஷியின் கரங்களைப் பற்றினாள்.

"என்னம்மா! சொல்லு, ஏன் பதறுகிறாய்? அவன் வருத்தத்திலே ஏதாவது சொல்வான். நீ கவனிக்காதே. நீவந்த விஷயம் என்னம்மா?" தாயின் பரிவுடன் அவ்வயோதிகக் கரங்கள் மருமகளை அணைத்தன.

"அம்மா! எனக்குப் புத்தி வந்து விட்டது." ஜானகி மெல்ல விஷயத்தைக் கூற ஆரம்பித்தாள்:

சட்டப்படி ஜானகி தவிர வேறு யாருக்கும் அந்தச் சொத்தில் துளிக்கூட உரிமை இல்லையென்றும், ஜானகி தன் இஷ்டப்படி சொத்துக்கு யாரையேனும் பாதுகாப்பாளராக்கிக் கொள்ளவோ, வேறு சுவிகாரம் எடுத்துக் கொள்ளவோ செய்யலாம் என்றும் தீர்ப்பான மறுதினமே சுப்பு தன் குடும்பத்துடன் ஜானகியின் வீட்டுக்கு வந்து விட்டான். ஏற்கெனவே அவன் தந்தை இறந்தபின் நொடித்துப் போன அக்குடும்பத்துக்குச் சகோதரியின் செல்வம் ஒரு அருமருந்தென அவன் கண்டு கொண்டான். அதன்படி ஜானகியின் மானேஜராகி, "அக்கா! எனக்குச் சொந்தமாக 'பிஸினஸ்' செய்ய ரொம்ப நாளாக ஆசை. அதனால் ஒரு பத்தாயிரம் நான் எடுத்துக் கொள்கிறேன்" என்று சுவாதீனமாக அவன் பேசியபோது ஜானகி திடுக்கிட்டாள். அவளுள் விழிப்பு ஏற்பட்டது.

ஜானகியின் மறுப்பைச் சுப்பு எதிர் பார்க்கவில்லை. இருவருக்கும் வாக்குவாதம் வளர்ந்தது. கடந்த ஒரு வாரமாக வீட்டில் ஒரே புகைச்சல். சுப்புவின் கெஞ்சலும், சுவாதீனப் பேச்சும் மறைந்து மிரட்டலும், பயமுறுத்தலும் ஓங்கி நின்றன.

"நீ ஆற்றோடு போயிருக்க வேண்டியவள்தானே? ஆனால் உனக்கு உயிர் கொடுத்த புண்ணியவானுக்கே செப்புக் காசு தர முன் வராத கல்நெஞ்சக்காரி அல்லவா நீ?... ஆனால் நான் அவர்களைப் போல் ஏமாளியல்ல நீ 'இல்லை' என்றதும் பேசாமல் போய்விட."

ஜானகியின் அறிவு தெளிந்தது. இதுவரை தம்பி தன்னிடம் காட்டிய பரிவு, அன்பினால் அல்ல. எல்லாம் வேஷம். பணத்துக்கு விரித்த வலை!

அந்தச் சமயம் லக்ஷ்மியின் மரணம் நினைவுக்கு வந்தது. ஆபத்தான கடைசி நிமிஷத்திலும், தான் மட்டும் தப்ப நினையாது, ஜானகிக்குக் கைகொடுத்த அவளது கருணை, ரகுநாதய்யரின் தியாகம் ஒவ்வொன்றாக அவள் நினைவுக்கு வந்தன. 'தம்பிக்காக அவர் உண்மையில் உழைத்தார். தம்பி சேர்த்த சொத்து அவரது அழிந்த ஐசுவரியத்தின் மீது கட்டிய மாளிகை! அவர் பெண் இன்று தாயில்லாப்பெண்ணாக அணைக்கும் கரமின்றி நிற்பது தன்னாலல்லவா? அப்படியிருக்க அவருக்கு இல்லாத உரிமை சுப்புவுக்கு ஏது?' அந்தக்கணமே ஜானகியின் மனத்தில் ஓர் தீர்மானம் உருவாகியது. தன்னால் தாயிழந்த பெண்ணுக்குத் தானே தாயாகச் செயல் புரிய முடிவு செய்தாள் ஜானகி.

"அம்மா! நேற்று இரவு என் தம்பி மிகவும் ரகளை செய்துவிட்டான். அவனுக்குப் பாதகமான முடிவானால் என்ன செய்வானோ? அதற்காகவே பணத்தை உரிய இடத்தில் சேர்த்துவிட ஓடி வந்தேன். என் உதவியை ஏற்றுச் சீதாவை நல்ல இடத்தில் கொடுங்கள்!"

சீதாவுக்கு நல்ல கணவன் வர ஜானகியின் பணம் உதவியபோது இந்த மாற்றத்தைக் கண்டு ஊரே அதிசயித்தது.

படித்துப் பாருங்கள்

முத்தொள்ளாயிரம்

தமிழன்னைக்கு ரஸிகமணி டி. கே. சி. செய்த பெருந் தொண்டுகளில் ஒன்று முத்தொள்ளாயிரத்தைப் பதிப்பித்தது!

யாரோ ஒரு தமிழ்ப் புலவர் தமிழ் நாட்டுப் பேரரசர்களாகிய சேர, சோழ, பாண்டியர்கள் ஒவ்வொருவர் மீதும் தொள்ளாயிரம் கவிகள் வீதம் மூன்று தொள்ளாயிரக் கவிகள் பாடியதாகவும் அதன் தொகுப்பே முத்தொள்ளாயிரம் ஆயிற்று என்றும் சொல்லப்படுகிறது. அப்படியானல் 2700 பாடல்கள் இருந்திருக்க வேண்டும். ஆனல் நமக்குக் கிடைத்தவையோ சுமார் நூறு பாடல்கள் தான். அந்த நூறு பாடல்களுக்கும் சரியாகப் பொருள் தெரியாது தமிழ் நாட்டுப் பண்டித உலகம் விட்டு வைத்திருந்தது. ஆனல் ரஸிகமணி டி. கே. சி. அவர்கள் அந்தப் பாடல்களின் உரை கண்ட முறை மிக அதிசயமானது!

முத்தொள்ளாயிரப் பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் எழுந்த பாடல்களாகும். அந்தக் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தைச் சரியாக ஊகித்தால்தான், பாடலின் முதல் சீரிலிருந்து கடைசி சீர்வரை சரியாகப் பொருள் விளங்கும். 'இல்லையேல் பாடல் உயிரற்ற சொற் கோவைதான். ஆனல் ரஸிகமணி டி. கே. சி. அவர்கள் ஒவ்வொரு செய்யுளின் பின்னல் தொக்கி நிற்கும் சந்தர்ப்பத்தை ஊகித்து அறிந்த பான்மை வியக்கத்தக்கது.

அவர்கள் நீண்ட ஆராய்ச்சியின் பயனுக, நிலைக்களன் அமைக்க, பாவங்களை எடுத்துக் காட்டி முத்தொள்ளாயிரத்தை வெளியிட்டதும், தமிழ்கூறும் நல்லுலகம் எத்தகைய கவிதைச் செல்வம் நமக்குக் கிடைத்தது என்று அகமகிழ்ந்தது! முத்தொள்ளாயிரப் பிரதிகள் வெகு வேகமாகவும் விற்பனையாயின! இப்பொழுது மூன்ருவது பதிப்பு வெளியாகியிருக்கிறது! தமிழ் மக்கள் கவிதைச் சுவையை, அதிலும் முத்தொள்ளாயிரத்திலுள்ள கவிதைச் சுவையையும் கருத்துச் செறிவையும் எவ்வளவு ஆர்வத்தோடு ரஸிக்கிருர்கள் என்பதை அறிந்து டி.கே.சி.யின் ஆன்மா பெருமகிழ்ச்சி அடையும் என்பதில் ஐயமில்லை.

இந்தப் பதிப்பு முந்தையப் பதிப்புக்களைப் போலவே மூவர்ணப் படங்களுடன் மிக அழகாக அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆனல் ஒரு வித்தியாசம். முந்தையப் பதிப்பைவிட இதன் விலை குறைவு. மூன்று ரூபாய்தான்.

கிடைக்குமிடம்: பொதிகைமலைப் பதிப்பு, திருக்குற்ருலம் தென்காசி.

கலை (மாதப் பத்திரிகை)

• சினிமாப் படங்களையும், சினிமா நடிகர்களையும், சினிமாக் கலையையும் பற்றிய பல ருசிகரமான தகவல்களைக் கொண்ட சினிமாப் பத்திரிகைகளைப் போல் அல்லாமல், சினிமா சம்பந்தப்படாத வேறு பல ருசிகரமான விஷயங்களையும் தாங்கிக் கொண்டு இம்மாதப் பத்திரிகை வெளிவந்திருக்கிறது. அவற்றுள் முக்கியமாகப் பாராட்டப்பட வேண்டிய பகுதி இப் பத்திரிகையில் வெளியாகியிருக்கும் மூவர்ணச் சித்திரங்கள். அவை கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாயிருப்பதில் அதிசயம் எதுவும் இல்லை. சிறந்த ஓவியர்களான பாலு சகோதரர்களின் சித்திரங்கள் நன்ருயிருப்பதற்குக் கேட்கவா வேண்டும்? சினிமா நட்சத்திரங்களின் மூவர்ணப் படங்களும், புகைப் படங்களும் இவ்விதழை ஏராளமாக அலங்கரிக்கின்றன.

''குறள் ஓவியங்கள்'' என்ற டாக்டர் மு. வரதராசன் அவர்களின் கட்டுரை, ''சின்ன விஷயம் அல்ல! சிந்திக்க வேண்டிய விஷயம்,'' ''கலிங்கத்துப்பரணி'' ஆகியவை மிகவும் சுவையுடன் அமைந்திருக்கின்றன.

இப் பத்திரிகையின் நிர்வாகப் பொறுப்பை, பாலு சகோதரர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதால், அழகான பல வர்ணச் சித்திரங்களை எதிர்பார்க்கலாம். குன்ருத இலக்கிய மணமும் கலை மணமும் வீசிக் கொண்டு ''கலை'' பவனி வருவதை யார்தான் விரும்ப மாட்டார்கள்?

ஆசிரியர்: ஓவியர் அ. சீனு; வெளியிடுவோர்: ஓவியர் அ. பாலு, 131, தாயார் சாஹிப் தெரு, சென்னை—2.

மணி ஓசை

'சின்னஞ் சிறு விஷயங்கள்! அர்த்தமற்ற உப்புச் சப்பில்லாத விஷயங்கள் எப்படிக் கணவன்-மனைவியைப் பிரித்துக் குடும்பத்தைப் பாழ்படுத்துகின்றன?' என்பதை அழகாகச் சித்திரிக்கும் கதைதான் 'மணி ஓசை' என்னும் மகுடம் சூட்டப்பட்ட கதை.

'உயிர் போய்விட்டதா? ஐயோ! என்கதி? ஆறு வருஷ காலமாக 'வாழாவெட்டி' என்கிற பட்டத்துடன் நடைப்பிணமாக இருந்து வந்த நான் இனி 'விதவை' என்கிற பட்டம் பெற்று உயிர் வாழவேண்டுமா?'

இப்படி மனத்துள் நினைந்து மாயும் கதாநாயகியின் காதுகளில் கோவிலின் அர்த்த ஜாம மணி ஓசை கேட்கிறது. 'அதன் அர்த்தம்தான் என்ன?' என்று கேட்டு ஆசிரியர் கதை முடிவைச் சூசகமாகத் தெரிவிக்கிருர் இந்தக் கதையிலே.

'ஆதரவு' என்னும் கதை கைத்தறி நெசவாளியின் வாழ்க்கையை வளமுறச் செய்யும் பிரசாரக் கதையாக அமைந்திருக்கிறது.

'ஒரே பிள்ளை' என்னும் கதையில் 'பணம் எப்படி மனத்தை மாற்றுகிறது' என்னும் உண்மை நன்கு சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

'உறவும் துறவும்' என்னும் கதை துறவு எத்தகையதாக இருக்க வேண்டும், அது எல்லாருக்குமே சாத்தியமா என்பதை ஆராயும் காரியத்தைச் செய்கிறது.

பன்னிரண்டு கதைகள் இடம் பெற்றிருக்கும் இத் தொகுதியிலே பல கதைகள் கல்யாணமும் கார்த்திகையும் ஊடலும் கூடலும் உறவாடுபவனவாகவும் பல முறை பலரால் கையாளப்பட்ட கருத்துடையன வாகவும் இருந்தாலும் ஆசிரியரின் திறனல் படித்து இன்புறும் வண்ணம் அமைந்திருக்கின்றன.

ஆசிரியர்: ஸ்ரீ எல்லார் வி. பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை, 4. விலை: ரூ. 2—50.

பொங்கிவரும் பெருநிலவு



கி.ராஜேந்திரன்

அத்தியாயம் 27

"நிறுத்து! நிறுத்து!"

"பொன்னு! நேற்று இரவு என்ன நடந்தது, தெரியுமா?" என்று கேட்டாள் விமலாவின் தாயார் மரகதம்மாள். சமையலறையில் அவர்கள் அந்தரங்கம் பேசினார்கள்.

"தெரியுமே! நர்ஸ் நிர்மலா பாதி ராத்திரிக்குமேல் 'டாக்டர், டாக்டர்' என்று கூப்பிடும்குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து நடராஜன் அவசரமாக எழுந்து போன சத்தமும் கேட்டது. அவன் அப்பா அடிக்கடி நடுநிசியில் நோயாளிகளைக் கவனிக்கச் சென்று எனக்குப் பழக்கமாகி விட்டது. அதனால் நேற்று இரவு நிகழ்ச்சி எனக்குச் சர்வ சாதாரணமாகவே இருந்தது. இன்னும் கொஞ்சம் நாட்களானால் உனக்கும் அதில் அதிசயிக்கும்படி ஒன்றும் தோன்றாது" என்றாள் நடராஜனின் தாயார்.

"எனக்கும் அதில் அதிசயம் ஒன்றுமில்லை, பொன்னு! அதற்கப்புறம் என்ன நடந்தது என்று கேட்டுவிட்டு அப்புறம் சொல்லு. நடராஜன் எழுந்து போன சிறிது நேரத்துக் கெல்லாம் விமலாவும் சந்தடி செய்யாமல் எழுந்து வாசலுக்குப் போனாள். நான் நன்றாகத் தூங்குகிறேன் என்று நினைத்துக் கொண்டாள் போலிருக்கிறது. சிறிது நேரம் கழித்துத் திரும்பி வந்து படுத்தாள். அப்புறம் உடல் குலுங்கக் குலுங்க விம்மி விம்மி அழுதாள்!"

"நிஜமாகவா? அசட்டுப் பெண்ணாக இருக்கிறாளே! வீணாக எதற்கு அழ வேண்டும்?"

"அதைக் கேட்கப் போய்த்தான் அவள் விம்மலும் அழுகையும் அதிகமாகி விட்டன. 'என் தலைவிதி நான் அழுகிறேன். என்னை ஒன்றும் கேட்காதே' என்று பிடிவாதமாகக் காரணத்தைச் சொல்ல மறுத்து விட்டாள். அவளைச் சமாதானம் செய்ய முயற்சி செய்வதில் பயன் இல்லை என்று தோன்றியதால் படுத்து விட்டேன். கொஞ்ச நேரம் ஆனதும் நடராஜன் திரும்பி வந்து படுத்துக் கொள்ளும் ஓசை கேட்டது. அதற்குப் பிறகும் இவள் நீண்ட நேரம் விசித்து விசித்து அழுது கொண்டே இருந்தாள். எப்போது நிறுத்தினாளோ, தெரியாது. நான் தூங்கிப் போய் விட்டேன்."

"ரொம்பவும் வேடிக்கையாக இருக்கிறதே! அவள் அழுகைக்குக் காரணம் என்னவாக இருக்கும்? உனக்கு ஏதாவது தோன்றுகிறதா?"

"ஒருமாதிரி ஊகிக்கிறேன், பொன்னு! நீ தவறாக எடுத்துக் கொள்ளவில்லையானால் சொல்கிறேன்."

"நன்றாக இருக்கிறது! தவறாக எடுத்துக் கொள்ளவாவது? லட்சணம்தான்! மனத்தில் தோன்றியதைத் தயங்காமல் சொல்லு, மரகதம்!"

"நமக்கு அவர்கள் குழந்தைகள்தான் என்றாலும் இருவருக்கும் வயதாகி விட்டதல்லவா? காலா காலத்தில் கல்யாணத்தை முடிப்பதுதான் நியாயம். அதைப்பற்றி யோசிக்க வேண்டாமா?"

"வாஸ்தவம்தான். நடராஜன் லண்டனிலிருந்து திரும்பி வந்து விளை

யாட்டுப் போல் ஒரு மாதத்துக்கு மேல் ஆகிவிட்டதே. அவரிடம் இதைப் பற்றிப் பேசுகிறேன்'' என்றாள் பொன்னு.

ராமலிங்கம் நர்ஸிங் ஹோமின் பொறுப்பு முழுவதையும் நடராஜனிடமே விட்டு விட்டுக் கடவுளைத் தியானிப்பதிலேயே தமது நேரத்தின் பெரும் பகுதியைக் கழித்து வந்தார். பூஜை அறையில் உட்கார்ந்து வால்மீகி ராமாயணம் அல்லது திருவாசகம் படிக்க ஆரம்பித்து விட்டாரானால் அவருக்கு நேரம் போவதே தெரியாது. எப்போதுமே அவருக்கு இருந்து வந்த இந்தப் பழக்கம் நடராஜன் திரும்பி வந்த நாளாக அதிகமாகிவிட்டது.

ஆராதனையை முடித்துக் கொண்டு வெளியே வந்த அவரைப் பொன்னம்மாள் நெருங்கி, ''நாளாகிக்கொண்டே போகிறதே! கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டாமா?'' என்றாள்.

''யாருக்குக் கல்யாணம்! என்ன ஏற்பாடு?'' என்றார் ராமலிங்கம்.

''இது என்ன கேள்வி? நீங்களும் நானுமா இனிமேல் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம்?''

''ஏன் செய்து கொள்ளக் கூடாது? இன்னும் இரண்டு வருஷங்கள் போனால் நமக்குக்கூட அறுபதாவது கல்யாணம் நடக்க வேண்டியதுதான்.''

''போதுமே இந்த விளையாட்டு. எத்தனை நாட்கள் இப்படிக் குழந்தைகளைச் சோதிக்கப் போகிறீர்கள்? பாவம், அந்தப் பெண் நேற்று இரவு முழுதும் அழுது தீர்த்திருக்கிறாள்.''

''போட்டையே ஒரு போடு! கல்யாணம் செய்து கொள்ளப் போகும் பெண் சந்தோஷமாக இருப்பதை விட்டு, அழுது கொண்டிருப்பாளா?''

''ஐந்து வருஷ டாக்டர் படிப்பை எட்டு வருஷங்கள் படித்து பாஸ்பண்ணி இருபத்தைந்து வருஷங்கள் அனுபவமும் பெற்றால்கூட ஒரு பெண்ணின் மனத்தை உங்களால் புரிந்து கொள்ள முடியாது!''

''பெண்களின் மனத்தைப் புரிந்து கொள்ள முடியாது என்று வேண்டுமானால் சொல்லு. அதற்காக ஐந்து வருஷப் படிப்பை எட்டு வருஷம் படித்தேன் என்று ஏன் புளுகுகிறாய்?''

''ஆமாம், மறந்து விட்டேன். பத்து வருஷம் அல்லவா படித்தீர்கள்?'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே போய் விட்டாள் பொன்னம்மாள்.

* * *


''நடராஜா! உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேசவேண்டும்'' என்று பேச்சை ஆரம்பித்தார் ராமலிங்கம்.

''என்ன அப்பா?''

''உன் மாமா சிவஸ்வாமி இறந்து போனபோது அவர் அருகில் நான் இருந்தது உனக்குத் தெரியும். அப்போது என்னை ஒரு வாக்குறுதி கேட்டார். 'விமலாவை நடராஜனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்து ஜாக்கிரதையாகக் காப்பாற்றுவீர்களா?' என்று கேட்டார். நானும் அவருக்கு உறுதி கூறினேன்.''

''அப்பா...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான் நடராஜன்.

''சற்றுப் பொறு, நடராஜா! நீ என்ன சொல்லப் போகிறாய் என்று எனக்குத் தெரியும். 'என்னைக் கேட்காமல் என் வாழ்வைப் பாதிக்கக் கூடிய வகையில் நீங்கள் எப்படி வாக்குறுதி அளிக்கலாம்?' என்றுதானே கேட்கிறாய்? அந்த நிலையில் நான் வேறு என்ன செய்திருக்க முடியும்? கடைசி மூச்சை விட்டுக் கொண்டிருக்கும் ஒருவருக்கு மன அமைதியையாவது நான் கொடுக்க வேண்டாமா? அப்போது கூட உனக்கு விமலாவைக் கொடுக்கிறேன் என்று நான் சொல்லவில்லை. 'விமலாவுக்குக் கல்யாணம் செய்து கொடுத்துச் சௌக்கியமாக வைத்துக் காப்பாற்றுகிறேன்' என்றுதான் சொன்னேன். ஆனால் அவர் 'உனக்கு' என்றுதான் புரிந்து கொண்டிருப்பார். உன் அம்மாவுக்கும் எனக்கும்கூட நப்பாசை. உங்கள் இருவருக்குமே திருமணம் என்று உங்கள் குழந்தைப் பிராயத்திலிருந்தே பல வருஷங்களாக நாங்கள் எண்ணி வந்திருக்கிறோம். நன்றாக யோசித்து உன்னுடைய முடிவைச் சொல்லு'' என்றார்.



"ஆகட்டும், அப்பா! யோசித்துச் சொல்கிறேன்" என்றான் நடராஜன்.

அவனைப் பொறுத்தவரையில் யோசிப்பதற்கு ஒன்றுமே யில்லைதான். ஆனால் இரவு அவன் கேட்ட விம்மல் ஒலி அவனைத் தயங்க வைத்தது. அப்பா விடம் உடனே பதில் சொல்ல முடியா மல் தடுத்தது. விமலாவைத் தனியே சந்தித்து அவளுடைய பூரண சம்மதத் தைப் பெற விரும்பினான். அப்படி அவன் கேட்டபோது அவனைத் திகைக்க வைக் கும்படியாகப் பேசினாள் விமலா.

"என்னை யார் கேட்கிறார்கள்? என் னுடைய சம்மதத்தைப்பற்றி யாருக்கு அவ்வளவு அக்கறை?"

"யார் கேட்க வேண்டும்? இதோ நானே கேட்கிறேனே! உனது விருப் பத்துக்கு மாறாக எதையும் செய்ய மாட்டேன், விமலா. சந்தோஷமாகச் 'சரி' என்று ஒரு வார்த்தை சொல்லு."

"இல்லையென்றால்?......"

"என்ன சொன்னாய்......? என்னிடம் விளையாடுகிறாயா, விமலா?"

"திருமணம் உங்களுக்கு விளையாட்டா கத் தோன்றலாம், அத்தான். எனக்கு அப்படித் தோன்றவில்லை."

"அப்படியானால் உடனே கல்யாண ஏற்பாடுகளை நிறுத்தி விடுகிறேன்."

"உங்களுக்கென்ன? சுலபமாக அப் படிச் செய்துவிட்டு, காரணம் கேட்டால் என்மீது பழியைச் சுமத்துவீர்கள். அப் புறம் எல்லோரும் என்னைக் 'கர்வி' என்று ஏசுவார்கள். நீங்கள் விடுதலை அடைந்து சந்தோஷமாக இருப்பீர்கள்."

"அப்படியானால் 'கர்வி இல்லை; ரொம்ப நல்ல பெண்' என்று பெயர் எடுக்கத்தான் நீ திருமண ஏற்பாட்டுக் குச் சம்மதிக்கப் போகிறாயா?"

"ஏன் அத்தான் என்னை இப்படிச் சித் திரவதை செய்கிறீர்கள்? அதில் உங்க ளுக்கு என்ன அவ்வளவு ஆனந்தம்?"

"யார் யாரைச் சித்திரவதை செய்கிறார்கள், விமலா? உன் விடம் சிறிதுநேரம் ஆனந்த



மாகப் பேசி உன் சம்மதத்தையும் பெற்றுப் போக ஆவலுடன் வந்தேன். ஏதேதோ பேசி என் மனம் நோகும்படி செய்து விட்டாய். உனக்கு என்ன வந்து விட்டது என்றே தெரியவில்லை. யாரோ உன் மனத்தைக் கெடுத்திருக்கிறார்கள். அது யார் என்று எனக்குத் தெரியும்.''

''யார்மீதும் அநாவசியமாகக் குற்றம் கண்டு பிடிக்காதீர்கள். என் மனநிலை சரியாக இல்லை. ஏதேதோ உளறுகிறேன்.''

''சரியான நிலைக்கு உள்ளம் திரும்பிய பிறகு தெரியப்படுத்து. மறுபடியும் உன் சம்மதத்தைக் கேட்கிறேன்.''

''என்னைக் கேட்க வேண்டிய அவசியமே இல்லை, அத்தான்! விவரம் தெரிந்த நாளிலிருந்து இந்த நன்னாளை எதிர்நோக்கித்தானே காத்திருக்கிறேன். தவம் இருக்கும் ஒருவனைப் பார்த்து 'அவசியம் வரம் கொடுக்கத்தான் வேண்டுமா?'



என்று கடவுள் கேட்பது போல் அல்லவா இருக்கிறது உங்கள் பேச்சு!''

''உன் மனம் ஏன் இப்படி சஞ்சலப்படுகிறது, விமலா? நேற்று இரவுகூட நீ விம்மி விம்மி அழுது கொண்டிருந்தது போல் தோன்றியதே!''

''ஒன்றுமில்லை, அத்தான்! அப்பாவை நினைத்துக் கொண்டேன். எனக்கு அழுகை வந்து விட்டது.''

ஏன் அப்படிப் பொய் சொன்னோம் என்று அவளுக்கே புரியவில்லை. அத்தானை மணந்து கொள்ளும் பெரும் பாக்கியம் மட்டும் எனக்குக் கிட்டுமானால்.....அவரை வேறு ஒருத்தியுடன் பகிர்ந்து கொள்ளவும் தயாராக இருக்கிறேனா நான்? அவ்வளவு தாராளமான மனமா என்னுடையது? விமலாவுக்குச் சிறிதும் நம்பிக்கை பிறக்கவில்லை.

திருமண ஏற்பாடுகள் நடக்க ஆரம்பித்தன. நல்ல நாள் பார்த்தார்கள். அழைப்புக்கள் அனுப்ப வேண்டியவர்களின் விலாசங்களைச் சேகரித்தார்கள். தேவையான சாமான்களெல்லாம் வாங்கி வீட்டை நிரப்ப ஆரம்பித்தாள் பொன்னம்மாள். இதிலெல்லாம் முழு மூச்சுடன் முனைந்து வேலை செய்தவன் மணிதான். 'நீ ஒருவன் இல்லாவிட்டால் நான் தவித்துப் போய்விடுவேன், மணி' என்று அடிக்கடி சொன்னாள் பொன்னம்மாள். நடராஜன் அவனிடமிருந்து விலகி விலகிச் செல்ல முயன்றும் 'மாப்பிள்ளை! மாப்பிள்ளை!' என்று கூப்பிட்டுக் குழைந்தான்.

நடராஜனுக்கு அவன் அடிக்கடி வீட்டுக்கு வருவது பிடிக்கவில்லை. ஆனால் பெற்றோர்கள் அவனிடம் காட்டிய அன்பை எதிர்த்துப் பேச முடியாமல் இருந்தான். ஒருசமயம் ராமலிங்கத்திடம் அவன் ரகசியமாகப் பேசுவதைப் பார்த்ததும் அவன் வெறுப்பு அதிகமாயிற்று. நடராஜன் வநததும் சட்டென அவர்கள் பேச்சு நின்று விட்டது.

''மணி அப்படிஎன்ன ரகசியம் சொல்கிறான்? நான் கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடாத விஷயமோ?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான் நடராஜன்.

''உன்னைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம். உன்னிடம் எப்படிக் கேட்பது என்றுதான் யோசித்துக்கொண்டிருந்தோம்'' என்று தயங்கினார் ராமலிங்கம்.

''மணி என்மீது இவ்வளவு அக்கறை கொண்டிருப்பது பற்றி ரொம்ப சந்தோஷம். என்ன கேட்க வேண்டும்?''

''இந்தச் சம்பந்தத்தில் உனக்கு ஏதாவது ஆட்சேபனை இருந்தால் தயங்காமல் இப்போதே சொல்லி விடு. கல்யாணம் செய்துகொண்ட பின்னர் நீங்கள் இருவரும் சந்தோஷமாக வாழ வேண்டும் அல்லவா?''

''நாங்கள் சந்தோஷமாக இருப்போம் என்பதில் மணிக்கு நம்பிக்கையில்லைபோலிருக்கிறது. அவன் என் வாழ்க்கையில் குறுக்கிடும் வரையில் இன்பமாகக் காலத்தை ஓட்டுவது கடினம்தான்'' என்றான் நடராஜன்.

''மணி உனககு அண்ணனைப் போன்றவன். அவனைப் பற்றி ஒன்றும் விகல்பமாகப் பேசாதே! உன்னை அப்படிக் கேட்டதற்கும் காரணம் இருக்கிறது. லண்டனிலிருந்து திரும்பியதும் நீ விமலாவை ஒரேயடியாகக் கோபித்துக் கொண்டு இரைந்தாயாமே!''

நடராஜனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''யார் அதை உங்களுக்குச் சொன்னது?'' என்று கேட்டான்.

''யார் சொன்னால் என்ன? நம்முடைய தோட்டத்திலேயே நடக்கும் விஷயம் எனக்குத் தெரியாமல் போய் விடுமா?''

''வேறு யார் சொல்லியிருப்பார்கள்? இந்தத் தடிப்பயல்தான் சொல்லியிருப்

பான்!'' நடராஜனுடைய கை விரல்கள் மூடி மூடித் திறந்தன.

''மணிதான் எனக்குச் சொன்னான். அதற்கு அவனை ஏன் சபிக்கிறாய்?''

''சபிப்பது மட்டுமா? இந்த அயோக்கியனுக்கு நன்றாக உதை கொடுத்துப் பாடம் கற்பிக்கப் போகிறேன்.''

பொறுமையிழந்து அளவு கடந்த கோபத்துடன், ஒரு அடி முன்னால் எடுத்து வைத்தான் மணி. பிறகு ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள் ராமலிங்கம் அவன் கரத்தைப் பற்றி இலேசாக அழுத்தினார். அந்தச்சமிக்ஞையைப் புரிந்து கொண்டு அடக்கத்துடன் தயங்கி நின்றான் மணி.

''உளறாதே, நடராஜா! மணியைப் போன்ற ஒரு நல்ல மனிதனைத் தேடிப் பார்த்தாலும் கண்டுபிடிக்க முடியாது. நம் குடும்பத்தினரின் நல்வாழ்வில் அவனுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.''

''ஆஹா! இந்த வீட்டில் எல்லோரையும் நன்றாக மயக்கி வைத்திருக்கிறான். நல்வாழ்வு நல்வாழ்வு என்று எல்லோரிடமும் பேசிப் பேசி அதை நரகவாழ்வாக மாற்றிக் கொண்டு வருகிறான்.''

''ஆத்திரத்தில் உன் புத்தி மழுங்கி விட்டது, நடராஜா! ஏதேதோ பிதற்றுகிறாய். விமலாவை மணந்துகொள்ள விரும்பினான் என்பதால் குலத்தைக் கெடுக்க வந்தவனாகி விடுவானா? உண்மையைச் சொல்லப் போனால் உன்னைப் போன்ற சஞ்சல புத்திக்காரனிடம் விமலாவைக் கைப்பிடித்துக் கொடுத்து அவள் வாழ்நாள் முழுவதும் துக்கப்படுவதைக் காண்பதை விட மணிக்கே கொடுத்து விடலாம்.''

''தாராளமாகக் கொடுங்கள். யார் குறுக்கே விழுந்து தடுக்கிறார்கள்?''

''நிச்சயமாக அப்படிச் செய்வேன். ஆனால் விமலாவை எண்ணித்தான் தயங்குகிறேன். அந்தக் குழந்தையின் உள்ளம் உன்னைக் கரம் பிடிக்கப் போவதாகவே கனவு கண்டு வந்திருக்கிறது. அவளை ஏமாற்ற மனம் வரவில்லை.''

''உங்கள் மனத்தைப் புண்படுத்த நான் விரும்பவேயில்லை, அப்பா! ஆனால் இந்த வஞ்சகனை எனக்குப் பிடிக்கவில்லை. அதை உங்களிடமிருந்து கூட என்னால் மறைத்து வைக்க முடியாது.''

''உனக்கு அவனைப் பிடிக்காவிட்டால் மற்றவர்களும் அப்படியே நடந்து கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்க உனக்கு உரிமையில்லை.''

''தாராளமாக அவனிடம் ஒட்டிக் கொள்ளுங்கள். நான் எச்சரிக்கை செய்தாகிவிட்டது. விமலாவைக் கல்யாணம் செய்து கொள்வதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது.''

''யோசித்துச் சொல், நடராஜா! அவசரம் ஒன்றுமில்லை.''

''யோசிப்பதற்குஒன்றுமில்லை,அப்பா! எனக்குப் பூரண சம்மதம்தான்.''

''அன்று நர்ஸிங்ஹோமில் நடந்ததையும் கேட்டு விடுங்கள். நர்ஸ் நிர்மலாவிடம் இவன் நடந்துகொண்டது சரிதானா என்பதையும் கேட்டு விடுங்கள்'' என்றான் மணி.

கதவருகே சென்று கொண்டிருந்த நடராஜன் சடாரென்று திரும்பினான். பாய்ந்து சென்று மணிசேகரனின் சட்டையைக் கெட்டியாகப் பிடித்து, உலுக்கினான். ''அயோக்கிய ராஸ்கல்! வேவு பார்ப்பதே உன் வேலையா? பிறர் வாழ்வில் தலையிடுவதேஉன் தொழிலா?''

மணி திமிறித் தன்னை விடுவித்துக் கொண்டான். நடராஜன் இறுகப் பற்றியிருந்த சட்டை அவன் மார்புக்கு நேராகக் கிழிந்து தொங்கியது. அவனை அடிக்க ஆரம்பித்தான் நடராஜன்.

''நடராஜா! நிறுத்து! நிறுத்து!'' என்று சொல்லிக் கொண்டே குறுக்கே புகுந்தார் ராமலிங்கம். அளவுகடந்த கோபத்திலே என்ன செய்கிறோம் என்று தெரியாமலே அப்பாவைப் பிடித்து ஒரு தள்ளுத் தள்ளினான் நடராஜன்.

'ஐயோ!' என்று மார்பைப் பிடித்துக் கொண்டு கீழே விழுந்தார் ராமலிங்கம்.

அவர்கள் போட்ட கூச்சலைக் கேட்டு விட்டுப் பொன்னம்மாளும், விமலாவும், மரகதமும் ஓடி வந்தார்கள்.

அத்தியாயம் 28

முதல் சூழ்ச்சி

மல்லிகா தனக்கு வந்த கடிதத்தைப் பிரித்துப் படித்தாள். 'மிக முக்கியமான ஒரு காரணத்துக்காகத் தங்களைச் சந்திக்க விரும்புகிறேன். தங்களைக் காண எப்போது வரலாம்?' என்று கேட்டிருந்தார் டைரக்டர் சுகுமாரன்.

மல்லிகாவின் உடல் புல்லரித்தது. தனது கண்களையே அவளால் நம்ப முடியவில்லை. தான் படிப்பது உண்மை தானா? அல்லது தனது அறிவுதான் தன்னை ஏமாற்றுகிறதா? மறுபடியும் மறுபடியும் அந்தச் சிறிய கடிதத்தைப்



படித்தாள். உண்மையிலேயே திரைப்பட நட்சத்திரமாகும் வாய்ப்பு எனக்குக் கிட்டப் போகிறதா? அதற்குள் எப்படிச் சொல்ல முடியும்? என்னைப் பார்க்க வேண்டும் என்றுதானே எழுதி யிருக்கிறார். மணி எடுத்துச் சென்ற புகைப் படத்தைப் பார்த்திருப்பார். படத்தில் ஒரு வேளை பிடித்திருந்தாலும் நேரில் பார்க்கும்போதும் பிடிக்கும் என்பது என்ன நிச்சயம்? ஏன் பிடிக்காது? என் அழகுக்கு என்ன குறைச்சல்?

நிலைக்கண்ணாடியின் முன்னால் நின்று தன் அழகைப் பார்த்துக் கொண்டாள் மல்லிகா. திரைப்படத்துக்கு ஏற்ற 'முக வெட்டு' உன்னிடம் இருக்கிறது என்று சேகர் அடிக்கடி சொன்னது அவளுக்கு நினைவு வந்தது. டைரக்டர் சுகுமாரனுக்கு அதில் சிறிதளவு சந்தேகம் ஏற்பட்டாலும் அவர் கால்களில் விழுந்து, தங்கள் படத்தில் 'ஒரே ஒரு சந்தர்ப்பம் எனக்கு அளித்துப் பாருங்கள். உங்களுக்கு ஏமாற்றம் அளிக்க மாட்டேன்' என்று கெஞ்சியாவது எனது கனவை நினைவாக்கிக் கொள்ள வேண்டும்.

அளவற்ற குதூகலத்தோடு நாதனிடம் கடிதத்தைக் காட்டி மகிழ்ந்தாள் மல்லிகா. அதைப் பார்த்ததுமே அவர் முகம் சுருங்கிப் போய் விட்டது. ''என்ன



பதில் எழுதப் போகிறாய், மல்லிகா?'' என்றார்.

''ஞாயிற்றுக்கிழமை காலையில் வந்து என்னைச் சந்திக்கும்படி கேட்டுக் கொள்ளப் போகிறேன்.''

''நிஜமாகத்தான் சொல்லுகிறாயா? உண்மையிலேயே என்னை மறந்து விட்டுப் போய்விடப் போகிறாயா?''

''ஒருநாளும் உங்களை மறக்க மாட்டேன். வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு நன்றி செலுத்துவேன். உங்களுடைய முயற்சியும் ஒத்துழைப்பும் இல்லாவிட்டால் நான் எப்படிக் கலை உலகில் முன்னுக்கு வந்திருக்க முடியும்? சினிமாவில் நடிக்கும் சந்தர்ப்பம்தான் எனக்கு எப்படிக் கிடைத்திருக்கும்?''

''மல்லிகா! இந்தத் திரைப்பட ஆசையை மட்டும் விட்டு விடு. உன்னைப் பிரிந்து என்னால் வாழவே முடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. நீ சம்மதம் தெரிவித்தால் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளவும் தயாராக இருக்கிறேன். இன்பமாக வாழ்வோம்.''

ஒரே ஒரு கணம் மல்லிகாவுக்குச் சபலம் தட்டியது. 'கல்யாணமாகாமலே எத்தனை காலம் வாழ்வது? இன்பத்தைப் பகிர்ந்து கொள்ளவும் துன்பத்தைத் தீர்க்கவும் ஒரு கணவன் வேண்டாமா? 'சரி' என்று சொல்லி விட்டு நிம்மதியாக வாழ்ந்தால் என்ன?' அந்த எண்ணத்தை அடுத்த கணமே மாற்றிக் கொண்டாள். 'வெண்ணெய் திரண்டு வருகிற சமயத்தில் தாழி உடைந்து போயிற்றாம். இது என்ன அசட்டுத்தனம்!'

''முடியவே முடியாது'' என்று நிர்மானமாகச் சொன்னாள் மல்லிகா.

''எது முடியாது?''

''கல்யாணம் செய்து கொள்ளவும் முடியாது; திரைப்பட ஆசையை விடவும் முடியாது. சென்ற ஏழெட்டு மாதங்களாக உங்கள் நாடக நிலையத்தின் உயர்வுக்காகப் பாடுபட்டிருக்கிறேன். இப்போது நான் உயர்ந்த நிலையை அடையும் தருணம் வந்திருக்கிறது. தடைசொல்லாதீர்கள்.''

நாதன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். ''சரி, அப்புறம் உன் இஷ்டம்'' என்றார்.

''தயவுசெய்து இந்த உறையில் சுகுமாரனுடைய விலாசத்தை எழுதிக் கொடுங்கள். அவர் விலாசம் கடிதத்துக்கு மேலே ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. எனக்குத் தெரியவில்லை'' என்றாள் மல்லிகா.

நாதன் உறையில் விலாசத்தை எழுதினார். ''நானே வேண்டுமானாலும் தபாலில் சேர்த்து விடுகிறேன்'' என்றார்.

''வேண்டாம்! வேண்டாம்! உங்களுக்கு அந்தச் சிரமத்தைக் கொடுக்க மாட்டேன்'' என்றாள் மல்லிகா.

உண்மையில் அவளுக்கு நாதனிடம் நம்பிக்கையில்லை. வாசலுக்குப் போனதும் கடிதத்தைக் கிழித்துப் போட்டு விட்டு, 'தபாலில் சேர்த்து விட்டேன்' என்று சொன்னாலும் சொல்லுவார்!

சுகுமாரனுக்குக் கடிதம் எழுதி உறையிலிட்டுப் பத்திரமாகத் தபால் பெட்டியில் சேர்த்து விட்டுத் திரும்பினாள் மல்லிகா.

* * *


அறையில் நுழைந்த புது மனிதரை வியப்புடன் பார்த்தாள் மல்லிகா. ''யாரைப் பார்க்க வேண்டும்?''

''உன்னைத்தான்'' என்று சொல்லிக் கொண்டே அருகில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார் சுகுமாரன். மல்லிகாவைக் கண்களாலேயே விழுங்கி விடுபவர்போல் உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரை பார்த்தார்.

''தாங்கள்......யார் என்று எனக்குத் தெரியவில்லையே?''

''சுகுமாரன்! டைரக்டர் சுகுமாரன்.''

மல்லிகாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவரை ஞாயிற்றுக்கிழமை காலை அல்லவா வரச் சொல்லி எழுதியிருந்தோம்? இன்று வெள்ளிக்கிழமைதானே? சுவரில் மாட்டியிருந்த காலண்டரை ஒருதரம் பார்த்தாள் மல்லிகா. ஏன் இன்று வந்தார்? ஐயோ! முகத்தைக் கூட அலங்கரித்துக் கொள்ளவில்லையே? புத்தாடை உடுத்தவில்லையே? இந்தக் கோலத்தில் என்னைப் பார்த்தால் அவருக்கு நிச்சயமாகப் பிடிக்காது! நட்சத்திரப் பதவி கிட்டவே கிட்டாது!


ஏன் நம்பிக்கையை விடுகிறீர்கள்!
அது இயற்கை, நரை மயிர்
உங்களுடைய தோற்றத்
தைக்கெடுக்கிறது. ஆனால்
நீங்கள் நம்பிக்கையை விட
வேண்டாம். ஆயிரக்கணக்
கான ஜனங்களைப் போல்
நீங்களும் லோமா உப
யோகித்து அமைதியுட
னும் தகுதிவாய்ந்த தோற்
றத்துடனும் இருங்கள்.
லோமா
கருமையையும்
வனப்பையும் தருபவை
ஸோல் ஏஜெண்டுகள் :
எம். எம். கம்பாட்வாலா, அஹமதாபாத் 1
ஏஜெண்டுகள் :
ஸி நரோத்தம் அண்டு கோ பம்பாய் 2 Tel : 30575
MPS-TAM.
சென்னை ஏஜண்டுகள் : ஜே பாலபாய் & கம்பெனி, 280, என்பீன
கேட், மதராஸ்-1 ● இலங்கை ஏஜண்டுகள் : சிக்குல் கதீர் & கோ.,
41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

"இன்று உங்களை நான் எதிர்பார்க்கவில்லை" என்று மிகுந்த தயக்கத்துடன் கூறினாள் மல்லிகா.

"என்னைப் பார்க்கவே விரும்பவில்லை என்றுதான் கடிதத்திலேயே எழுதிவிட்டாயே? இருந்தாலும் ஒரு முக்கிய காரியத்துக்காக வந்திருக்கிறேன்."

மல்லிகாவுக்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. "நான் அப்படி எழுதவேயில்லை. ஞாயிற்றுக்கிழமை உங்களை எதிர்பார்க்கிறேன் என்று எழுதியிருந்தேன். இன்று வெள்ளிக்கிழமைதானே?"

சுகுமாரனின் முகம் சுருங்கியது. சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து அவளிடம் நீட்டினார். "இந்தக் கடிதத்தை நீதானே எழுதினாய்?"

கடிதத்தைப் படித்துப் பார்த்தாள் மல்லிகா: "ஐயா! தாங்கள் எதற்காக என்னைச் சந்திக்க விரும்புகிறீர்களோ, தெரியாது. ஆனால் எனக்கு உங்களைச் சந்திக்க விருப்பமில்லை. திரைப்படங்களில் நடிக்கும் ஆசையும் எனக்கு இல்லை. தயவு செய்து என்னைக் காண வந்து அநாவசியமாகத் தொந்தரவுபடுத்தாதீர்!"



"பொய்! பொய்! இதை நான் எழுதவேயில்லை! உங்களைச் சந்திக்க விரும்புகிறேன் என்றுதான் எழுதியிருந்தேன். அந்தக்கடிதம் உங்களுக்குக் கிடைக்கவேயில்லையா?" என்றாள்.

"உன்னிடமிருந்து எனக்கு வந்த ஒரே ஒரு கடிதம் இதுதான்."

"இதை நாதன்தான் எழுதியிருக்கிறார். ஆகா! என் வாழ்வையே பாழாக்க அல்லவா முயற்சி செய்திருக்கிறார். என் லட்சியங்கள் தவிடு பொடியாகியிருக்கும். இந்தக் கடிதத்தை நான் எழுதியிருந்ததாக நம்பி நீங்கள் வராமல் இருந்திருந்தால் என் கதி என்ன ஆவது?"

"அது எப்படியாவது போகட்டும். எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. உன் புகைப்படத்தைப் பார்த்ததுமே உன்மீது எனக்கு அன்பு பிறந்து விட்டது. உன் பெயர் மல்லிகா என்று அறிந்ததும் அந்த அன்பு பன்மடங்காகப் பெருகி உன்னை உடனே வந்து காணவேண்டும் என்றும் தூண்டியது. உன் பெற்றோர்கள் யார்? அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்? சென்னையில் எத்தனை நாட்களாக இருக்கிறாய்? எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லு!"

மல்லிகாவுக்குத் திடீரென்று சந்தேகம் வந்து விட்டது. "எதற்காக இதையெல்லாம் கேட்கிறீர்கள்?"

"எனக்கே தெரியவில்லை, மல்லிகா! ஏதோ ஒரு சக்தி என்னை உன்னிடம் கவர்ந்திருக்கிறது. உன்னிடம் அன்பு செலுத்த வேண்டும், ஆதரித்துப் பாதுகாக்கவேண்டும் என்று தோன்றுகிறது. அதனால்தான் நீ வரவேண்டாம் என்று கடிதம் எழுதியும் நானாகவே உன்னைத் தேடி வந்தேன். என்னை நம்பு."

இனம் தெரியாத ஒரு பிணைப்பு அவர்களிடையே ஏற்பட்டு விட்டதை மல்லிகாவும் உணர்ந்தாள். தயக்கமில்லாமல் தன்னைப் பற்றி எல்லாவற்றையும் சொன்னாள். அளவுகடந்த ஆர்வத்துடன் எல்லாவற்றையும் கேட்டார் சுகுமாரன். அவள் கூறி முடிக்கும்போது அவருடைய பரந்த மார்பு விம்மித் தணிவதையும் அவர் கண்களில் நீர் ததும்பி நிற்பதையும் உணர்ச்சிகளை வெளிக்காட்டாத முகத்தில் அன்பு ததும்புவதையும் கண்டாள் மல்லிகா. அவர் பேசியபோது குரல் கம்மிப் போயிருந்தது. தொண்டையை அடைத்தது. அடிக்கடி நின்று நின்று நாத் தழுதழுக்க நிதானமாகப் பேசினார்.

"நீ இனிமேல் இந்த ஹோட்டலில் தன்னந்தனியாக வசிக்கக் கூடாது, மல்லிகா. உனக்காக உடனே ஒரு வீடு பார்க்கிறேன். அதில் நீ சௌக்கியமாக இரு. உனக்கு என்ன தேவையானாலும் என்னைக் கேள். கூடிய சீக்கிரம் ஒரு நல்ல பையனைப் பார்த்து உனக்குக் கல்யாணம் செய்து வைக்கிறேன். குழந்தை குட்டிகளுடன் நீ சந்தோஷமாக இல்லறம் நடத்துவதைப் பார்த்தால்தான் என் மனம் நிம்மதி அடையும். இப்போது எனக்கு விடை கொடு. நான் போய் வருகிறேன்."

மல்லிகாவுக்கு ஒரே ஏமாற்றம். "என்னுடைய கல்யாணத்தைப் பற்றிப் பேசத்தான் இங்கு வந்தீர்களா?"

சுகுமாரன் சிரித்துக் கொண்டே, "இல்லை மல்லிகா! சும்மா உன்னைப் பார்த்து விட்டுப் போகத்தான் வந்தேன். இங்கே வந்த பிறகு நீ கல்யாணம் செய்து கொண்டு குடியும் குடித்தனமுமாக, நல்ல குடும்பப் பெண்ணாக இருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொண்டேன்" என்றார்.

"ஐயா! உங்களுக்குக் கிடைத்த அந்தக் கடிதத்தை நான்தான் எழுதினேன். இனிமேல் என்னைக் காண நீங்கள் வரவே வேண்டாம்!" என்றாள் மல்லிகா.



பிரபல ஆடிட்டர் திரு எஸ். சூரியநாராயணன் அவர்களின் புதல்வி குமாரி சிவசங்கரி, அவர் சகோதரர் திரு வெங்கடராமனின் புதல்வி குமாரி சாந்த சங்கரி இவர்களின் நடன அரங்கேற்றம் சென்ற மாதம் 29ந் தேதி வாணி மகாலில் சிறப்பாக நடைபெற்றது. கூடியிருந்த ரஸிகப் பெருமக்கள் அனைவரும் நடனத்தை மிகவும் ரஸித்துப் பாராட்டினர்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்? என்னிடம் வேறு ஏதாவது எதிர்பார்த்தாயா?" என்று கேட்டார் சுகுமாரன்.

"திரைப்பட டைரக்டர் சுகுமாரனிடம் என்ன எதிர்பார்ப்பார்கள்?"

சுகுமாரன் ஒருகணம் யோசித்தார். அவர் முகம் மலர்ந்தது. புன்னகையுடன், "சினிமாவில் நடிக்க விரும்புகிறாயா, மல்லிகா? அந்தக் கடிதத்தைப் படித்தபிறகு அதைப் பற்றி யோசிக்கவே தோன்றவில்லை!" என்றார்.

"அதை நான் எழுதவில்லையே."

"சரியாய்ப் போச்சு. முதலில் நான் எழுதவில்லை என்றாய், அப்புறம் நான் தான் எழுதினேன் என்றாய். இப்போது மறுபடியும் நான் எழுதவேயில்லையே என்கிறாய். எதை நம்புவது?"

"இப்போது நிச்சயமாகச் சொல்கிறேன். கேளுங்கள். அதை நான் எழுதவேயில்லை. நாதன்தான் எழுதியிருக்கிறார். என்னை விட்டுப் பிரிய அவருக்கு மனமில்லை. அதற்காக இந்தப் பொய்க் கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறார். ஆனால் நான்எழுதிய கடிதம்தான் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை."

"அது என்னிடம் பத்திரமாக இருக்கிறது" என்ற குரலைக் கேட்டு இருவரும் திரும்பினார்கள். "இப்போது அதன் உண்மையான உரிமையாளரிடம் கொடுத்து விடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே டைரக்டர் சுகுமாரனிடம் ஒரு கடிதத்தை நீட்டினார், அப்போதுதான் அறையினுள்நுழைந்த நாதன்.

சுகுமாரன் விடைபெற்றுக்கொண்டு போன பிறகு, "இது எப்படி உங்கள் கையில் வந்தது? நான் பத்திரமாகத் தபால் பெட்டியில் போட்டு விட்டுத் தானே வந்தேன்?" என்று அளவற்ற வியப்புடன் கேட்டாள் மல்லிகா.

"உறையின் மீது விலாசம் எழுதியது நான்தான் என் பதை மறந்து விட்டாயே. டைரக்டர் சுகுமாரனுக்கு என்ன கடிதம் எழுதுகிறாய் என்று பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசை. அத்துடன் அவரை நீ சந்திக்காமல் இருக்கவும் முயற்சி செய்தேன். அதற்காக ஆங்கிலத்தில் என்விலாசத்தையே உறையில் எழுதினேன். சுகுமாரனுக்கு என்று எண்ணி நீ அனுப்பிய கடிதம் பத்திரமாக என் கைக்கே வந்து சேர்ந்தது. நீ எழுதியது போல் அவருக்கு நானே ஒரு கடிதம் எழுதித் தபாலில் சேர்த்தேன். அதைப் பார்த்துவிட்டு அவர் வராமல் இருந்து விடுவார் என்று நினைத்தேன். ஆனால் அவர் என்னை ஏமாற்றி விட்டார்!"

"என் வாழ்வைப் பாழடிப்பதில் உங்களுக்கு ஏன் இத்தனை அக்கறை?"

"உன்மீது நான் கொண்டிருக்கும் காதல்தான், மல்லிகா! ஆனால் உன் வாழ்வைக் கெடுக்க விருப்பமில்லை. அதை இன்பமயமாக விளங்கச் செய்யவே விரும்புகிறேன். அதற்காக நான் செய்த சூழ்ச்சி இது."

"நல்ல வேளையாக நீங்கள் அதில் வெற்றி அடையவில்லை."

"முதல் சூழ்ச்சியில் வெற்றி அடையவில்லை என்பது உண்மைதான். ஆனால் தோல்வியை அவ்வளவு சுலபமாக நான் ஒப்புக்கொள்ள மாட்டேன், மல்லிகா!" என்று சொல்லிக் கொண்டே தன்னிடமிருந்த ஒரு காகிதத்தை அவள் பக்கமாக நீட்டினார் நாதன். (தொடரும்)

14. கிழவனின் சூழ்ச்சி!

சில நாட்களில் படகு தங்கத் தீவை அடைந்தது. கிழவன் ஓடோடியும் வந்து வீராங்கனை அணைத்துக் கொண்டு, ''முத்து கிடைத்து விட்டதல்லவா? எங்கே எடு; பார்க்கலாம்'' என்றான்.

வீராங்கனுக்கு அவனுடைய அந்த அவசரமும் படபடப்பும் இனம் புரியாத ஒரு சந்தேகத்தை உண்டாக்கின. அவனுடைய குரலிலும் ஒரு மாற்றம் இருந்தது. உடனே தன் மனத்துக்குள்ளேயே 'என்ன வந்தாலும் சரி, இந்தக் கிழவனின் கையில் முத்தைக் கொடுக்கவே கூடாது' என்று அவன் உறுதி செய்துகொண்டான்.

கிழவன் ஒரே அடியாகப் பறந்தான். 'எங்கே முத்தை எடு, பார்க்கலாம்' என்று நொடிக்கொரு தடவை ஆவலோடு கேட்டான். வீராங்கனோ அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் தன் பசியைப் போக்க முனைந்தான். வீராங்கனின் அந்தச் செய்கை கிழவனுக்கு அளவிட முடியாத ஆத்திரத்தை அளித்தது. தன்னுடைய வஞ்சகத் திட்டம் யாவும் பயனற்றுப் போய் விடுமோ என்று எண்ணினான். அவன் முகம் ஒரு கணம் பயங்கரமாக மாறிப் பிறகு முன் நிலையை அடைந்தது.

வீராங்கன் அதைக் கவனித்து விட்டான். அது வரையில் புரியாத ஒன்று இப்போது அவனுக்குப் புரிந்தது. 'அவன் உண்மையான கபாடபுரவாசியாக இருக்க முடியாது. ஒரு கபட மந்திரவாதிதான். குமரிமுத்தை என்னிடமிருந்து அபகரிக்கப் பார்க்கிறான். அதற்கு நான் விடப் போவதில்லை.'

வீராங்கனுக்கு ஏற்பட்ட சந்தேகம் அதிகரித்தது போலவே கிழவனின் அவசரமும் அதிகரித்தது. ''முத்தைக் கொடு, முத்தைக் கொடு'' என்று அவன் நச்சரிக்க ஆரம்பித்து விட்டான்.


''ஏன் தாத்தா இப்படி அவசரப்படுகிறீர்கள்? குமரிமுத்து என்னிடம்தான் பத்திரமாக இருக்கிறது. படகில் போகும் பொழுது சாவகாசமாகப் பார்த்துக் கொள்ளலாமே?'' என்றான் வீராங்கன்.

''இல்லை, இல்லை. முதலில் குமரி முத்தை இப்படிக் கொடு. நீ சிறு பிள்ளை'' என்று இழுத்தாற்போல் கூறினான்.

வீராங்கனின் சந்தேகம் ஊர்ஜிதமாகி விட்டது. உடனே என்ன நடந்தாலும் குமரி முத்தை எடுக்கவே கூடாது என்று எண்ணிக் கொண்டு கிழவனைச் சமாதானப் படுத்தும் முறையில் தன் இடையில் இருந்த குமரிப் பவளத்தை எடுத்துக் கிழவனிடம் நீட்டி, ''இது என்னவென்று சொல்லுங்கள், பார்க்கலாம்'' என்றான்.

கிழவன் அந்தப் பவளத்தைக் கையில் வாங்கிக் கொண்டு 'கடகட'வென்று ஒரு பயங்கரச் சிரிப்பு சிரித்தான். அடுத்த நொடி யாரும் எதிர்பாராத வண்ணம் அந்தப் பவளத்தைத் தன் பலம் கொண்ட மட்டும் தூர வீசி எறிந்தான். அது அலை கடலில் போய் விழுந்து 'குபுக்' கென்று மூழ்கிப் போய் விட்டது.

கிழவனின் அந்த மூர்க்கச் செயல் வீராங்



கனைத் துணுக்குற வைத்தது. சீக்கிரத்திலேயே இந்தக் கிழவனால் தனக்கு ஆபத்து வரப் போகிறதென்று

நினைத்தான். எவ்வளவோ சிரமப்பட்டுக் கொண்டுவந்த சக்தி வாய்ந்த குமரிப் பவளம் இப்படி அநியாயமாகப் போனதைக் கண்டு அவன் நெஞ்சு குமுறியது.

படகு கபாடபுரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. வீராங்கனும் கிழவனும் எதிர் எதிராக உட்கார்ந்திருந்தார்கள். கிழவன் 'உர்' என்று முகத்தை வைத்துக் கொண்டு தீவிரச் சிந்தனையில் மூழ்கி இருந்தான்.

அவனுடைய தோற்றமும் அங்கே நிலவிய அமைதியும் வீராங்கனுக்கு ஒருவிதப் பயத்தை உண்டாக்கின. கிழவனிடம் சாமர்த்தியமாகப் பேச்சுக் கொடுத்தான் வீராங்கன்.

''என்ன தாத்தா! ஒரேயடியாகச் சிந்தனையில் மூழ்கி விட்டீர்கள்? எந்தக் கோட்டையைப் பிடிப்பதாக உத்தேசம்?''

அவ்வளவுதான்; வீராங்கன் இப்படிக் கேட்டானோ இல்லையோ, அடுத்த நொடி ''உன் குரல் வளையைப் பிடிப்பதுதான் எனது உத்தேசம்'' என்று அடித்தொண்டையால் கர்ஜித்துக் கொண்டே வெறி கொண்ட வேங்கையைப் போல் வீராங்கனின் மேல் பாய்ந்தான் கிழவன்.

அவன் பாய்ந்த வேகத்தில் படகு தத்தளித்து ஆடிக்கொண்டே 'டபக்' கென்று கடலில் கவிழ்ந்து விட்டது.

வீராங்கன் கிழவனின் இந்தத் திடீர்த் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை என்று சொல்ல முடியாது. முத்துச் சிப்பியும், தேவர்களும் 'வழியில் ஒரு ஆபத்து வரும்' என்று எச்சரித்திருந்ததை அவன் ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்து அதைச் சமாளிக்கத் தயாராகவே இருந்தான்.

தங்கத் தீவு வருகிற வரை ஒரு ஆபத்தும் வராமல் போகவே இனிமேல்தான் ஆபத்து வரும் போலும் என்று தீர்மானம் செய்தான். அவன் தீர்மானித்த படியே தங்கத்தீவுக்கிழவனின் நடவடிக்கை அவனுக்குச் சந்தேகத்தை அளித்



தது. 'இவனால்தான் எனக்கு ஆபத்து நேரப் போகிறது' என்று அவன் நிச்சயித்துக் கொண்டான்.

அவன் எதிர்பார்த்தது போலவே கிழவன் அவனை நோக்கிப் பாய்ந்ததும் விராங்கன் மானைப்போல் ஒரு துள்ளல் துள்ளி நீரில் போய் விழுந்தான். பாவம்! கிழவனுக்குச் சரியான அடி. நல்ல ஏமாற்றம். அதே சமயத்தில் படகும் கவிழ்ந்து கிழவனை நீரில் அமுக்கி விட்டது.

ஆனால் நாம் எதிர்பார்த்தது போல கிழவன் ஏமாந்தவன் இல்லை. மூச்சை அடக்கி நீர்வழியாகவே நீந்திக் கடல் மட்டத்துக்கு வந்து விட்டான். தூரத்தில் விராங்கன் நீந்திப் போய்க் கொண்டிருப்பதைக் கண்டு அவனைப் பிடிப்பதற்காகக் கிழவனும் வேகமாக நீந்தத் துவங்கினான். மீனைப் போல் வெகு வேகத்தோடு நீரைக் கிழித்துக் கொண்டு நீந்தினான். 'தொண்டு கிழவனா இப்படி நீந்துகிறான்?' என்றுதான் நாம் ஆச்சரியப் படவேண்டும்.

விராங்கன் கிழவன் தன்னைப் பிடிக்க வருகிறான் என்பதைத் தெரிந்து கொண்டு மும்முரமாக நீந்தத் துவங்கினான். இருந்தாலும் கிழவனைப் போல் அவ்வளவு விரைவாக அவனால் நீந்த முடியவில்லை.

எல்லை காணமுடியாத அந்தப் பரந்த கடலில் ஒரு அருமையான நீச்சல் போட்டி நடந்து கொண்டிருந்தது. இப்பொழுது விராங்கனுக்கும் கிழவனுக்கும் இடையிலே உள்ள தூரம் ரொம்ப ரொம்பக் குறைவாக இருந்தது.

நேரம் ஆக ஆக விராங்கனுக்குக் கை களைத்தது. உடலில் சோர்வு உண்டாயிற்று. கிழவனோ கடுகளவு கூடக் களைப்பில்லாமல் மன வேகத்தில் முன்னேறிக் கொண்டிருந்தான். அவனிடமிருந்து தப்புவதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா என்று எண்ணித் தனது கூரிய மூளையைக் கொஞ்சம் முடுக்கி விட்டான் விராங்கன்.

அவனுக்குத் தன் இடையில் கிடக்கும் குடுவைகளின் நினைப்பு வந்தது. அவைகள் வலுவான கொடியில் இணைத்து இடைவாரில் முடிந்திருந்ததால் அவை இதுவரையிலும் அறுந்து போகாமல் பத்திரமாக இருந்தன. அவற்றிலிருக்கும் சிவப்புக் குடுவையை எடுத்து அதிலிருக்கும் சிவப்புப் பொடியை மூக்கில் இழுத்துக் கொண்டால் கடலுக்குள் மூழ்கி விடலாம். பிறகு கடல் வழியாகவே கபாடபுரத்தை அடைந்து விடலாம். கிழவனால் ஒன்றும் செய்ய முடியாது.

ஆனால் அது முடிகிற காரியமா? விராங்கன் குடுவையை அவிழ்த்து அதைத் திறந்து பொடியை மூக்கில் இழுப்பதற்குள்ளாகக் கிழவன் அவனைப் பிடித்துக் கழுத்தை நெறித்து விடுவானே!

அப்படியென்றால் இப்பொழுது தப்புவதற்குத்தான் வழி என்ன? இதுவரையில் அனுபவித்த துன்பமெல்லாம் விராங்கனுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. இப்பொழுது வந்திருப்பதுதான் உண்மையிலேயே துன்பம். உயிரைப் போக்கும் ஆபத்து. இதிலிருந்து தப்பி விட்டால் இனி எவ்வித ஆபத்தும் இருக்காது. குமரி முத்தைப் பத்திரமாகக் கொண்டு போய் அரசர் கையிலேயே நேரில் கொடுக்கலாம். அதனால் அவனுக்கு ஏற்படும் பெருமையும் புகழும்தான் எவ்வளவு ?

திடீரென்று கறுப்புக் குடுவையின் ஞாபகம் வந்தது. அதற்குள் என்ன இருக்கும்? கிழவன் அதை ஊர் சென்ற பிறகல்லவா திறந்து பார்க்கச் சொன்னான்? இனியும் அந்த வஞ்சகக் கிழவனின் பேச்சை நம்பலாமா? கூடவே கூடாது. கிழவன் தகுந்த முன்னேற்பாட்டோடுதான் அதைக் கொடுத்திருக்க வேண்டும். ஆம்! இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. இந்தக் குடுவையில் உயிரைப் போக்கும் மருந்துதான் இருக்க வேண்டும்.

விராங்கன் இவ்வாறு நினைத்ததில் தவறில்லை. தங்கத் தீவுக் கிழவன் நிஜமாகவே ஒரு மந்திரவாதிதான். தங்கத் தீவும் தங்க மாளிகையும் அவன் மந்திர சக்தியால் ஏற்பட்டவைதான். (தொடரும்)



ஸீலிட்ட டின் சுத்தத்திற்கு உத்தரவாதம்
நியாய விலை அதை
மேலானதாகச் செய்கிறது.
துஷார்
வனஸ்பதி
விடமின்கள் சேர்க்கப்பட்டது
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ்
லிட்., கர்நூல்
Tushar
5lbs
TI-4/57



ஜாக்கிரதை
ஜாக்கிரதை
ஜாக்கிரதை
'டெட்டால்' வாங்கும்பொழுது ஸீலிட்ட பெட்டியில் இல்லாத மற்றவைகளை வாங்காதீர்கள்
சிறிய அளவு 'டெட்டால்' தேவைப்படுபவர்களிடம் போலிச் சரக்குகளும் மட்டரக கிருமி நாசினிகளும் விற்கப்படுகின்றன.
உண்மையான 'டெட்டால்' மூன்று அளவுகளிலே முறையே 2, 4, 16 அவுன்ஸ் பாட்டில்களில் உங்களுக்குக் கிடைக்கும். இப்பாட்டில்கள் எல்லாம் ஸீலிட்ட அட்டைப்பெட்டிகளில் இருக்கின்றன.
நீங்கள் அபாயமற்றிருக்க, ஒரிஜினல் பாக்கிங் உள்ள 'டெட்டாலை' வாங்குங்கள். எப்பொழுதும் உங்கள் வீட்டில் ஒரு பாட்டில் 'டெட்டால்' வைத்திருங்கள்.
பொது மக்கள்
நன்மைக்காக
பிரசுரிக்கப்பட்டது
அட்லான்டிஸ் (ஈஸ்ட்)
லிமிடெட்
(இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பட்டது)
ANTISEPTIC
DETTOL
DI-6
AEL 1877

நிலவும் நிற்பானால்....



அன்று மான்குடி நீதித்தலத்தில் திருவிழாக் கூட்டம்; சுற்று வட்டாரத்தில் ஏழெட்டு மைல்களுக்கப்பாலிருந்து கூட கிராமத்து ஆண்களும் பெண்களும் திரளாக வந்து நீதித்தலத்தில் காத்துக் கிடந்தனர். காரணம், ஆறேழு மாதங்களாக அந்த வட்டாரத்தில் அலசப்பட்டுக் கொண்டிருந்த புதூர் இரட்டைத் தாலி வழக்கில் அன்று தீர்ப்பு கூறப்படப் போகிறது என்ற செய்தி எங்கும் பரவியிருந்ததுதான். சென்ற ஒரு வாரமாக இரு பக்கங்களிலும் பக்கத்துக்குப் பத்துப் பதினைந்து சாட்சிகள் விசாரிக்கப்பட்டார்கள். ஊரே இரண்டு பட்டு சாட்சி சொல்லி இருந்ததால், தீர்ப்பை அறிய மக்கள் துடிதுடித்துக் கொண்டிருந்தார்கள். நாழிகைக்கு நாழிகை ஜனக் கூட்டம் அதிகரித்துக் கொண்டு வந்ததைப் போல் பரபரப்பும் அதிகமாகவே இருந்தது.

மான்குடிக்கு வடக்கே இரண்டு மைல் தூரத்தில் இருந்த புதூர் வெகு அழகான ஊர்; தோப்பும் துரவும், நன்செய் நிலங்களும், புன்செய்க் காடுகளும் கண்டவர் மனத்தில் நிறைந்த மகிழ்ச்சியை அளிக்கும். அன்னை பூமி அழகானதொரு பச்சைக் கம்பளத்தைப் போர்த்திக் கொண்டிருப்பது போலத் தோற்றமளிக்கும். அந்தக் கிராமத்துக் கீழத்தெரு நடேச அம்பலத்துக்குச் சொக்கி தலைச்சன் பெண். அவளுக்கு அந்தப் பெயரை வைத்ததைப் பற்றி அவள் பாட்டிக்கு ஆராத் துயரமே இருந்து வந்தது. தன்னுடைய அழகான முனியம்மா என்ற பெயரைத் தன் பேத்திக்கு ஏன் வைக்கவில்லை என்று தன் மருமகளுடன் நினைத்த போதெல்லாம் சண்டை போட்டாள். 'பேரைப் பார்க்கவில்லை, பேரை! சொக்கியாம் சொக்கி! கொக்கின்னு வேணுமானால் வைக்கிறதுதானே!..' இப்படி வந்தவர்கள் போனவர்கள் இடத்தில் எல்லாம் சொல்லி அந்தக் கிழவி மாய்ந்தாள்! ஆனால் அவள் பேச்சை யார் கேட்பார்கள்? நடேச அம்பலத்தின் மனைவி தன் மகளுக்கு வைத்த பெயரே மிகவும் பொருத்தமானது என்று சொக்கியைப் பார்த்தவர்கள் யாவரும் ஒருமுகமாகச் சொல்லி வந்தார்கள்! அவள் அவ்வளவு அழகு! அவள் முகத்தில் இருந்த கவர்ச்சி எவர் மனத்தையும் சொக்கி

பூசுரன்

மே மாதப் போட்டியில் நூறு ரூபாய் பரிசு பெற்ற கதை

போட்டு இழுத்துச் சொக்கச் செய்தது. சொக்கிக்குப் பதினாறு வயது ஆவதற்குள் அந்த ஊரில், ஏன், பக்கத்துக் கிராமங்களிலும் கூட, இருந்த வயசுப் பிள்ளைகள் அவளை மணக்கப் போட்டி போட்டார்கள். பரிசத் தொகையால் நடேச அம்பலத்தைக் கைக்குள் போட்டுக்கொள்ள முடியாது என்று அவர்களுக்குத்தெரியும் ! எனவே, மாடு பிடிப்பதில் சிலர் கவனம் செலுத்தினார்கள். எப்படியாவது அவரைத் தங்கள் வலைக்குள் விழச் செய்ய வேண்டுமென்று அவர்கள் பெரு முயற்சி செய்தார்கள்.

ஆனால் ஒரு வருஷத்துக்கு முன்னிருந்த நிலைமை நீடித்திருந்தால் கதையே வேறு மாதிரி முடிந்திருக்கும் ! மேலத்தெரு ரத்தின வங்கார் மகன் முத்துக்குமாரனுக்குச் சொக்கி வாழ்க்கைப்பட்டிருப்பாள் ! இந்த நேரத்தில் நடேச அம்பலமும் ஒரு பேரக் குழந்தையை எடுத்து வைத்துக் கொஞ்சிக் கொண்டிருப்பார் ! இரண்டு குடும்பங்களுக்கும் அவ்வளவு ஒட்டுதலும் பற்றும் இருந்தன ! ஆனால் ?...... மனிதர்கள் நினைப்பது போலவும், கனவு காண்பது போலவும் காரியங்கள் நடப்பதாக இருந்தால், பிறகு இவ்வுலகத்தில் சுவாமிக்கு என்ன வேலை ? யார்தான் அவரை வணங்குவார்கள்? அப்படிக் கடவுளுடைய திருவுள்ளம் என்று அறிந்தவர் நினைக்கும்படி, எத்தனைக் கெத்தனை அந்த இரு குடும்பங்களும் ஒட்டிக் கொண்டிருந்தனவோ, அத்தனைக் கத்தனை இரு குடும்பங்களும் சென்ற பன்னிரண்டு மாதங்களாகப் பிரிந்து நின்றன !



முதலில் வயலுக்கு நீர் பாய்ச்சும் முறைமையில் பூசல் புகையத் தொடங்கியது. அந்தச் சச்சரவில் நடேச அம்பலமும், ரத்தின வங்காரும் நேரிடையாகச் சம்பந்தப்படவில்லை. ஆனால் பக்கத்தில் இருந்த புண்ணியவான்கள் அவர்கள் இருவரையும் சம்பந்தப்படும்படி செய்து, இருவரும் எதிர் எதிராக முட்டிக் கொள்ளும்படி செய்து விட்டார்கள். வலுச் சண்டைக்கு என்ன காரணம் கிடைக்கும் என்று ஒவ்வொரு கட்சியும் காத்துக் கொண்டிருந்தது. நிலத்தில் மாடு நுழைந்ததென்று ஒரு நாள் சண்டை; இன்னொரு நாள் ஒரு கட்சியின் வாழைத் தோட்டத்தில் குலைகள் திருட்டுப் போயின ! அடுத்த நாள் மற்றொரு கட்சியில் களத்து மேட்டில் இருந்த நெல் மூட்டைகள் அப்புறப்படுத்தப்பட்டன. ஒவ்வொரு விவகாரமும் அடிதடியில் முடிந்து கோர்ட்டுக்குப் போயிற்று. நீதித் தலத்தில் ஒரு கட்சிக்குத் தண்டனை கிடைத்தால் மற்றொரு கட்சிக்குத் தாங்களாகவே 'நியாயம்' வழங்கினார்கள். இப்படியாகத் தொடர்ந்து நடந்து வந்த விவகாரங்களில் கடைசியில் நடேச அம்பலத்துக்கு இருநூறு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அது அவருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் தலை இறக்கமாக இருந்தது. அவர்கள் பழி வாங்கத் தக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அன்று தண்ணீர் எடுத்து வரச் சொக்கி குளத்துக்குப் போயிருந்தாள். விளக்கு வைக்கும் நேரம். இருள் வரவரக் கவிந்துகொண்டு வந்தது. குளத்தங்கரையில் அதிக ஜன நடமாட்டம் இல்லை. தூரத்தில் குளித்துக்கொண்டிருந்த இரண்டு மூன்று சிறுவர்களைத் தவிர வேறு எவருமே காணப்படவில்லை. சொக்கிக்கு அதனால் பயமா என்ன ? இல்லை. ஆகையால் நிதானமாகக் குளத்தில் இறங்கிக் குடத்தில் நீர் மொண்டு கொண்டிருந்தாள்.

'தடா'லென்று ஒரு சத்தம் கேட்டது. எவரோ தண்ணீரில் குதித்ததுபோலத் தோன்றியது. குதித்த அதிர்ச்சியினால் நீர்த்திவலைகள் சிதறி விழுந்தன.

ஒரு நிமிஷம் கழிந்தது ; தண்ணீரில் ஒரு தலை தெரிந்தது. அது வேறு யாருமில்லை ! முத்துக்குமரன்தான் ! 'இடி இடி' யென்று அவன் சிரித்தான், சொக்கியைப் பார்த்து.

சொக்கியின் திகிலும் அச்சமும் மறைந்து இளங்கோபம் தலைகாட்டியது.

''அடேயப்பா ! கோபம் போலிருக்கு !'' என்றான் மேலுக்குச் சிரித்துக்கொண்டே.

''ஆமாம், நீ செய்த காரியத்துக்குக் கோபம் வராமல் சிரிப்புத்தான் வரும் !'' என்று தன் முகத்தைத் தோள்பட்டையில் இடித்துக்கொண்டு தன் பெண்மையையும் ஆற்றாமையையும் காட்டிக் கொண்டே குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு அவள் புறப்பட்டாள்.

''சிரிக்கிறவங்களும் இருக்காங்க, சொக்கி! உனக்கு இஷ்டமில்லை, அதனால்தான் கோபம் பிரமாதமாக வருது !''

பதில் பேசாமல் அடி எடுத்து வைத்து நடக்க ஆரம்பித்தாள்.

''என்ன பேசவே மாட்டாயா, சொக்கி?''

ஒரு தடவை அவள் ஏறிட்டுப் பார்த்தாள்.

''உம்...பேச என்ன இருக்கு ?'' பேச்சுடன் ஒரு பெருமூச்சும் வெடித்தது.

''ஏன்? பேசக் கூடாதா, சொக்கி ? உங்க ஐயா கட்சிக்கும் எங்க ஐயா கட்சிக்கும் சண்டை வழக்குன்னு உனக்கும் எனக்கும் என்ன வந்தது ? நம்ப பழைய சிநேகம் அதனாலே போயிடுமா ?'' கரை அருகே வந்தான்,

''இனிமேல் அதெல்லாம் போகாமல் இருக்கப் போகிறதாக்கும்!'' அதைச் சொல்லும் பொழுது அவளுக்கு மனம் துடித்தது. ஈரம் சொட்டச் சொட்டப் பளபளக்கும் அவன் உடல் அழகைப் பார்த்துக் கொண்டே மயங்கினாள். அவனைத் தான் கணவனாக அடையும் பாக்கியம் இனி தனக்கு வாய்க்க இடமில்லையே என்ற ஏமாற்றம் அவள் முகத்தில் பரவி நின்றது.

''சொக்கி! நீதான் பேசறயா? பெரியவங்க சண்டையாலே நம்ம கல்யாணம் இனிமேல் நடக்காதா?''

''எப்படி நடக்கும்?''

''ஏன், யாராவது உனக்குப் பரிசம் கிரிசம் போடுவதற்கு வருகிறாங்களா?'' அவனுக்கு உடல் துடித்தது.

''இது வரையிலும் எவரும் வரவில்லே. வராமலா இருக்கப் போகிறாங்க? தெற்குத் தெரு துரைசாமிகூட எங்க அப்பாவிடம் வந்து பேசிக் கொண்டிருந்தாராம்......''

முத்துக்குமாரனுக்கு உடம்பில் சூடேற ஆரம்பித்து விட்டது.

''எவன் பரிசம் போடுகிறானே, பார்க்கலாம்! அப்படியே மிஞ்சி எந்தப் பயலாவது துணிந்து வந்தால் நான் 'ராவுக்கு ராவே' உனக்குத் திருட்டுத் தாலி கட்டி விடுவேன்! அப்புறம் என்ன செய்ய இருக்கிறது?'' பேச்சில் கோபம்; வாயில் சிரிப்பு கரை புரண்டது!

''பேச்சைப் பாரு பேச்சை! கேட்கச் சிங்காரமாகத்தான் இருக்கு!''

'''ஏன், இந்த முத்துக் குமரு செய்ய மாட்டான் என்றுதானே உன் நினைப்பு?''

''எதற்கு அந்த வீண் விவகாரம் எல்லாம்? ஊரில் ரத்த ஆறு ஓடி ரொம்ப நான் ஆவுதே என்று பார்க்கிறாயாக்கும்!'' என்று சொல்லி விட்டு மேலும் இரண்டு அடி எடுத்து வைத்து நடக்க ஆரம்பித்தான்.

''சொக்கி! அப்ப......உன்னே மறந்து விடணும்னு சொல்லு!'' என்று அவளும் அவனைத் தொடர்ந்து இரண்டு அடி எடுத்து வைத்தாள்.

அதே சமயத்தில் யாரோ இருவர், இவர்கள் பேசுவதை நின்று பார்த்து விட்டு ஊருக்குள் வேகமாகப் போவதைச் சொக்கி பார்த்தாள். அவள் உடம்பு நடுங்கியது.

''யாரோ நாம் பேசுவதைப் பார்த்து விட்டுப் போகிறார்கள். மேலே என்ன விளம்புமோ? நேரமாவுது; நான் போகிறேன்!'' என்று வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

''சொக்கி! என்னே மறந்து போய் விடாதே!'' என்று கரையில் இருந்தே முத்துக்குமரன் பலமாகக் கத்தினான்.

* *

சொக்கி தன் வீட்டை நெருங்கும் பொழுது, குளத்தங்கரையில் பார்த்த இருவரும் தன் வீட்டை விட்டு இறங்கிப் போவதைக் கண்டாள். அவளுக்குத்



'திக் திக்' கென்று நெஞ்சு அடித்துக் கொண்டது. நடுநடுங்கிக் கொண்டே அவள் உள்ளே நுழைந்தாள்.

கூடத்தில் நடேச அம்பலம் மிக்க கோபத்துடன் நின்று கொண்டிருந்தார். பரபரப்புடன் வந்த தன் மகளை ஏற இறங்கப் பார்த்தார். தம்மைத் தாண்டிக்கொண்டே அவள் சமையல் கட்டுக்குள் நுழைவதைப் பார்த்துக் கொண்டே இருந்தார்.

''சொக்கி! இந்தா, இங்கே வா...... !''

சொக்கி பேசாமல் அவர் முன்னால் போய் நின்றாள். அவளால் தன் களவை மறைக்க முடியவில்லை!

''எங்கே போயிருந்தாய்?''

''குளத்துக்குப் போயிருந்தேன், அப்பா!''

''ஏன் இத்தனை நேரம்?''

''......?'' மௌனமாகத் தரையைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

''அங்கே யாருடன் நீ பேசிக் கொண்டிருந்தாய்?''

நடுங்கும் குரலில் ''நான் முதலில் பேசவேயில்லை. 'அது' தான் பேசித்து!'' என்றாள்.

''யார் அது?''

ஒரு நிமிஷம் நிதானித்து விட்டு, ''மேலத் தெரு......'' தொண்டையில் இருந்து மேற்கொண்டு வார்த்தை வர மறுத்தது.

''யார் முத்துக்குமரனா?''

''ஆமாம்!''

''ஓஹோ!......சண்டை சச்சரவு, மான அவமானம் எல்லாம் பெத்தவங்களுக்குத்தான்! உனக்கு அது கிடையாது இல்லே?''

''நான் ஒண்ணும் பேசவில்லே, அப்பா!''

''அவன்தான் என்ன பேசினான்?''

முதலில் சொக்கி தயங்கினாள்; மென்று விழுங்கினாள்; ஆனால் நடேச அம்பலம் வாயைக் கிண்டிக் கிண்டிக் கேட்டுச் சிறிது சிறிதாக எல்லா விஷயங்களையும் கக்கும்படி செய்து விட்டார்.

''திருட்டுத் தாலி கட்டுவேன் என்று சொன்னான்?'' என்று பொங்கும் உணர்ச்சியுடன் திரும்பத் திரும்பக் கேட்டார். அவரது மீசை துடித்தது.

''உம்......! ஆனால் நான் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை, அப்பா!''

நடேச அம்பலம் விருட்டென்று வெளியே போனார். இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு அவர் திரும்பி வந்தார்.

வந்ததும் வராததுமாக, ''சொக்கி! சொக்கி! இங்கே வா!'' என்று கூப்பிட்டார்.

சொக்கி மருள மருள விழித்துக் கொண்டு அவர் எதிரில் வந்து நின்றாள். அவருடைய மனைவியும் ஓடி வந்தாள்.

அவருடைய கையில் தாலி ஒன்று இருந்தது!

''இதை உன் கழுத்தில் கட்டிக் கொள்!'' என்று கூறினார்.

''எதற்கு அப்பா?''. என்றாள் மிகுந்த கலவரத்துடன்.

''கட்டிக்கொள் என்றால் கட்டிக் கொள். காரணம் ஒன்றும் கேட்காதே!'' நடேச அம்பலம் கத்தினார்.

அவருடைய மனைவி முந்திக் கொண்டு, ''என்னங்க இது! இது யாரு சொன்ன யோசனை? நாளைக்கு நம்ம குழந்தை கதி என்ன ஆவது?......கொஞ்சம் நிதானியுங்க'' என்றாள், சொக்கியை அணைத்துக் கொண்டு.

நடேச அம்பலம் துள்ளிக் குதித்தார். ''அதெல்லாம் எனக்குத் தெரியும்! நான் சொல்லுகிறபடி செய். எதிர்த்துப் பேசினால் வீட்டிலே கொலை விழும்......! நீ போய் அவளுக்கு முதல்லே அந்தத் தாலியைக் கட்டி விட்டு வா!'' என்றார்.

நடேச அம்பலத்தின் மனைவிக்கு எழுத்து வாசனை கிடையாதென்றாலும் தன் கணவனுடைய சதித் திட்டம் அவளுடைய மந்த புத்திக்கும் எட்டாமல் இல்லை! அந்தச் சமயத்தில் மூர்க்கமும் வெறியும் கொண்ட தன் கணவனுடன் மேலும் பேசுவதால் ஒரு பயனும் இல்லை என்று அறிந்துகொண்டு கடவுள் விட்டவழி என்று தீர்மானித்துக்கொண்டாள்.

சமையல் கட்டில் கண்ணீர் சோர விட்டுக் கொண்டு, விம்மிக் கலங்கும் தன் பெண்ணைப் பார்த்ததும் பெற்ற வயிறு கலங்கியது. அவளை இறுகக் கட்டி அணைத்துக்கொண்டு, ''நீ பயப்படாதே, கண்ணு! மாரியாத்தா நம்மை ஒரு நாளும் கைவிடமாட்டாள்!'' என்று அவளைக் குத்து விளக்கின் முன் நிறுத்தி வைத்து, கழுத்தில் அந்த மஞ்சள் கயிற்றைக் கட்டிவிட்டாள்.

அதற்கு அடுத்த ஒரு மணி நேரத்தில் ஊரில் பெரிய அடிதடி சண்டை நடந்தது. இரண்டு



பக்கத்திலும் தாலேந்து பேருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது.

நடேச அம்பலம் கையோடு மால்குடி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் முத்துக் குமரன் குளத்துக்கு வந்த பெண்ணைப் பல வந்தமாக இழுத்துக்கொண்டு போய்த் திருட் டுத் தாலி கட்டிவிட்டான் என்றும், மகனை அழைத்து வரச் சென்ற ஆட்களை அடித்து விட்டான் என்றும் பிராது கொடுத்து விட்டு வந்து சேர்ந்தார்

ஆறேழு மாதங்களாக அந்தக் கேசு தள்ளிப் போடப்பட்டு வந்தது. கடைசியில் சென்ற ஒரு வாரமாகத் தொடர்ந்து விசாரணை நடந் தது. முத்துக்குமரன் தனக்குச் சாட்சியாகச் சொக்கியையே விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டது ஊரையே பரபரப்புக்கு உள்ளாக்கியது. நீதித் தலத்தில், தன் முன் சொக்கி பொய் கூற மாட்டாள் என்று அவன் நிச்சயமாக நம்பினான்.

சொக்கியும் நீதித்தலத்தில் பொய் கூறப் பிடிவாதமாக மறுத்தாள். தன்மீது அன்பு வைத்தவனுக்குத் துரோகம் செய்வது அவள் உள்ளத்தை அறுத்தது. ஆனால் நடேச அம் பலமும் அவருடைய வக்கீலும் அவள் அவ் வாறு சாட்சி கூறிவிட்டால், குடும்பமே நாச மாகிவிடும் என்று பயமுறுத்தினார்கள். தாம் சொன்னபடி கோர்ட்டில் சொக்கி கூறிவிட் டால், தம் வீட்டுப் பக்கமே அடி எடுத்து வைக்க முடியாது என்று கூறினார் பெற்ற தகப்பனார்! பெற்ற தாயார் கண்ணீர் வடித் துக்கொண்டு வந்து நின்றாள்! இவ்வளவுக் கிடையில் அந்தப் பேதை என்ன செய்வாள்? பிஞ்சு நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டு, துணிந்து, தன் தகப்பன் சொல்லிக் கொடுத்த வண்ணம், தனக்கு முத்துக்குமரனே இருட்டுத் தாலியைப் பலவந்தமாகக் கட்டிவிட்டான் என்று சொன்னாள்! கூண்டில் நிற்கும் முத்துக் குமரன் பக்கமே திரும்பவில்லை!

பலவந்தமாகத் திருட்டுத் தாலி கட்டின குற்றத்துக்காகவும் அதைத் தடுக்க வந்தவர் களைப் பயங்கரமான ஆயுதங்களால் தாக்கிய குற்றத்துக்காகவும் கோர்ட்டார் முத்துக் குமரனுக்கு ஒரு வருஷம் சிறைத் தண்டனை விதித்து விட்டார்கள்.

வழக்கு முடிந்து ஒரு மாதம் வரையிலும் அம்பலத்துக்குத் தலை கழுத்தி லே நிற்கவில்லை. தாம் உலகையே வென்று விட்டது போல் அவர் எண்ணிக் கொண்டார்.

திடீரென்று ஒரு நாள் அவர் மனைவி அவ ரிடம் வந்து, "கேட்டீர்களா, சொக்கி சொல் வதை?" என்றாள்.

"என்ன?"

"இனிமேல் அவள் அந்தத் தாலிக் கயிற் றைக் கழற்ற மாட்டாளாம்."

"கழற்ற வேண்டாமே! அப்படியே இருக்கட்டும்!" என்றார் சிரித்துக் கொண்டே.

"என்ன, நீங்களுட இப்படி வேடிக்கை யாய்ப் பேசுறீங்க! அவளுக்குக் கல்யாணம், கார்த்திகை ஒன்றும் செய்ய வேண்டாமா?" தாயின் உள்ளம் வேதனை அடைந்தது.

"அதை எல்லாம் ஏற்பாடு செய்யாமல் ஒரு காரியத்தில் இறங்குவேனா? தெற்குத் தெரு துரைசாமிதான் பரிசம் போடக் காத் துக் கொண்டிருக்கிறானே! தை பிறக்கட்டும் என்றல்லவா நான் சும்மா இருக்கிறேன்!" என்று நடேச அம்பலம் கூறியதும் அவர் மனைவி மேலே ஒன்றும் பேசவில்லை.

கல்யாணத்துக்கு இன்னும் நாலு நாட் களே முழுக்க இருந்தன. கல்யாண வேலைகள் மும்முரமாக நடந்து வந்தன

தாவுனி மூட்டையோடு வந்த நடேச அம்ப லத்திடம் அவர் மனைவி, "அவள் இன்னும் பிடிவாதமாகவே இருக்கிறாள்! எனக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை!" என்றாள்.

நடேசஅம்பலம் சொக்கியைக் கூப்பிட்டார்:

"ஏம்மா, அந்தத் தாலியை இன்னும் கழற்றவில்லையாமே!"

"ஆமாம், அப்பா! நான் அதை இனிமேல் கழற்ற மாட்டேன்!"

"ஏனம்மா?"

"எனக்குக் கல்யாணமாகி விட்டது. மேலத் தெருவுக்காரர் எனக்குத் தாலி கட்டி விட்டார்." உணர்ச்சியும் ரோஷமும் கரை புரண்டோடக் கூறினாள்.

நடேச அம்பலத்துக்கு முகத்தில் ஈயாட வில்லை. அவளிடம் தம் கோபத்தையோ அதிகாரத்தையோ அந்த இக்கட்டான நிலை யில் காட்ட முடியாது என்று அறிந்தார்.





''உங்க பிரசங்கத்துக்குக் கூட்டம் இருந்ததா?''

''ஓ, இருந்தது! நான் நினைத்ததற்கு மேல் இரண்டு மடங்கு அதிகமாக வந்தது.''

''அப்படி நீங்கள் என்ன நினைத்தீர்கள்!''

''நான் கூட்டத்துக்கு இரண்டு பேர் வருவார்கள் என்று நினைச்சேன், நான்கு பேர் வந்திருந்தார்கள்.''

''சொக்கி! நீ என்ன பேசுகிறாய்? அவனுக்குத் தண்டனை கிடைக்க வேண்டுமென்றல்லவா அப்படிச் செய்தேன்!''

''எப்படி இருந்தால் என்ன? அவர் எனக்குத் திருட்டுத் தாலி கட்டியதாகக் கோர்ட்டில் நிரூபித்தாகி விட்டது. இனி அது பொய்யாகுமா?'' அவளுடைய குரலில் அழுத்தமும் திருத்தமும் தொனித்தன.

''அதனாலே ...!'' பெற்ற தகப்பனுக்கு அவமானம் குமுறிக் கொண்டு வந்தது.

''என் கலியாணப்பேச்சை இனிமேல் நீங்கள் எடுக்க வேண்டாம்.''

''ஏம்மா! அதை முத்துக்குமரு ஒப்புக் கொள்வானா? நீதான் அவனுடன் போய் வாழ முடியுமா? இதையெல்லாம் பற்றி நீ யோசித்துப் பார்த்தாயா?''

''அப்பா! நான் யோசித்துப் பார்க்க என்ன இருக்கிறது? நீங்கள் அல்லவா இதை அன்றே யோசித்திருக்க வேண்டும்? என் எதிர்கால வாழ்வைப் பலி கொடுத்தாலும் நீங்கள் அவருக்குத் தண்டனை வாங்கி வைக்க விரும்பினீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறி விட்டது! இனி உங்களுக்கு என்னைப்பற்றி எதற்குக் கவலை?'' என்று அவள் விம்மி விம்மி அழுது கொண்டே கூறினாள்.

நடேச அம்பலத்துக்கு ஈட்டியால் இதயத்தைப் பிளப்பது போல இருந்தது. பைத்தியம் பிடித்தவர் போல் அவர் தலைமயிரைப் பிய்த்துக் கொண்டார்.

''சொக்கி! அழாதே! நான் செய்தது தப்புத்தான். ஆத்திரத்தாலும் பழி வாங்க வேண்டும் என்ற உணர்ச்சியாலும் அப்படிச் செய்து விட்டேன். இந்தப் புத்தி கெட்ட தகப்பனை மன்னித்து விடு!'' என்று கதறினார்.

''அப்பா! நீங்கள் அழாதீர்கள். நடந்தது நடந்து விட்டது. இனி இன்னொருவர் எனக்குத் தாலி கட்ட ஒப்பமாட்டேன். இது சத்தியம்'' என்று கூறி விட்டு அவள் வேகமாக உள்ளே போய் விட்டாள்.

சொக்கியின் கலியாணம் நின்று விட்டது. ஆனால் கழுத்தில் மட்டும் அந்த மஞ்சள் கயிறு இருந்து கொண்டே இருந்தது. அவளைக் காணும் பொழுதெல்லாம் பெற்றோர் நெஞ்சு நெருப்பாக எரிந்தது. வேதனையால் நடேச அம்பலம் துரும்பாக இளைத்துப் போனார்.

* * *

மாதங்கள் மெதுவாக ஊர்ந்து சென்றன. முத்துக்குமரன் சிறையிலிருந்து விடுதலை அடைய இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. ஊரெங்கும் அதே பேச்சாக இருந்தது. அவன் விடுதலை அடைந்து வந்ததும் இன்னும் என்ன என்ன விபரீதம் நடக்குமோ என்று எல்லாரும் அஞ்சினார்கள்.

அவன் விடுதலை அடையும் நாளும் வந்தது. அன்று அதிகாலையில் எழுந்து மால் குடியை நோக்கி நடந்து சென்றாள் சொக்கி. அங்கு பிடித்த நடை சிறைச்சாலை வாசலில் போய்த்தான் நின்றது.

காலை பத்து மணிக்கு முத்துக்குமரன் வெளியே வந்தான். அவனைக் கண்டதும், சொக்கி ஓடிச் சென்று அவன் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தாள்.

முத்துக்குமரன் காலை உதறிக் கொண்டு, ''சீ, எட்டப் போ!'' என்று மிகுந்த கோபத்துடன் கூறினான்.

''அத்தான்! இன்னும் நூறு மடங்கு திட்டு. ஆனால் என்னை மன்னித்து விடு. உனக்குத் துரோகமாக...''

''நான் யார் உன்னை மன்னிக்க? கடவுள்தான் உன்னை மன்னிக்க வேண்டும்!'' என்று ஆத்திரத்துடன் கத்தினான் முத்துக்குமரன்.

''அத்தான்! நீதான் என் கடவுள். உன் வாயால் என்னை மன்னித்தேன் என்று ஒரு தடவை சொல்லு. அது போதும்!'' காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

''இந்தா! உன்னை யாராவது கண்டால் என்ன நினைப்பார்கள்?''

''அப்படி நினைக்க இனி யார் இருக்கிறார்கள், அத்தான்!''

அவள் கழுத்தில் பொலிந்த தாலி அவன் கண்ணில் பட்டதும் நெருப்பைத் தொட்டது போல இருந்தது.

''அந்தத் தாலியைக் கட்டினவன்...?''

''அதை நீதானே கட்டினாய்? கோர்ட்டாரே கூறிவிட்டார்களே!''

முத்துக் குமரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''நீ என்ன சொல்கிறாய், சொக்கி?''

''ஆமாம்! நீதான் எனக்குத் தாலிகட்டின புருஷன்! இனி உன்னுடன்தான் வாழ்வேன். வா, வீட்டுக்குப் போகலாம்!''

முத்துக் குமரன் பேசாமல் அவளைத் தொடர்ந்தான்.

''என் மேல் இன்னும் கோபந்தானா?'' என்று கேட்டாள் அவள் கெஞ்சும் குரலில்.

''ஒரு சந்தேகம்! நான்தான் உனக்குத் தாலி கட்டினேன் என்று ஏன் புளுகினே?''

சொக்கி சிரித்துக் கொண்டே, ''ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தைச் செய் என்பார்களே! நம்ம கல்யாணத்துக்கு அந்த ஒரு பொய்கூடச் சொல்லக் கூடாதா?'' என்று அவன் கையைக் கிள்ளினாள்.

முத்துக்குமரன், தான் ஒரு வருஷம் சிறையில் இருந்தது கனவா நனவா என்று அறிய முடியாமல் திகைத்து நின்றான்.

யில் எத்தனையோ ருசிகரமான சம்பவங்கள் நடைபெறப் போகின்றன. பல தரப்பட்ட நோயாளிகளுடன் நீ பழக வேண்டும். என்னுடைய அனுபவத்திலிருந்து உனக்கு ஒரு சம்பவத்தைச் சொல்ல வேண்டும் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். இன்றைக்குத் தான் அதைச் சொல்ல வேண்டும். உனக்கு ஒன்றும் அவசரமில்லையே?''

''கரும்பு தின்னக் கூலியா, சார்! சொல்லுங்கள்'' என்று சொல்லி விட்டு, கதை கேட்கப் போகும் குழந்தையின் பாவத்தோடு என்னைப் பார்த்தான் சுந்தரேசன். நானும் அந்தச் சம்பவத்தைக் கதையாகவே சொல்லத் துவங்கினேன்.



கனிந்த நெஞ்சம்

ரா. பழனியப்பன்

அவர்கள் குடும்ப டாக்டர் நான்.


இந்தப் பதினைந்து ஆண்டுகளில், அந்தக் குடும்பத்தின் வைத்தியனாக மட்டுமல்லாமல், நெருங்கிய நண்பனாகவும் நான் பழகி விட்டேன். அதிலும் கடைக்குட்டி சுந்தரேசனுக்கு என்னிடம் ஒரு தனி ஒட்டுதல். நான் முதன் முதலாக, சேலத்தில் டாக்டராகத் தொழில் துவங்கிய நாளில் சுந்தரேசன் பள்ளிச் சிறுவன். அவனுக்கு நோய் இருந்தாலும் இல்லா விட்டாலும் அடிக்கடி என் 'கிளினிக்'குக்கு வரத் தவற மாட்டான். நான் நோயாளிகளைக் கவனித்து, மருந்துகள் கொடுப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது அந்த இளம் நெஞ்சத்தில், தானும் ஒரு டாக்டர் ஆக வேண்டும் என்ற எண்ணம் படிந்து துளிர்த்து விட்டது. அப்போதே என்னிடம் சுந்தரேசன் சொல்லுவான்: ''சார்! பார்த்துக்கொண்டே இருங்கள், நானும் உங்களைப் போல் ஒரு டாக்டராகிறேனா இல்லையா என்று.''

அப்படிச் சொல்லி, பதினைந்து வருடங்களில், சுந்தரேசன் அவன் பெயருக்குப் பின்னால் எம். பி பி. எஸ். என்ற எழுத்துக்களைச் சேர்த்துக் கொண்டுதான் விட்டான்! நாளை அவன் வைத்தியசாலைத் திறப்பு விழா. மருத்துவத் துறையில் அந்த நாளிலிருந்து அவனுக்கு இருந்த உற்சாகத்தைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது சுந்தரேசனே என்னைத் தேடி வந்து விட்டான்.

''சுந்தரம்! நாளை நீ ஒரு புது மனிதனாகப் போகிறாய். உன்னுடைய புதிய வாழ்க்கை

சோலையூர் சேலத்துக்குப் பக்கத்திலுள்ள ஒரு கிராமம். அதைச் சார்ந்த நிலபுலன்களில் முக்கால்வாசி, பெரியசாமிக் கவுண்டரின் சொத்தாக இருந்தது. மீதி இருக்கும் கால் பகுதியையும் ஏப்பமிட்டு, பூரணமாகப் பொலிவு பெறக் கவுண்டரின் நெஞ்சத்தில் திட்டங்கள் கோடுகளிட்டன. கருப்பண்ணனும், அவன் தம்பி செங்கோடனும் அவர்கள் தகப்பனார் விட்டுச் சென்ற இரண்டு ஏக்கர் நிலத்தைச் சொந்தமாக உழுது கொண்டு கவுண்டரின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டார்கள். போதாத குறைக்கு, அந்த இரண்டு ஏக்கர் நிலமும், கவுண்டரின் நிலத்தை அடுத்து இருந்து கொண்டு அவருடைய கண்களை உறுத்திக் கொண்டிருந்தன. அந்த உறுத்தலை நிறுத்தச் செய்த முயற்சிகளெல்லாம் பயனற்றுப் போகவே, அவரது கண்கள் சிவந்து விட்டன.

அதன் பலன், தோட்டத்துக் குடிசையில், இரவில் படுத்திருந்த கருப்பண்ணனின் தலை வெட்டப்பட்டு, குருதி வெள்ளத்தில் கிடந்தது. 'பெரியசாமிக் கவுண்டர் செய்த குற்றத்துக்குப் போலீசாரிடம் தண்டனை வாங்கித் தருவது' என்பது நடவாத காரியம். தோட்டத்துக் குடிசையில் கருப்பண்ணன் கொலை செய்யப்பட்டுக் குருதி வெள்ளம் ஓடிய இடத்தில், இரத்தக்கறை ஏதும் இல்லாமல், தன் கண்ணீரால் சுத்தப்படுத்தினான் செங்கோடன். ஆனால் அவன் உள்ளத்தில், இரத்தமெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய கறையை ஏற்படுத்தியது. அந்தக் கறை,



பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்று அவன் நெஞ்சத்தைக் கிளறிக்கொண்டே இருந்தது!

கருப்பண்ணனைக் கொலை செய்த கவுண்டரின் ஆட்கள் யாரெனத் தெரிந்து கொள்ளுவதற்கு, செங்கோடனுக்கு நீண்ட நாட்களாக வில்லை. இருபது வயது கூட நிரம்பாத செங்கோடன் என்ன செய்வான் என்ற தைரியத்தில் தானே என்னவோ, அந்த இரண்டு ஆட்களும், தாங்களாகவே, தங்கள் பிரதாபத்தைச் சொல்லிக் கொண்டிருந்தனர். செங்கோடனின் காதுகளில் இந்தச் செய்தி விழுந்ததும், அவனது ஆத்திரம் அதிகரித்தது; வீட்டிலிருந்த பிச்சுவாவின் கூர்மையும் அதிகமாகிக் கொண்டிருந்தது!

அடுத்த நாள், அந்தப் பண்ணையாட்கள் இருவரையும், கருப்பண்ணன் இருந்த உலகத்துக்கே அனுப்பிவைத்தான் செங்கோடன். இந்த மண்ணிலேயே, இன்னும் சில நாட்கள் இருந்து, இந்தக் கொலைகளுக்கெல்லாம் கர்த்தாவாகிய கவுண்டரையும் தீர்த்துவிட வேண்டியதை, அவன் கடமையாக எண்ணியதால் தலைமறைவாகத் திரிந்தான்.

சில மாதங்களுக்குப் பிறகு, செங்கோடன் வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. தலைமறைவாக இருந்த அவன், ஒரு சாண் வயிற்றுப் பசித் தீயை அடுக்க வேண்டிய, அவசியம் இருந்ததால் வழிப்பறிக் கொள்ளைக் காரனாக மாறினான். ஆனால் அதிலும் ஒரு புது முறை: மடி கனத்த, பணம் படைத்த பணக்காரர்களிடம்தான் அவன் கை வரிசையைக் காட்டுவான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு நாள் மாலை, சோலையூர் பெரியசாமிக் கவுண்டரின் ஆள் ஒருவன் என்னிடம் அவசரமாக வந்து, கவுண்டரின் பெண் பிரசவ வேதனையில் இரண்டு நாட்களாகத் துன்பப்படுவதாகவும், என்னை உடனே வரும்படியும் அழைத்தான். நானும் உடனடியாக என் காரில் புறப்பட்டேன். அந்த ஆள், தான் கவுண்டரின் உறவினர் ஒருவரைப் பார்த்துப் போக வேண்டியிருப்பதால், என்னைமட்டும் முதலில் போகச் சொன்னான். கார் புறப்படுவதற்கும் மழை பிடித்துக் கொள்வதற்கும் சரியாக இருந்தது. மழையோடு காற்றும் சேர்ந்து கொள்ளவே, ஒரே பேய்ப் பிரளயமாக இருந்தது. நான் போக வேண்டிய காரியமோ அவசரமானது; காரை வேகமாக ஓட்ட முடியவில்லை. எப்படியோ சமாளித்துக் கொண்டு, சோலையூருக்கு, இரண்டு மைல் தூரத்தில் வந்து விட்டேன். அங்கு ஓடிக் கொண்டிருந்த ஒரு சிறு ஓடையில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. புதை மணலில் கார்ச் சக்கரங்கள் சிக்கிக் கொண்டன. என்ன செய்வது என்று நான் திகைத்துக் கொண்டிருக்கும் பொழுது, நான்கு பேர்கள் என் காரைச் சுற்றி வளைத்து நின்றார்கள். இந்தக் கொட்டும் மழையில், காரைச் சுற்றி நின்று கொண்டு என்ன பார்க்கிறார்களோ என்று எனக்குப் புரியவில்லை. அவர்களில் ஒருவன் கடுமையான குரலில் பேச ஆரம்பித்தான்.

''யாரய்யா, நீ? உம்மிடம் இருக்கும் பணத்தை அப்படியே எடுத்து வையும்.''

''ஐயா! நான் ஒரு டாக்டர். சோலையூருக்கு ஒரு பிரசவ கேசுக்காக அவசரமாகப் போகிறேன். நீங்கள் கேட்டபடி என்னிடம் இருக்கிற பணத்தை உங்களுக்கே கொடுத்து விடுகிறேன். ஆனால் நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். இந்தக் காரைக் கொஞ்சம் தள்ளி விட்டீர்களானால் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன்.''

''ஓ. நீங்கள் டாக்டரா? ம்... சோலையூரில் நீங்கள் யார் வீட்டில் பிரசவம் பார்க்கப் போகிறீர்கள்?''

''பெரியசாமிக் கவுண்டரின் பெண்ணுக்கு.. பாவம், அந்தப் பெண் இரண்டு நாட்களாக வேதனையில் தவிக்கிறாளாம்.''

இந்தப் பதிலைக் கேட்டதும் ஏனோ அவன் முகத்தில் கடுமை அதிகரித்தது. ஆனால் அது ஒரு கணமே. பிறகு அவன் முகத்தில் எல்லையில்லாத ஒரு சாந்தம் நிலவியது. தன் கூட்டாளிகளிடம் என்னவோ சொன்னான்.


நான்கு மருந்துகள் சேர்ந்துள்ள

'அனாஸின்'

தலைவலி, ஜலதோஷம், ஜுரம் மற்றும் தசைவலிகளுக்கு

சிறந்தது

ஞாபகத்தில் வையுங்கள்! ஒரே மருந்து கலந்துள்ள எந்தவலி நிவாரணமருந்தும், டாக்டரின் குறிப்பிற்கு ஒப்பான, விஞ்ஞான முறையில் தயாரித்துள்ள நான்கு மருந்துகளின் கலவையான 'அனாஸினைப்' போல் துரிதமாயும் .. அபாயமின்றியும் நிச்சயமாயும் குணமளிக்க இயலாது. லட்சோபலட்சம் ஜனங்கள் 'அனாஸின்' தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைவலிக மருந்து. துரிதமாயும் பூரண நிவாரணமளிப்பதிலும் சிறந்தது என்பதை அறிவார்கள். எப்பொழுதும் வீட்டில் 'அனாஸின்' வைத்திருங்கள்.



GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD. REGISTERED USER.

எல்லாருமாகச் சேர்ந்து, காரைத் தள்ளினார்கள். கார் புறப்படத் தயாரானதும் என்னிடமிருந்த பணத்தை எடுத்து அவனிடம் கொடுக்கப்போனேன். ஆனால் அவன் அதை வாங்கிக் கொள்ளவில்லை.

''ஐயா! பிரசவ கேசுக்காகப் போய்க் கொண்டிருக்கும் ஒரு டாக்டரிடமிருந்து பணம் பறித்துக் கொள்ள வேண்டிய அவ்வளவு கொடிய நிலை எனக்கு ஏற்பட்டுவிட வில்லை. என்னைப் பற்றி ஒருகால் நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். என் பெயர் செங்கோடன். என்றாவது ஒரு நாள் நானாகவோ, அல்லது போலீஸாரால் கொண்டுவரப் பட்டோ, உங்களிடம் வந்தால் என்னை உங்கள் சகோதரன் போல் நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனா யிருப்பேன்.''

இப்படிச் சொல்லி விட்டு அவன் தன் கூட்டாளிகளுடன் சென்று மறைந்தான். பிறகு நான் சோலையூர் சென்று கவுண்டரின் கைகளில் அவருடைய பேரனைக் கொடுத்து விட்டுத் திரும்பினேன்.

இந்தச் சம்பவம் நடந்த சில நாட்களில் நான் அரசாங்க மருத்துவ நிலையத்திலேயே சேர்ந்து பணியாற்றத் தொடங்கினேன். ஒரு மாதத்துக்குப் பிறகு செங்கோடன் முன்பு என்னிடம் சொல்லியபடியே போலீஸாரால் கொண்டு வரப்பட்டான். முழங்காலுக்கு மேல் துப்பாக்கிக் குண்டு பாய்ந்திருந்தது. அவனுக்கு உடனடியாகச் சிகிச்சை செய்தேன். குண்டுக் காயத்துடன் கடுமையான காய்ச்சலும் இருந்ததால் அவனை வைத்திய சாலையில் சேர்த்துக் கொண்டேன். போலீஸ் காவல் பலமாக இருந்தது. செங்கோடனைப் பார்க்கக் கூட்டம் கூடி நின்றது.



அடுத்த நாள் நான் மருத்துவ நிலையம் சென்றதும் முதல் வேலையாகச் செங்கோடனைப் பார்க்கப் போனேன். காய்ச்சல் குறைந்திருந்தது. அவன் அருகில் அமர்ந்து பேச்சுக் கொடுத்தேன். என்னிடம் மிகவும் நன்றியறிதலுடன் பேசினான். எப்படிப் போலீஸாரிடம் அகப்பட்டான் என்று விசாரித்ததில் ஒரு துரோகச் செயல் வெளிப்பட்டது. அவன் நம்பிப் பழகிய பெண் ஒருத்தி, அவனைப் பணத்துக்காகக் காட்டிக் கொடுத்து விட்டாளாம். அவள் வீட்டில் தங்கியிருந்தபோது போலீஸார் சூழ்ந்து கொண்டதாகவும் தப்பி ஓட முயன்றபோது காலில் சுட்டுவிட்டார்கள் என்றும் சொன்னான்.

அன்றிரவு நான் வீட்டிலிருக்கும் பொழுது பெரியசாமிக் கவுண்டரின் ஆள் ஒருவன் வந்து கவுண்டர் கொடுத்ததாக ஒரு கவரைக் கொடுத்து விட்டு, கவுண்டரே இன்னும் சில நிமிடங்களில் வருவாரென்று சொல்லிப் போனான். கவரைக் கிழித்துப் பார்த்தேன். அதில் ஆயிரம் ரூபாய்க்குக் கரன்சி நோட்டுகள் இருந்தன. எனக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. அவர் பெண் பிரசவத்தை நடத்தியதற்கு முன்பே பணம் கொடுத்து விட்டார். அப்படியிருக்க இப்பொழுது இவ்வளவு பெரிய தொகை எதற்கு? யோசித்ததில் ஒருவாறு விஷயம் புரிந்தது. அப்போது கவுண்டரே வந்தார். வந்தவரின் நோக்கம் கொடியதாயினும், உட்காரச் சொல்லி அவருக்கு ஆசனம் காட்டினேன். அவர் அவசரமாகவே பேசத் துவங்கினார்.

''நம்ம ஆள் கொடுத்த கவர் கிடைத்ததா, டாக்டர்?'' என்றார் கவுண்டர்.

''கிடைத்தது. அதில்...''

''ஆயிரம் ரூபாய்தான் இருக்கிறது. காரியம் முடியட்டும். இன்னும் ஒரு ஆயிரம் தருகிறேன். எப்படியாவது அவனைத் தீர்த்துக் கட்டி விடுங்கள்.''

ஒன்றும் புரியாதது போலவே பேசினேன்:

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? டாக்டரெல்லாம் காப்பாற்றத்தானே இருக்கிறார்கள்? அதற்குத்தானே பணமும் பெற்றுக் கொள்ள முடியும்? நீங்கள் என்ன ஒருவனை முடிக்கச் சொல்லி, பணமும் தருகிறீர்கள்?''

கவுண்டர் வேதாந்தத்தில் இறங்கினார்.

''கெட்டவன்ஒருவனை உலகத்திலிருந்து ஒழித்துக் கட்டுவதும் ஒரு நல்ல காரியம்தானே? டாக்டர்! செங்கோடனைப் போல் ஒரு கேடுகெட்ட பயலை நீங்கள் பார்க்கவே முடியாது. அநியாயமாக என்னுடைய வேலையாட்கள் இரண்டு பேரைக் கொன்று விட்டான். அவன் எத்தனை கொள்ளை அடித்திருக்கிறான் தெரியுமா டாக்டர்? நாளைக்கு அவன் ஜெயிலிலிருந்து தப்பி விட்டான் என்று வைத்துக்கொள்ளுங்கள். பிறகு ஒரு நாள் நீங்களே அவனிடம் தனியாக மாட்டிக் கொண்டீர்களானால், தனக்கு வைத்தியம் செய்ததைக் கூட மறந்துவிட்டு, அவன் உங்களிடமே கொள்ளையடிப்பான்.''

இதற்கு மேல் அவரிடம் எதுவும் பேச நான் விரும்பவில்லை. அந்தப் பணத்தை அவரிடமே திணித்துவிட்டுக் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக வெளியே அனுப்பினேன். ஏதோ உறுமிக்கொண்டே போனார் கவுண்டர்.

கவுண்டர் வந்து போன விஷயத்தைச் செங்கோடனிடம் சொல்ல வேண்டாம் என்றுதான் முதலில் எண்ணியிருந்தேன். ஆனால் அடுத்த நாள் அவனைப் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கும்பொழுது அவனாகவே என்னைக்கேட்டான்:

''சார், கவுண்டர் வந்திருந்தாராமே?''

''ஆமப்பா, வந்திருந்தார். உனக்கு எப்படித் தெரியும்?''

''கவுண்டர் ஒரு துரும்பை எடுத்துப் போட்டாலும் அதைத் தெரிந்துகொள்ள முடியும். உங்களிடம் வந்து என்ன சொன்னார்...?''

இனியும் மறைத்தால் என் மேலேயே சந்தேகிப்பானோ என்னவோ என்று நான் நடந்தவற்றைச் சொல்லிவிட்டேன். சொல்லி விட்டு

அவனது எண்ணக் கோடு தடை ஏதுமின்றி நீளட்டும், பிறகு வந்துபார்த்துச் சமாதானம் சொல்லுவோம்என்றுஎண்ணி வேறு காரியங்களைப் பார்க்கப் போய் விட்டேன்.

அன்று மத்தியானம் வீட்டுக்குப் போகு முன் செங்கோடனைப் பார்க்கப் போனேன். அவன் முகத்தில் குரோதமும், கொடுமையும் வஞ்சமும் நிறைந்திருக்கும் என்று எண்ணித் தான் போனேன். ஆனால் எனக்கு, மகிழ்ச்சி தரக் கூடிய ஆச்சரியம்தான்காத்திருந்தது. செங்கோடன் முகத்தில் ஒரு அசாதாரண ஒளி திகழ்ந்தது. அந்த ஒளிப்பிழம்பு, அவனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்பட்டு, முகத்தில் பரவி நின்றதெனத் துல்லியமாக விளங்கியது. உள்ளத்தில் ஒளி இருக்கவே வாக்கினிலும் ஒளி இருந்தது.



"டாக்டர் சார்! கவுண்டர் உங்களிடம் வருவார் என்பது நான் எதிர்பார்த்ததுதான். ஆனால் தாங்கள் நடந்து கொண்ட விதம் தான் எனக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. ஏதோ முன்பொரு முறை, உங்களுக்கு உதவி செய்திருக்கிறேன்; அதுவும் கவுண்டரின்பெண்ணுக்குப் பிரசவம் பார்க்கச் சென்ற போது செய்தது. அதற்காக, கொலைக்கு அஞ்சாத கவுண்டரைப் பகைத்துக் கொள்ளவும் தயங்காமல், நேற்று அவர் சொன்னதைச் செய்ய மறுத்து விட்டீர்கள். உங்களைப் போன்ற நல்ல நெஞ்சமுடையவர்கள் இருக்கும் இதே மண்ணில்தான், கொலைகாரக் கவுண்டரும், பழி வாங்கும் நெஞ்சம் படைத்த நானும் இருக்கிறோம். தங்களைப் போன்றவர்கள் அதிகமாகவும், என்னையும் கவுண்டரையும் போன்றவர்கள் குறைவாகவும் இருந்தால் இந்த உலகத்தில் துன்பமே இருக்காது. டாக்டர்! கவுண்டரை மறுபடியும் பார்த்து, தைரியமாக இருக்கச் சொல்லுங்கள். நிச்சயமாக நான் தப்பித்துக் கொள்ள முயற்சி செய்யப் போவதில்லை. நான் செய்த குற்றங்களுக்கு என்ன தண்டனை என்பது எனக்குத் தெரியும், கவுண்டருக்கும் தெரியும். ஆகவே இன்னும் சில நாட்களில் அவருடைய எத்தனையோ எதிரிகளில் ஒருவனாகிய நான் உயிரோடு இருக்கமாட்டேன். நான் சொன்னதை எப்படியாவது அவருக்குச் சொல்லியனுப்புங்கள். செய்வீர்களா?"

செய்வதாக உறுதியளித்தேன். அவன் அமைதி பெற்றான். அன்றே கவுண்டருக்குக் கடிதம் எழுதி அனுப்பினேன்.

ஒரு வாரத்தில் விசாரணை துவங்கியது. செஷன்ஸ்கோர்ட்டில்செங்கோடன் மேல் கொலைக் குற்றம் சாட்டப்பட்டது. என்னிடம் சொல்லியிருந்தபடி அவன் குற்றத்தை மறுக்கவில்லை. தூக்குத் தண்டனையைப் புன்சிரிப்புடன் ஏற்றுக்கொண்டான். தண்டனை நிறைவேற்றப்படும் நாளில அவன் கடைசிவிருப்பமாக, பெரிய சாமிக் கவுண்டரைப் பார்க்க வேண்டும் என்று போலீசாரிடம் கேட்டுக் கொண்டான். முதலில் கவுண்டர் மறுத்தாலும், நான் நேரில் சென்று பழையனவற்றை மறந்து இறக்கப் போகும் ஒரு உயிரை ஏங்கச் செய்ய வேண்டாமெனக் கேட்டுக் கொண்டதும் புறப்பட்டு வந்தார். செங்கோடனும் கவுண்டரும் சந்தித்தார்கள். செங்கோடனின் கண்களை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் கவுண்டர் தலைகுனிந்து நின்றார். அவரிடம்செங்கோடன் கடைசி வார்த்தையாகச் சொன்னது இதுதான்:

"ஐயா! இன்னும் சில மணி நேரத்தில் நான் இறக்கப் போகிறேன். இறப்பதற்கு முன்னால், என்னுடைய கடைசி வேண்டுகோள் இது தான். தயவு செய்து இனி மேல் எந்தக் கொலைச் செயலுக்கும் தாங்கள் காரணமாக இருந்து விடாதீர்கள்!" என்று கேட்டுக் கொண்டான்.


அவன் கண்கள் கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கின. கவுண்டரின் பாறை நெஞ்சத்தில் கூடக் கசிவு கண்டது. அவர் தலையை அசைத்து, 'சரி' என்றார். அப்பொழுது தான் அவனுக்கு மனத்தில் நிம்மதி பிறந்தது.

பிறகு செங்கோடனுக்குத் தூக்குத்தண்டனை நிறைவேற்றப் பட்டது.

• • •

கதையை முடித்தேன். சுந்தரேசன் கேட்டான்: "செங்கோடன் நெஞ்சமும், கவுண்டரின் உள்ளமும் கனிவதற்குக் காரணம் நீங்கள் தான். இல்லையா, சார்?"

"நானல்ல. நம்முடைய தொழில்" என்றேன். சுந்தரேசன் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான். அவன் நடையில் புதிய உற்சாகமும் பெருமிதமும் போட்டியிட்டன.


தீப்புண் ?
வெட்டுக்காயம் ?
விஷக்கடி ?
Burnol
ANTISEPTIC
SOOTHING HEALING
CONTAINS NO
ANIMAL FATS
Boots
Made in India by
BOOTS PURE DRUG COMPANY
(INDIA) PRIVATE LTD.
17 Nicol Road, Bombay 1
பர்னல்
உபயோகியுங்கள்
வெட்டுக்காயம்
சுட்டபுண்
பெரியபுண்கள்
பூச்சிக்கடிகள்
உஷ்ணத்தினால்
ஏற்படும் புண்கள்
சரும நோய்கள்
முதலியவைகளுக்குச் சிறந்தது
தயாராயிருங்கள் !
எந்த சமயத்திலும், எந்த
இடத்திலும் விபத்துகள்
ஏற்படலாம்! ஆகையால்
பர்னலை கையோடு
வைத்திருங்கள்! குறைந்த
விலையில் கையடக்கமான
மஞ்சள் ட்யூப்களில்
கிடைக்கிறது. இன்றே
ஒரு ட்யூப் வாங்குங்கள் !
பர்னல் உன்னதமான
ஆன்டிஸெப்டிக் ஆயின்ட்மென்ட்



அவன் அழகுதான் என்ன—சமூகத்தில் அவன்
மதிப்புதான் என்ன!
அவன்
உபயோகிப்பது
டாடாவின்
ஜேய்
மனங்கவரும் மணமுள்ள சௌம்யமான டாய்லெட் சோப்பு!
டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
J. 5636

மனைவி



டாக்கா மெயில் இரவு பத்து மணிக்குத்தான் பிளாட்பாரத்தை விட்டுப் புறப்படும். இருந்தாலும் வால் மோகன் வாறநா வண்டி புறப்பட இரண்டு மணி நேரம் இருக்கும் பொழுதே ஸ்டேஷனை அடைந்து விட்டான். அவனோடு ஒரு பெரிய டிரங்கு, இரண்டு சூட்கேஸ், ஒரு டிபன் காரியர், ஒரு படுக்கை ஆகியவை இருந்தன. கூலியின் உதவி கொண்டு அவன் தன் சாமான்களை ஒரு புறமாக வைத்துக் கொண்டான். டிக்கட் அவன் முன்பே வாங்கி விட்டான்.

ஆனால் இந்த நாட்களில், முன் கூட்டி டிக்கட் வாங்கி விட்டதனால் மட்டும், டாக்கா மெயிலில் சாமான்களுடன் கூட்டாக இடம் கிடைத்து விடுவதில்லை. முதலில் சுங்க இலாக்கா அலுவலகத்தில் 'பர்மிட்' வாங்கியாக வேண்டும். அங்கே ஒவ்வொரு பெட்டி படுக்கையையும் திறந்து நன்றாகப் பரிசோதனை செய்கிறார்கள். யாரும் தம்முடன் பாகிஸ்தானுக்கு, எடுத்துப் போகக் கூடாத பொருளை எடுத்துப் போகவில்லையே என்று சோதனை செய்து பார்க்கிறார்கள்.

இரண்டு வாரங்களுக்கு முன் வால்மோகனுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. சுங்க அதிகாரி அவனைப் போலீஸில் பிடித்துக் கொடுக்கும் அளவுக்குத் தயாராகிவிட்டார். காலில் விழுந்து கையில் விழுந்து வெகு சிரமப் பட்டு வால்மோகன் சிறைக் காற்று வாங்குவதிலிருந்துதன்னைத் தப்புவித்துக் கொண்டான். அப்பொழுது அவன், கையைக் கடிக்கும் இந்த வியாபாரத்திலிருந்து விலகிவிடுவது என்று கூட முடிவு கட்டி விட்டான். ஆனால், அவன் மீண்டும் கல்கத்தாவில் காலடி வைத்த பொழுது, பொல்லாத ஆசை அவனை மீண்டும் தன் வசப் படுத்திக் கொண்டு விட்டது.

......இந்தத் தடவையும் வால்மோகன் சட்டைத் துணி, புடவை, வேட்டி ஆகியவற்றில் முந்நூறு ரூபாய் செலவிட்டான். இவற்றை யெல்லாம் அவன் பெட்டிகளிலும், படுக்கையிலும் வைத்து நிரப்பினான். மேலே பழங்கள் முதலிய வற்றை வைத்து மறைத்தான். இந்தத் தடவை அவன் வெகு ஜாக்கிரதையாகி விட்டான், சூடுண்ட பூனையைப் போல.

இனி ஆண் சங்க இலாக்கா அதிகாரியிடம் போவதில்லை என்று மனத்தில் ஒரு தடவைக்குப் பத்துத் தடவையாகத் தீர்மானித்துக் கொண்டான். இயன்ற வரையில் பெண் சங்க இலாக்கா அதிகாரியையே சோதனை போடச் செய்வது என்றும் நிச்சயித்தான்.

அந்த இலாக்காவில் இரண்டு மூன்று யுவதிகள் வேலை செய்வதையும் அவன் கவனித்து வைத்துக் கொண்டான். அவர்கள் பெண் பிரயாணிகளின் பெட்டி படுக்கைகளைப் பெயரளவில் பிரித்துப் பார்த்துவிட்டுப் போக அநுமதிப்பதையும் அவன் தன் கண்களாலேயே கண்டான்.

ஆனால் அவனோடு போக யாரும் பெண்மணி கிடையாது. தனது பிராயம் முதிர்ந்த தாயாரை அவன் வீட்டிலேயே விட்டு விட்டு வந்திருந்தான். அவளைப் பின்னோடு அழைத்து வந்திருந்தாலும் ஒன்றுதான்; வீட்டிலேயே விட்டு விட்டு வந்திருந்தாலும் ஒன்றுதான்.

ஹரவிலாஸ் என்பவன் தனது மனைவியைச் சிகிச்சைக்கென்று கல்கத்தாவுக்கு அழைத்துக் கொண்டு வந்திருந்தான். ஆஸ்பத்திரியில் அவள் ஒருவார காலம் தங்க நேரலாம் என்று தோன்றியது.

வாஸ்மோகன் அந்த ஒருவார காலத்தில் அவளைப் பார்ப்பதற்காக மூன்று முறை ஆஸ்பத்திரி போய் வந்தான். போகும்பொழுது வெறும் கையோடு போகாமல் பழங்களும் வாங்கிச் சென்றிருந்தான். பேச்சோடு பேச்சாகச் சித்தவாறு சேர்ந்தே ஊர் செல்லலாம் என்றும் அவர்களிடம் தெரிவித்தான். ஹரவிலாஸ் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றான்.

எனவே, வாஸ்மோகன் சுநயனியிடம், "என்னோடு சில சாமான்களும் இருக்கும். அவர்கள் உன்னிடம் ஏதாவது கேட்டால், நான் உன்னுடைய அண்ணன் என்று சொல்லிவிடு!" என்றும் சொல்லியிருந்தான்.

"பேஷாகச் சொல்லி விடுகிறேன்!" என்று சொன்ன சுநயனி புன்முறுவலுடன், "ஆனால் குறைந்த விலையில் இருந்தாலும், எனக்கு ஒரு நல்ல புடவை தந்துவிட வேண்டும்" என்று ஒரு நிபந்தனை விதித்தாள்.

"நீ கவலைப்படாதே!" வாஸ்மோகன் அவளுக்கு ஆறுதல் கூறினான்: "காலம் வரட்டும். உன்னையே கொண்டு வந்து போராகக் குவித்து விடுகிறேன்!"

புறப்படும் நாளும் நேரமும் கூட நிச்சயமாகிவிட்டது. ஹரவிலாஸும் அவன் மனைவியும் இன்றுதான் புறப்படுவதாக இருந்தார்கள். அண்ணன் முறையில் சுநயனியுடன் புறப்படுவது என்ற திட்டத்தை வாஸ்மோகன்தான் முன்னாடியே வகுத்துக் கொண்டிருந்தானே! இப்படிச் செய்வதனால், சுநயனியின் பொருள்களுடன் தன் பொருள்களும் ஜாக்கிரதையாகப் பிளாட்பாரத்துக்குள் போய்விட முடியும் என்ற நம்பிக்கை அவனுக்குப் பரிபூரணமாக இருந்தது.

அவன் சகலவிதமான ஜாக்கிரதைகளையும் பந்தோபஸ்து ஏற்பாடுகளையும் முன்கூட்டியே கையாண்டிருந்தான். எனவே, அவனுக்கு இப்பொழுது எந்த விஷயத்துக்கும் கவலை இல்லை. அவன் பெரிய ஹாலில் உட்கார்ந்து சிகரெட் குடிக்கலானான். ஹரவிலாஸும் அவன் மனைவியும் வருவதை எதிர்நோக்கியவாறே புகையை ஊதி ஊதித் தள்ளினான்.

ரிக்ஷா, டாக்ஸி, வண்டி என்று ஏகக் கும்பல் கூடி விட்டது. பரபரப்புற்ற மனிதர்கள் பரபரப்புற்ற மனதுடன் பெண்களுடன் வந்தார்கள். ஆனால் ஹரவிலாஸைத்தான் காணோம். வாஸ்மோகனுக்கு உள்ளூற மனம் 'திக், திக்' என்று அடித்துக் கொண்டது; உள்ளம் பறந்தது. இருப்புக் கொள்ளாமல் அவன் எழுந்து நடக்கவும், இருபத்தைந்து வயதான வாலிபன் ஒருவன் இரைக்க இரைக்க ஓடி வருவதும் சரியாக இருந்தது. "நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்?" அவன் மூச்சு வாங்கக் கேட்டான்: "நான் உங்களை ஓரிடம் விடாமல் தேடிக் கொண்டிருந்தேன். இன்று அண்ணா ஊருக்குப் புறப்படப் போவதில்லை என்பதைச் சொல்லுவதற்காக வந்தேன். மன்னியின் உடல் நிலை மீண்டும் கெட்டு விட்டது. இன்னும் சில வாரங்களுக்கு அவர் பயணம் புறப்படக்கூடாது என்று டாக்டர் சொல்லி விட்டார்!" என்றும் கூறினான்.

அப்புறம் வாஸ்மோகன் அப்படியே பெட்டியின் மீது உட்கார்ந்து வெகு நேரம்வரை சிந்தனையில் ஆழ்ந்து விட்டான். என்ன ஆனாலும் இன்று அவன் அந்த வண்டியைப் பிடித்தே ஆக வேண்டும். அவன் ஸ்டேஷனுக்கு வரும்பொழுது ரிக்ஷாக்காரனுக்கு ஒன்றரை ரூபாய் கொடுத்திருந்தான். திரும்பவும் சாமான்களை எடுத்துக் கொண்டு போவதென்றால், அதே செலவை மீண்டும் ஒருமுறை அவன் செய்ய வேண்டியிருக்கும். எதற்கு ஒன்றுக்கும் இல்லாமல் வீண் செலவு?

ஹரவிலாஸ் இன்று தன் மனைவியுடன் ஊருக்குப் போகவில்லை. அதற்காக அங்கலாய்த்து விடுமா? அவனைப்போல் எத்தனையோ பேர்கள் இன்று தங்கள் தங்கள் மனைவிமார்களுடன் போக மாட்டார்களா? வாஸ்மோகன் அவர்களில் ஒருவரைப் பிடித்துக்கொள்வான்; காரியத்தைச் சாதித்துக்கொள்ளப் பார்ப்பான்.

இம்மாதிரி அவன் யோசித்துக் கொண்டிருக்கும்பொழுது, நன்றாக உடை உடுத்தியிருந்த ஒரு வாலிபன், தனது அழகிய மனைவியுடன் சுங்கக் காரியாலயத்தில் பெண்கள் பகுதியைநோக்கிப்போய்க் கொண்டிருந்தான். வாஸ்மோகன் சிறிதும் சங்கோசமின்றி அவனை அணுகி, "மன்னிக்க வேண்டும். தாங்கள் எங்கே இருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

வாஸ்மோகனின் இந்தக் கேள்வியைக் கேட்டதும் வாலிபன் திடுக்கிட்டான். "பரிதபூரில் இருக்கிறேன்!" என்றவன், "ஆமாம், ஆனால் நீங்கள் கேட்பதன் பொருள் விளங்கவில்லையே!" என்றான்.

"நானும் பரிதபூரில்தான் இருக்கிறேன்!" வாஸ்மோகன் பதில் அளித்தான். "நாம் இருவரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். தெரிந்ததா? ஆமாம், எனக்கு ஒரு சிறு உதவி நீங்கள் செய்ய முடியுமா?" என்று கெஞ்சாத குறையாகக் கேட்டான்.

"நான் என்ன செய்ய வேண்டும் தங்களுக்கு? சொல்லுங்கள்!"

வாஸ்மோகன் தன் பொருள்களைச் சைகை மூலம் காட்டி, மிருதுவான விளக்கத்துடன் கூறினான்: "உங்களுக்கு அதிகச் சிரமம் ஒன்றும் ஏற்படாது. சகோதரியிடம் கூறித் தன்

பொருள்களுடன் எனது இந்தப் பொருள்களை யும் பிளாட்பாரத்துக்குக் கொண்டு வந்து சேர்க்கும்படியாகச் சொல்ல வேண்டும். யாராவது கேட்டால், நான் அவர்களுக்குக் கிட்டத்து உறவினன் என்றும் சொல்லும்படி சொல்ல வேண்டும்!'' என்றான்.

வாலிபன் லால்மோகனை ஒரு முறை பார்த் தான். பிறகு இளநகை புரிந்தவாறே, ''என் மனைவி தங்களைப் போன்ற கவாரசியமான நபர்களுடன் உறவு கொண்டாட ஒரு வேளை ஆட்சேபிக்காமல்கூட இருக்கலாம். ஆனால் நாங்கள் ஆபத்தை விலைக்கு வாங்கிக் கொள்ளத் தயாராயில்லை. இந்த நாட்களில் பொருள் களை எவ்வளவு கடுமையாகச் சோதிக்கிறார்கள்? உங்கள் பொருள்களை எடுத்துப் போய், விருதுப்பட்டி சனி யன் கதையாகுமாறு நீந்தால்?'' என்றான்.



லால்மோகன் இது போல் இன்னும் எத்தனையோ தம் பதிகளிடம் சொல்லிப்பார்த் தான். ஆனால் எல்லோ ருமே ஒரே பதிலைத் திருப்பி விட்டார்கள்.

''பார்த்து விடுகிறேன் ஒரு கை. இன்று நான் வண் டியைப் பிடிப்பதை யார் தடுக்கிறார்கள் என்று!''

இவ்வாறு தன் கூட்டாளி நந்ததாஸிடம் கூறிய லால்மோகன், ''நீ இங்கேயே உட் கார்ந்து இந்தச் சாமான்களைப் பார்த்துக் கொண்டிரு. இதோ நான் வருகிறேன்!'' என்று சொல்லியவாறே புறப்பட்டான்.

இங்கும் அங்கும் சுற்றி ஏதாவது முன்பின் தெரிந்த ஜோடி கிடைக்கிறதா என்று ஒரு நோட்டம் விட்டான் லால்மோகன்.

''ஐயா, சாமி! இதைக் கொஞ்சம் கேளுங்களேன்!''

பெண் குரல் கேட்டு அவன் பின் திரும்பிப் பார்த்தான். அடுத்த கணம் அப்படியே கொள்ளை கொடுத்தவன் போல் நின்றுவிட் டான். அவன் எதிரே நின்றவள் ஒரு யுவதி. அவளது உடலை ஒரு கிழிந்த புடவை அலங் கரித்தது. அதன் உண்மை நிறம் என்னவாக இருக்க முடியும் என்று சொல்ல முடியாத படி அது அழுக்கேறி இருந்தது. அவள் மெலிந்து ஒல்லியாக இருந்தாள். ஆயினும் கவர்ச்சிகரமாகவே காட்சி அளித்தாள்.

''என்ன வேண்டும்?''—கொஞ்சம் நின்று கேட்டான் அவன்.

அந்த யுவதி முதலில் தயங்கினாள். பிறகு, ''நான் இன்று ஒன்றுமே சாப்பிடவில்லை. எனது அங்கஹீனமான தாயும் பட்டினியாகக் கிடக்கிறாள். அவளால் மட்டும் முடியுமானால், என்னையே தின்று ஏப்பம் விட்டு விடுவாள்; அவ்வளவு பசி. எனக்கு ஏதாவது தங்களால் தர இயலுமா?'' என்று கேட்டவள் தன் கையையும் நீட்டி விட்டாள்.

''இரக்கம் காட்ட எனக்கு இப்பொழுது நேரம் இல்லை.'' அவன் வறண்ட குரலில் கூறிவிட்டு, முகத்தைத் திருப்பிக் கொண்டு புறப்பட்டு விட்டான்.

''கேளுங்க, ஐயா! ஏதாவது கொஞ்சம் கொடுங்க ஐயா!'' அவ்விளம் பெண் வேண்டி னாள்; கெஞ்சினாள்.

லால்மோகன் அவளை மீண்டும் ஒரு முறை உன்னிப்பாகக் கவனித்தான். பார்வைக்கு ஒன்றும் அவள் மோசமாகத் தோன்றவில்லை.

''நான் சொல்வதைக் கேட்டால், உனக்கு நான் ஏதாவது தருவேன்!'' என்றான் அவன்.

இளம் பெண் தனது பார்வையை அவன் முகத்தில் புதைத்தாள். அவள் கேட்ட அந் தச் சொற்கள் அவளுக்குப் புதியவையல்ல. அவள் இதற்கு முன்பும் இது போன்ற வார்த்தைகளை எவ்வளவோ முறை கேட் டிருந்தாள்.

அவள் சில அடிகள் முன் எடுத்து வைத்தாள். இதழ் களிலே இளநகையாட, இனி மையான குரலில், ''கேட் காமல் என்ன! தாங்கள் சொல்வதைக் கேட்கிறேன். என்ன, சொல்லுங்கள்!'' என்றாள்.

''அந்த விஷயத்தை நான் இங்கே சொல்ல முடியாது. என்னோடு வா! ஆமாம், உன் பெயரென்ன? சொல்லவில் லையே!'' என்று கேட்டான் லால் மோகன்.

''சம்பா!''

''என்ன அழகான பெயர்!'' லால் மோகன் இனிமை கலந்த குரலில் கூறினான்.

அவன் முதல் வகுப்பினர் இளைப்பாறும் அறையை அடைந்தான். பிறகு மெதுவாக உள்ளே எட்டிப் பார்த்தான். நல்லவேளை யாக உள்ளே யாரும் இல்லை. ''வா, உள்ளே வா!'' என்று இங்கும் அங்கும் பார்வையை ஓடவிட்டவாறு கூறினான்.

சம்பா அவன் பின்னாலேயே தயங்கியவாறு உள்ளே சென்றாள்.

லால்மோகன் அவளை நெருங்கி வந்த பொழுது, அவள் திடீரென்று பின்நகர்ந்தாள். லால்மோகன் தன்னுடன் எப்படி நடந்து கொள்வானோ என்ற பயம் அவளுக்கு.

ஆனால் சம்பாவை லால்மோகன் தொடக் கூட இல்லை. அவன் அவளது காதின் அருகில் சென்று மெதுவான குரலில், ''நீ எனது ஒரு காரியத்துக்கு ஒத்தாசை செய்தால், நீ கேட்ப தைப் பரிசாகத் தருவேன்!'' என்றான்.

பிறகு அவன் சம்பாவுக்கு எல்லா விஷயங் களையும் விளக்கமாகக் கூறினான். சம்பாவுக்கு அத்தகைய திட்டம் புதிதாகவே இருந்தது. அவள் இதுவரையில் அம்மாதிரி பேச்சைக் கேட்டதே இல்லை.

''ஆமாம், அவர்கள் நம்மைப் பிடித்துவிட் டால்...?'' சம்பா சிறிது நேரப் பிரமிப்புக் குப் பின் இந்தக் கேள்வியைக் கேட்டாள்.

பதிலுக்கு லால்மோகன் முறுவலித்தான். ''அப்பொழுது நாம் இருவரும் சேர்ந்தாற் போலச் சிறைக்கு அனுப்பப்படுவோம். ஆனால்

''என்னடா! அவர்கள் வீட்டுக் காவலும் பழத் தோலில் வழுக்கி விழுந்தாயா? அதை யார் வழியில் உரித்துப் போட்டு இருந்தார்கள்?''



''இல்லையப்பா, புளித்தோலில் வழுக்கி விழுந்தேன். அதையும் யாரோ உரித்த வழியில் போட்டிருக்காங்க!''

அந்த இடமும் அப்படி ஒன்றும் மோசம் இல்லை. இருப்பதற்கு இடம் மட்டும் இல்லை, உன்னை உணவும் அங்கே கிடைக்கும். தெரியுமா!'' என்றான்.

''சரி, முயற்சி செய்து பார்ப்போம். நடக்கிறது நடக்கட்டும், பார்த்துக் கொள்வோம்!'' என்றாள் சம்பா. ''....ஆனால் மூட்டு வெளிப்படுவதற்கு இன்னொரு வழி இருக்கிறதே! காவல்காரர்கள் நம்முடைய நடை, உடையைப் பார்த்தே புரிந்து கொண்டு விடுவார்களே! உங்கள் உடை எவ்வளவு அசுத்தமாக இருக்கிறது! என் புடவை...! இந்த நிலைமையில் நம்மை யார் கணவன்-மனைவி என்று சொல்வார்கள்?'' என்று கேட்டாள்.

அதைக் கேட்டதும்தான் வால்மோகனுக்கு நினைவு வந்தது. ''நீ சொல்கிறது நியாயம் தான்!'' என்றான். ''சம்பா! நீ வெகு கெட்டிக்காரி. நீ எனக்கு மட்டும் என்ன, வெகு சுலபமாக யாராவது நிஜமே, பெரிய அதிகாரிக்குக்கூட மனைவியாகி விடலாம். அவ்வளவு அறிவும் சாமர்த்தியமும் உனக்கு இருக்கிறது. சரி, நீ கொஞ்சம் இங்கேயே இரு. இதோ வருகிறேன்!''

அவன் சில நிமிஷங்களுக்குள்ளேயே ஒரு சூட்கேஸுடன் திரும்பி வந்தான். அதைத் திறந்து அதிலிருந்து மஞ்சள் நிறப்புடவை ஒன்றை எடுத்துச் சம்பாவிடம் கொடுத்தான். ''இதை எடுத்துக் கொள்!'' என்றவன், ''இப்பொழுது நீ என் மனைவியாகவே தோன்றுவாய். நான் இதைப் பதினேழு ரூபாய் எண்பத்தேழு நயே பைசே - உனக்கு நயே பைசே கணக்கு வராதோ - பதினேழு ரூபாய் பதினொன்று அணா கொடுத்து வாங்கியிருக்கிறேன். அங்கே போய் முன்ஷியின் கையில் — அதிகம் இல்லாவிட்டாலும் முப்பது ரூபாய்க்கு விற்று விடுவேன்!'' என்றான்.

''நீங்கள் எல்லாப் புடவைகளையும் விற்று விடுவீர்களா? உங்கள் மனைவிக்கு ஒன்று கூடக் கொடுக்கமாட்டீர்களா?'' என்று சம்பா பரிகாசப் புன்முறுவலுடன் கேட்டாள்.

''மனைவியா?'' வால்மோகன் சிரித்துவிட்டான். ''எங்கே இருக்கிறாள் என் மனைவி? ......ஓகோ, நீ இருக்கிறாயா?''

சம்பாவின் முகம் குப்பென்று சிவந்து விட்டது. அவள் தன் கடைக்கண்ணால் வால்மோகனைப் பார்த்தாள். அவள் மாநிறமாயிருந்தாலும் நறுநறுவென்று அழகாகக் காட்சி அளித்தாள். அவளது வயதும் இருபத்தைந்து இருபத்தாறுக்கு மேல் இராது.

''இப்பொழுது நீங்கள் சற்று வெளியில் போங்கள்!'' என்றாள் சம்பா அவனிடம்.

''எதற்காக?'' — வால்மோகன் கேட்டான்.

இதைக் கேட்டுச் சம்பா புன்முறுவல் பூத்தாள். நிஜமாகவே அவன் மணமாகாதவன். அவனுக்குப் பெண்களைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. அவள் புருவத்தை உயர்த்தி, ''நான் என் உடையை மாற்றிக் கொள்ளவேண்டுமே!'' என்றாள்.

வால்மோகன் உடனே தன் தவறை உணர்ந்து கொண்டான். ''மன்னித்து விடு, என்னை!'' என்றான். ''இன்னும் ஒரு விஷயம். விலையுயர்ந்த புடவை உடுத்திக்கொண்டு விட்டதனால் மட்டும் போதாது. நீ உன் கணவனுக்கு ஒத்தாசை செய்யப் போகிறாய். உன் நெற்றியில் குங்குமம் இருக்கவேண்டும். நீ புடவை மாற்றிக் கொள். அதற்குள் நான் போய்க் குங்குமம் வாங்கி வருகிறேன். உனக்காக ஒரு பிளாட்பாரம் டிக்கட்டும் வாங்கியாக வேண்டுமே!''

அவன் திரும்பி வந்த பொழுது, அவன் கையில் குங்குமம் மட்டும் இல்லை. இரண்டு வெற்றிலை பீடாக்களும் இருந்தன. அவன் ஒன்றைச் சம்பாவிடம் கொடுத்து, ''போட்டுக் கொள். இதனால் உன் உதடுகள் சிவந்து விடும். மணமானவள் வெற்றிலை போட்டுக் கொள்ளவில்லை என்றால், அது நன்றாயிராது!'' என்றான்.

அப்பொழுதுதான் ஸ்டேஷன் கடிகாரத்தில் 'டண்' என்ற ஓசை கேட்டது. வால்மோகன் திடுமென்று துள்ளிக் குதித்தான். ''அட, ஒன்பதரை அடித்து விட்டதே! சீக்கிரம், சீக்கிரம்! இல்லாவிட்டால் நான் வண்டியைப் பிடிக்க முடியாது!'' என்றான்.

சிறிது நேரத்தில் சம்பா தயாராகிவிட்டாள். வால்மோகன் அவளைக் கூர்ந்து ஒரு முறை பார்த்தான். அவள் நிறத்துக்குப் புடவையின் மஞ்சள் நிறம் வெகுநேர்த்தியாக அமைந்திருந்தது; அவள் அழகை நன்றாக எடுத்துக் காட்டவும் செய்தது.

• •

வெகுநேரம் வரை வால்மோகன் வராமல் போகவே, நந்தலால் ஆயாசமுற்று அயர்ந்தான். அவன் வந்ததும் வந்த ஆத்திரத்தில் குதித்துக் கொதித்தான். ஆனால் வால்மோகனுடன் சம்பாவும் வரவே, என்ன, ஏது என்று புரியாமல் அவன் வியப்புற்றான். ''யார் இவள்?'' என்று குமுறி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு கேட்டான்.

''என் மனைவி!'' என்றான் வால்மோகன்.

''மனைவியா?'' நந்தலால் வியப்பிலும் திகைப்பிலும் ஆழ்ந்துவிட்டான்.

''ஆமாம், அப்பா! ஆமாம்!'' வால்மோகன் கூறினான்: ''அதோடு நீ என் மனைவியின் சகோதரன். நீ எங்களை ரயிலில் ஏற்றி விடுவதற்காக வந்திருக்கிறாய். இதோ உன் பிளாட்பாரம் டிக்கட். நீ வாங்கி


சுலேகா
பவுண்டன் பேனா மை
Sulekha
இப்பொழுது உலகின் தலை சிறந்தது
இதில் "S-100" ஸால்வென்ட் அடங்கி இருக்கிறது. உஷ்ண தேசங்களில் விலை உயர்ந்த பேனாக்களுக்கு உபயோகிக்கும் வகையில் விசேஷமாக தயாரிக்கப்படுகிறது.
சுலேகா ஒர்க்ஸ் லிமிடட்,
கல்கத்தா, டில்லி, பம்பாய், மதராஸ்.


டீ கேர்ல்
டீ டஸ்ட்
LIPTON'S
TEA GIRL
FINEST
INDIAN DUST TEA
இது சிறந்த ஸ்ட்ராங் டீ தருகிறது
LIPTON (INDIA) LTD. (Incorporated in England)

யிருக்கும் டிக்கட்டை என்னிடம் கொடுத்து விடு !'' என்றான்.

உடனே சட்டுப்புட்டென்று ஒரு கூலியைக் கூப்பிட்டு அவன் தலையிலே பெட்டி படுக்கைகளை வைத்தான் லால்மோகன். பிறகு சம்பாவையும் நந்ததாஸையும் அழைத்துக் கொண்டு சுங்க அலுவலகத்தில் உள்ள பெண்கள் பகுதிக்கு நடந்தான்.

அங்கே ஒரு சிறிய 'க்யூ' நின்று கொண்டிருந்தது. இருபத்திரண்டு வயது மதிக்கக் கூடிய ஒரு இளம் பெண் பொருள்களைச் சோதனையிட்டுக் கொண்டிருந்தாள்.

'' முன்னால் சென்று உன் பொருள்களை யெல்லாம் அவளிடம் காண்பி !'' லால் மோகன் சம்பாவை முன்னால் போகும்படி கட்டளையிட்டான்.

சம்பா ஒரு முறை லால்மோகன் பக்கம் திரும்பிப் பார்த்தாள். பிறகு சுங்க அதிகாரியின் அருகில் சென்றாள். பெண் சுங்க அதிகாரி சம்பாவைப் பார்த்து விட்டுப் பொருள்களைச் சோதனையிடத் தொடங்கினாள். '' உன்னிடமோ இரண்டே இரண்டு டிக்கட்டுகள் இருக்கின்றன. சாமான்களோ ஏராளமாக இருக்கின்றனவே ? பெட்டிகள் எத்தனை ? இந்த நான்குமா ?'' என்று கேட்டாள்.

''ஆமாம் !'' என்றாள் சம்பா.

'' இதில் சட்ட விரோதமான பொருள் ஏதும் இல்லையே ?''

'' நீயேதான் பார்த்துக் கொள்ளேன் !'' என்று கூறிச் சம்பா முறுவலித்தாள்.

ஆனால் பெண் அதிகாரி இலேசில் விடுபவளாகத் தோன்றவில்லை. '' பார்க்காமல் விடுவேனா ? பார்க்கத்தான் போகிறேன். திற, அவற்றை! சாவிகள் எங்கே ?'' என்று கேட்டாள் அவள்.

சம்பாவுக்கும் லால் மோகனுக்கும் இதயம் படபட வென்று துடித்தது. பெண் சுங்க அதிகாரி ஒவ்வொரு பொருளையும் குடைந்து குடைந்து பார்த்தால் அவர்கள் தப்புவது இலேசுப்பட்ட காரியம் இல்லை.

லால் மோகன் தன் சட்டைப் பையிலிருந்து சாவியை எடுத்துச் சம்பாவின் கையில் கொடுத்து, ''திறவேன் அதை ! நான் முன்னாலேயே முட்டிக் கொண்டேன். இத்தனை பெரிய டிரங்கைக் கொண்டு போய் என்ன செய்யப் போகிறாய் என்று ! நீயோ உன் அம்மாவோ, வேறு யாரோ காது கொடுத்துக் கேட்டால்தானே ?'' என்று அவளைக் கடிந்துகொண்டான்.

பிறகு பெண் சுங்க அதிகாரியின் பக்கம் திரும்பி, '' இவள் ஒரு பொருளையும் போட்டு விட்டுப் போக விரும்பவில்லை. ஓட்டை உடைசல் ஒன்று பாக்கி யில்லாமல் கட்டிக் கொண்டு போக விரும்புகிறாள். இவளுக்கு என்ன தெரியும், இத்தனை சிரமம் இருக்கிறதென்று ! என் மாமியார்க்காரி இருக்கிறாளே, அவளுக்கும் அறிவு கிடையாது. பெட்டி, படுக்கை, துணி மணி என்று என்னவெல்லாமோ சேகரித்து நிறைத்துத் தள்ளியிருக்கிறாள், தன் அருமைப் பெண்ணுக்கு

ஒரு வண்டி கரப்பு, ஒரு மூட்டை மூட்டைப் பூச்சி, ஒரு கோணி சிலந்தி யெல்லாம் உடனே தேவை. என்ன செய்வது?''

'' எதுக்கு சார் இதெல்லாம் ?''



''நான் வீடு காலி பண்ணுகிறேன். என் வீட்டுக்காரர், முதலில் அவர் கொடுத்தபடியே வீட்டை ஒப்படைத்து விட்டுப் போகச் சொல்லி இருக்கார். அதான்!''

என்று. வேறு எந்தப் பெண்மணிக்குமே குழந்தை பிறந்ததில்லை போல, இப்படியா கட்டி விடுவது ?'' என்றான்.

அதைக் கேட்டுச் சம்பா மட்டும் என்ன ; அந்தப் பெண் சுங்க அதிகாரி கூட வெட்கித் தலை குனிந்தாள். அவள் நெற்றியிலே வியர்வைத் துளி அரும்பியது. அவள் அதைத் தன் கைக்குட்டையினால் துடைத்துக் கொண்டாளா, அல்லது வந்த சிரிப்பை அடக்கிக் கொள்ள அப்படிச் செய்தாளா ? யார் கண்டார்கள் ?

லால் மோகன் சம்பாவை ஒரு புறமாக ஒதுக்கி நகர்த்திக் கொண்டே, '' நகரு நீ! நான் திறக்கிறேன். இப்படிப் பயணம் புறப்படுவதிலே உனக்கு என்ன இன்பம் கிடைத்து விட்டது ? சிவனே என்று உன் அம்மாவோடேயே இருந்து கொண்டிருக்கலாமோ, இல்லையோ ? இப்பொழுதே முகம் வெளுத்துக் கிடக்கிறது. இன்னும் எத்தனை தூரம் போகணும் ? அப்பப்பா ! என்ன கஷ்டம் ! என்ன கஷ்டம் !'' என்றான்.


'' நீங்கள் அந்த டிரங்கைத் திறக்க வேண்டாம். மற்றப் பொருள்களைக் காட்டுங்கள், போதும் !'' என்றாள் பெண் சுங்க அதிகாரி.

அவள் சூட் கேசைத் திறந்து மேலெழுந்தவாரியாக எட்டிப் பார்த்தாள். படுக்கையைத் தன் மென்மையான விரல்களால் அழுத்திப் பார்த்தாள். பிறகு, '' சரி, நீங்கள் போகலாம் !'' என்றாள்.

கூட்ட நெரிசலில் நீந்திக்கொண்டு அவர்கள் ஆறாவது பிளாட்பாரத்தை அடைந்தார்கள். யாரும் அவர்களது டிக்கட்டைக் கூடப் பரிசோதிக்கக் கேட்கவில்லை.'' அட கடவுளே! என்ன கூட்டம் ! என்ன கூட்டம் !''

லால் மோகன் தன் தோழன் நந்ததாஸைக் கூப்பிட்டு, '' ஒவ்வொரு பெட்டியுமே கூட்டம் நிரம்பி வழிகிறது, உள்ளே எப்படிப் போவது? நீ கூலியோடு முன்னால் போ. இஞ்சினுக்குப் பக்கத்துப் பெட்டியிலே ஒரு வேளை இடம் கிடைக்கலாம். நானும் இதோ வந்து விடு கிறேன் !'' என்றான்.

மற்றொரு புறத்திலே ஒரு சூட்ஸ் வண்டி நின்று கொண்டிருந்தது. லால் மோகன் அவ்விடம் சென்று சம்பாவிடம், '' சீக்கிரம் ! நேரம் குறைவாக இருக்கிறது. வண்டி புறப்



பட. அப்படிப் போய்ப் புடவையை மாற்றிக் கொண்டு, என்னிடம் கொண்டு வந்து கொடு. ஆமாம், உனக்கு என்ன வேணும், சொல்லு!" என்று கேட்டான்.

சம்பா பேசாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரம் கழித்து, "நீங்கள்தான் என் இஷ்டத்துக்குத் தருவதாகச் சொன்னீர்களே!" என்றாள்.

"ஆமாம். யார் இல்லை என்று மறுத்தார்கள்? என்ன வேண்டும், சொல்?"

"எனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டபடியே சம்பா நாணத்துடன் தன் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

லால் மோகன் சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்தான். பிறகு தனது சட்டைப் பையிலிருந்து சில்லறை நாணயங்களை எடுத்து எண்ணினான். அதைச் சம்பாவின் கையில் வைத்தவாறே, "இதோ பார்! வள்ளிசாக உனக்கு ஒரு ரூபாய். பதினாறு அணா தருகிறேன். ஒன்றும் குறைவாகக் கொடுத்து விடவில்லை. சண்டைக்கு வந்து விடாதே! தெரிந்ததா?" என்றான்.

லால்மோகன் அப்புறம் அங்கே நிற்கவில்லை. அவன் என்ஜின் இருக்கும் பக்கம் ஒரே ஓட்டமாக ஓடி விட்டான்.

"சீக்கிரம் ஓடி வா!"— நந்ததாஸ் கூச்சலிட்டான். "உள்ளே வந்து விடு. நான் உனக்காக இடம் பிடித்திருக்கிறேன். கூலிக்கு ஒன்றரை ரூபாய் கொடுக்கும்படியாகி விட்டது!" சொல்ல வேண்டியதை உரத்த குரலில் சொல்லி முடித்தான் அவன்.

லால்மோகன் சாமான்களை ஒரு முறை பரிசோதித்து விட்டு நிம்மதியான நீண்ட மூச்சு விட்டான். பிறகு கையிலிருந்து இரண்டு சிகரெட்டுகளை எடுத்தான். ஒன்றை நந்ததாஸிடம் கொடுத்தவாறே, "இன்று வண்டியைப் பிடிப்போம் என்ற நம்பிக்கையே எனக்கு இல்லை!" என்றான்.

அப்பொழுதுதான் கடைசி மணி அடித்தது. முதலில் பார்த்த இளம் தம்பதிகளும் தங்கள் பெட்டியிலேயே உட்கார்ந்திருப்பதைக் கவனித்தான் லால் மோகன். "நீங்களும் இந்தப் பெட்டியில் தான் ஏறியிருக்கிறீர்களா?" என்று பேச்சுக் கொடுத்தான்.

"நீங்கள் கூட வந்து விட்டாற் போலிருக்கிறதே!" வாலிபன் இளநகையுடன் கேட்டான். "யாருடன் வந்தீர்கள்?"

"வேறு யாருடன் வருவேன்?"— லால் மோகன் சொன்னான். "என்னுடைய மனைவியுடன்தான்!"

"மனைவியுடனா?"—வாலிபனுக்குத் தலை சுழன்றது பம்பரமாக.

'ஒன்றிக் கட்டையாக உட்கார்ந்து, என் பெட்டி படுக்கைகளை எடுத்து வரக் கொஞ்சம் உதவி செய்கிறீர்களா? உங்கள் மனைவியைத் தனது கிட்டத்து உறவினள் என்று சொல்லிக் கொள்ளச் சொல்கிறீர்களா?' என்று கேட்டவன் அல்லவா? அதற்குள் அவனுக்கு மனைவி எப்படி வந்தாள்? எங்கிருந்து வந்தாள்?' சிந்திக்கச் சிந்திக்கப் புரியாத புதிராக இருந்தது அவனுக்கு.

அவனது மனைவியும் லால் மோகனைக் கூர்ந்து நோக்கினாள். இரகசியத்தை அறிய வேண்டும் என்னும் ஆவல் அவளது உள்ளத்திலும் எழுந்ததோ, என்னவோ? லால்மோகனும் அவளைப் பார்த்தான். அவளும் நல்ல அழகியாகவே இருந்தாள். அவள் நெற்றியிலும் குங்குமப் பொட்டு துல்லியமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

லால்மோகனுக்குப் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டாற் போலிருந்தது. 'சம்பாவும் இதே மாதிரித்தானே பொட்டு வைத்திருந்தாள்! அவளும் இவளை விட அழகில் குறைந்தவளாகத் தோன்றவில்லையே!'

சம்பாவின் முகம் லால்மோகனின் மனத்திரையிலே எழுந்தது. புதுப் புடவையும், வாய் சிவக்க வெற்றிலையும், நெற்றியில் பளிச்சென்ற குங்குமப் பொட்டும் மட்டுமல்ல; சுங்க அதிகாரியிடம் அவள் சாதுரியமாகப் பேசியதும் அவனுக்கு நினைவுக்கு வந்தது. சம்பாவின் நினைவே அவனது மனத்தை நிறைத்து விட்டது.

"...நான் ஒன்றும் தவறாகக் கேட்கவில்லை. ஆனால் உங்கள் மனைவியை..." என்று இழுத்தான் வாலிபன்.

ஆனால் லால்மோகனின் செவியில் எதுவும் ஏறவில்லை. அந்தப் புதிய நினைவு அவன் மனத்தை ஆட்டி உலுக்கி நிலைகலங்க வைத்து விட்டது. தன் பொருள்களைப் பத்திரமாக எடுத்துச் செல்வதற்காக அவன் ஒரு தந்திரம் கையாண்டானே, அது தேளாகக் கொட்டி அவனுக்குப் பெருந் தொந்தரவு கொடுக்கத் தொடங்கி விட்டது. பெண்ணைக் கொண்டு பேய் விளையாட்டா?—இப்படி எண்ணியவனுக்கு எதையோ பறி கொடுத்து விட்டாற் போலத் தோன்றியது.

சம்பாவின் கம்பீரமான எழிலுருவமும் முகமும் அவன் கண்களெதிரே நடனமாடத் தொடங்கின. கணநேரம் அவன் கொண்டிருந்த பொய் உறவு அழியாத மெய் உறவாக ஆகமுடியாதா? அல்லது ஆகத்தான் கூடாதா?

அவன் வெளியே எட்டிப் பார்த்தான். தூரத்தில் பிளாட்பாரத்தின் கோடி வரையில் கண்ணோட்டம் விட்டான். என்ஜின் புகையைக் கக்கிக் கொண்டிருந்தது. ஒரு பெருங் கரித் துண்டு அவன் கண்களில் விழுந்தது. கண்களைக் கசக்கினான். அவன் கண்களைச் சரி செய்து கொண்டு பார்ப்பதற்குள்ளாக வண்டியின் வேகம் அதிகரித்து விட்டது.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam



V. 96-50 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

பத்மினியின் தேக காந்தியோடு

நீங்களும் மிளிரலாம்!



பாரத் ப்ரொடக்ஷன்ஸ்
'விக்ரமாதித்தன்' படத்தின்
அழகு நட்சத்திரம் பத்மினி



பத்மினி தலைசிறந்த நாட்டிய நடிகையாகப் பிரகாசிப்பது அவரது கலைத் திறனால் மட்டுமல்ல, அழகினால் கூடத்தான். பத்மினி போன்ற சினிமா அழகிகளுக்கு எப்படியோ அதே போல உங்களுக்கும் மாசற்ற மேனியே மகத்தான செல்வம். பேரழகி பத்மினி தந்துதவும் குறிப்பு இதோ: "மேனியழகிற்காக நான் உபயோகிக்கும் தூய, வெண்மையான லக்ஸ் டாய்லெட் சோப்பின் மென்மையே மென்மை!" லக்ஸ் சோப்பின் மிருதுவான நுரையிலும், கொள்ளை கொள்ளும் நறுமணத்திலும் இன்பம் காண்கிறார் பத்மினி. நீங்களும் அவ்விதமே இன்புறலாம் — இன்றே லக்ஸ் சோப் உபயோகித்துப் பாருங்கள்!

தூய, வெண்மையான **லக்ஸ் டாய்லெட் சோப்**

சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

LTS. 565-50 TM